


# அருள்மிகு
# அருணாச்சலேஸ்வரர் ஆலய
# மஹா கும்பாபிஷேக
# சிறப்பு மலர்




தரமான தங்கத்துக்கு லண்டனில் நாடவேண்டிய ஒரே இடம்

லட்சுமி ஜுவலர்ஸ்

276 High Street North London E12 6SA UK

Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448

எங்களுக்கு வேறெங்கும் கிளைகள் இல்லை



# அருள்மிகு
# அருணாச்சலேஸ்வரர் ஆலய
# மஹா கும்பாபிஷேக
# சிறப்பு மலர்



## முகவுரை

நெதர்லாந்தில் வாழும் புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் இந்து கலாச்சார மன்றத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த அனைத்து மக்களும் இங்கு அருணாச்சலேஸ்வரர் ஆலயம் அமைக்க உதவி புரிந்தமைக்கு மிக்க நன்றி தெரிவிக்க வேண்டியவராக இருக்கின்றேன்.

இந்த ஆலயத்தை அமைக்க அனுமதி அளித்த நெதர்லாந்து பேவர்வைக் நகர பிதாவிற்கு முதல் (Koster) நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம்.

இந்த அளப்பெரிய பொறுப்புகளையும் சுமந்த எம்மக்களின் ஒற்றுமையை எண்ணி இறும்பூதடைகின்றோம் (பெருமையடைகின்றோம்).

ஆலயத்தின் கட்டிட சிற்பவேலைகளை பொறுப்பேற்று லண்டனில் வசித்துவரும் திரு. ஜெயகாந்தன் எடுத்த பெருமுயற்சியும் ஆண்டவன் அருள் அருளறிந்த ஆசிர்வாதம் என்றே எமக்குத் தோன்றுகிறது.

''எள்ளள நற்றாய் இறையலன்
படைத்தனன் தன்னை நன்றாய் தமிழ்
செய்யுமாறே'' என திருமூலர் பாடினார்.

''நம்மை நன்றாய் இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாய் தமிழ் செய்யுமாறே''
என நாம் பன்மையில் கூறிட விரும்புகின்றோம்.

மாசி மாதம் 1ம் திகதி 2015 ஆண்டு நம் அருணாச்சலேஸ்வரர் ஆலயத்தின் கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

கும்பாபிஷேக கிரியைககளை செம்மையுற செய்து வரும் சிவாகம சிரோரத்னா சிவஸ்ரீ. ஈசான S. நல்ல சேனாபதி சிவாச்சாரியார் குருக்களுக்கு அன்பார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

இந்நூலினை நூலாக்கம் செய்து வெளியிட்ட திருமதி கமலா தேவி வடிவேல் ஆசிரியருக்கும் அதில் பொருள் நிறைந்த செய்திகளை வெளியிட்ட அன்பர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

தலைவர் கனகரட்ணம் மகிந்தன்
ஆலய பரிபாலன சபை



## ஆலயவரலாறு

**ஸ்ரீ** அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் அடியார்களிற்கும், ஹொலண்ட் நாட்டில் பேவர்வைக் நகரில் எம் ஆலயம் அமைய நீங்கள் கொடுத்த ஆதரவிற்கு மிக்க நன்றி

இவ்வாலய உருவாக்கதிற்கு காரணமாய் அமைந்தது என் உள்ளார்ந்த ஆன்மீகத் தேடலே ஆகும், அதைத் தவிர என் கடந்த கால அனுபவங்களில் இருந்து உள்ளத்திற்கு அமைதி கொடுக்கும் ஒரே இடம் ஆலயம் என்பதை அறிந்து கொண்டேன்.

ஆகவே என்னை மட்டும் சிந்தியாமல் என்போன்று ஆன்மீகத் தேடலும், மன அமைதியும் தேடும் அனைவரையும் கருத்திற் கொண்டு 2012. 11. 20 அன்று இங்குள்ள மாநகர சபை உறுப்பனரை சந்தித்து அவரிடம் அனைத்து விபரங்களும் அடங்கிய மடல் ஒன்றைக் கையளித்தேன். எனது வேண்டுகோளின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்டு அவர் என்னுடன் இணைந்து ஆலய ஸ்தலத்திற்காக தேடுதல் மேற்கொண்டார். இதனடிப்படையில் என் மனதிற்கு சந்துஷ்டி அளிக்கும் வகையில் அடுத்த சந்திப்பிற்கு புரட்டாதி மாதம் நேரம் ஒதுக்கியிருந்தார்.

இந்த சந்திப்பில் எம்பிரான் திருவளால் எமக்காக இந்த இடம் ஒதுக்கப்படுவது தெரிய வந்தது. இந்தச் சந்தர்பத்தில் இத் திருப்பணியை முன்னெடுப்பதில் என்னோடு தோள் கொடுத்து முழுமூச்சாய் இயங்கியவர்களான Mr. Ajanth, Mr. Ananthan, Mr. Ramdeen, Mrs. Mizke, Mrs. Agnes, Mr. Sithambarapillai, Mrs. Vadivelu & Late Mr. Thambu ஆகியோரைக் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

இந்த இடம் ஒதுக்கப்பட்ட பின் ஆலய அமைப்பை முன்னேடுத்த போது தெய்வமாகி விட்ட என் தந்தையின் ஆசிர்வாதம் எனக்கு முற்று முழுதாய்க் கிடைத்ததை உணர்ந்தேன். எனது நண்பர்கள், உறவினர்கள் குடும்பத்தவர்கள் அனைவரும் தாமாகவே முன்வந்து இத்திருப்பணியில் தம்மை ஈடுப்படுத்திக் கொண்டனர். அதிலும் பேவர்வைக் மக்களின் ஈடுபாடு என் மனதில் பெரும் நம்பிக்கையை விதைத்தது.

மிகக் குறுகிய காலத்தில் இறைவனருளால் இத்திருப்பணி முற்றுப் பெற்று இன்று கும்பாபிஷேகம் என்ற நிலைக்கு எம்மாலயம் வந்துள்ளது.

இத்திருப்பணியில் ஈடுப்பட்டவர்களின் ஆரம்பம் முதலே தன்னை முழுமையாக அர்ப்பணித்து ஈடுபட்டவர்களின் திரு. வடிவேலு, திரு.பா. ராஜசிங்கம், திரு. செல்வராஜா ஆகியோரை இந்த இடத்தில் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

இவ்வாறாக எல்லோரினதும் ஆன்ம ஈடேற்றத்திற்காக அமையப் பெற்றுள்ள ஆலயத்தில் எம்பிரான் அமர்ந்து அருள்பாலிப்பாராக!!!!

எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!!!

திருமதி. கலாமதி கந்தையா மகிந்தன்
உப தலைவர், ஆலய ஸ்தாபகர்
ஆலய பரிபாலன சபை




## காணிக்கை

சைவமும் தமிழும் சிவனும் சக்தியும் போன்றவை. சைவம் இன்றி தமிழ் இல்லை, தமிழ் இன்றி சைவம் இல்லை என்பதற்கிணங்க எமது சைவ மக்கள் பரந்து வாழும் இடமெல்லாம் வழிபாட்டிடங்களை அமைத்து சைவமும் தமிழும் வளர்த்து வருவது பெருமைக்குரியது ஒன்றே. அவ்வகையில் கொலண் நாட்டின் வடபகுதியில் அமைந்துள்ள பேவர்வைக் நகரத்தில் நமது முழுமுதற் கடவுளான சிவபெருமானுக்கு ஆலயம் அமைத்து சிவாகம முறைப்படி மரபு தவறாமல் நித்திய நைமித்தியங்கள் நடப்பதும் அவனருளே. எமது பிரதேசத்தில் ஓர் ஆலயம் அவசியம் என்பதை உணர்ந்து தனது விடாமுயற்சியால் இங்கு ஆலயம் அமையக் காரணமாக இருந்த திருமதி. கலாமதி மகிந்தன் அவர்களும் குறுகிய காலத்தில் ஆகம முறைப்படி ஆலயம் நிறைவு பெறுவதற்கு தனது கடின உழைப்பினை வழங்கிய திரு. வடிவேல் இலட்சுமணன் அவர்களும் பாராட்டுக்குரியவர்கள்.

குடமுழக்கு விழாவின் சிறப்பம்சமாக இம்மலரை உருவாக்கும் பணியை அடியேனிடம் தரப்பட்டதும் எம் பெருமான் அருணாச்சலேஸ்வரரின் திருவுளக் குறிப்பேயாகும்.

மணங்கமழும் மலராகப் படைப்பதற்கு ஆசி நல்கிய சிவாச்சாரியார்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் போன்ற சகலருக்கும் எனது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இம் மலரினை இலவசமாக அச்சு பிரதி செய்து தந்த ''சைவ நீதி'' பதிப்பாசிரியர் மதிப்பிற்குரிய திரு. நா. சிவானந்தசோதி அவர்களுக்கும் உண்ணாமுலையார் உடனமர் அண்ணாமலையார் அருள்பெற்று நீடுழி வாழ்க என வாழ்த்தி எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் இம் மலரினை பார்வைக்கும் வாசிப்பிற்கும் இடமாக்கி நினைவுப் பொக்கிசமாக விளங்க வேண்டும் என்று வேண்டி இம்மலரை நிறைவு செய்ய அன்புக் கருணை கூர்ந்த எம் பெருமான் அருணாச்சலேஸ்வரர் பாதார விந்தங்களில் காணிக்கையாக சமர்ப்பிக்கின்றேன்.

உதவி செயலாளர்
**திருமதி. கமலாதேவி வடிவேல்**
ஆலய பரிபாலன சபை
மலர் ஆசிரியர்



''பிரமன் அரியன் றிருவரும்தம் பேதைமையால்
பரமம் யாம்பரம் என்றவர்கள் பதைப்பொடுங்க
அரனார் அடிலுருவாய் அங்கே அளவிறந்து
பரமாகி நின்றவா தோணோக்கம் ஆடாமோ''

என்று திருவாசகத்தில் மணிவாசகப்பெருமான் அருளிப்பாடிய திருமாலுக்கும் பிரம்மனுக்கும் தான் என்ற அகந்தையை நீக்கிட அடிமுடி காணாமல் ஜோதிப் பிழம்பாய் நின்ற ஸ்தலம் திருவண்ணாமலை. நினைக்க முக்தி தரும் மலை திருவண்ணாமலை, அன்னை உமாதேவியார் தவமியற்றி எம்பெருமானுடைய இடப்பாகம் பெற்றமலை திருவண்ணாமலை. முதலாவது லிங்கவடிவமாக பிரகாசித்துக் கொண்டிருப்பதும் இறைவன் ஒளி வடிவமானவன் என்பதை மெய்பித்த திருத்தலமே திருவண்ணாமலை.

திருவாரூரில் பிறக்கவேண்டும், காசியிலே இறக்கவேண்டும், தில்லையில் தரிசனம் செய்யவேண்டும், ஆனால் ''அருணாச்சலேஸ்வரர்''என்று நினைத்தாலே முக்தி தரக்கூடிய தலம் திருவண்ணாமலை. நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் பஞ்சபூதங்களால் ஆனது இவ்வுலகம். இயற்கையாகிய பஞ்ச பூதங்களையே ஆதிகாலத்தில் வழிபட்டு வந்தார்கள் நம் மக்கள். அதுவே பஞ்சபூத ஸ்தலங்களாகவும் மலர்ந்தன. காஞ்சிபுரத்தில் கம்பா நதிக்கரையில் முப்பத்திரண்டு அறம் வளர்த்த அம்மை காமாட்சி ஸ்தாபித்த மணல் லிங்கம் (ஏகாம்பரேஸ்வரர்) நிலத்திற்கும், திருவானைக்காவில் அன்னை அகிலாண்டேஸ்வரி ஸ்தாபித்த லிங்கத்திற்கு யானை மற்றும் சிலந்தி பூஜை செய்து முக்தி அடைந்ததே (ஜம்புகேஸ்வரர்) நீர்லிங்கமாகும். திருக்காளத்தியில் ராகு கேது ஆகிய இருவரும் பூஜித்து தேவர்களாக வடிவெடுத்த சஹஸ்ரலிங்கமே (காளஹஸ்தீஸ்வரர் வாயுலிங்கமாகவும், சிதம்பரத்தில் ஆகாசலிங்கமாக (சிதம்பரேஸ்வரர்) நடராசப் பெருமானை மக்கள் வழிபட்டு வந்தனர். இதில் நடுநாயகமாக நெருப்பு ஸ்தலமாக விளங்ககூடியது திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் ஆகும்.

இத்தகைய பெருமைகளை உள்ளடக்கிய அருள்மிகு உண்ணாமுலை நாயகி உடனாகிய அருள்மிகு அண்ணாமலயாரும் ''தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி'' என்ற வாக்கிற்கிணங்க நமது நெதர்லாந்து தேசத்தில் Beverwijk மாநகரத்தில் ஆலயம் அமைத்து பொருளாகவும், நிதியாகவும், உடலாலும், உள்ளத்தாலும் அனைத்து பணிகளையும் செய்து கொண்டிருக்கும் அனைத்து அடியார்களுக்கும் எல்லாம் வல்ல அருள்மிகு ஸ்ரீ அபிதகுஜம்பாள் சமேத அருள்மிகு ஸ்ரீ அருணாச்சலேஸ்லர பெருமானின் திருவருளும், வேண்டுவன தரவல்ல அருள்மிகு ஸ்ரீ வரதராஜ செல்வ விநாயகப பெருமானின் தனிப்பெருங்கருணையும் ஞானவள்ளல் அருள்மிகு ஞானதண்டாயுதபாணி சுவாமியின் திருவருள் கிடைக்கவேண்டி பிரார்த்திக்கிறோம்

ஆசியுடன்

''சிவாகம சிரோரத்னா''

**சிவஸ்ரீ ஈசான. சு. நல்லசேனாபதி சிவாச்சாரியார்**

ஆலய பிரதமகுரு ஸ்ரீ வரதராஜ செல்வவிநாயகர் ஆலயம்
ஸ்தானிகம். அருள்மிகு ஸ்ரீ தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில்
பழனி இந்தியா

''அண்ணாமலை என் அண்ணா போற்றி''
''கண்ணாரமுத கடலே போற்றி'



உ

சிவமயம்

உனக்கு பணி செய்ய உன்தனை எந்நாளும்
நினைக்க வரம் எனக்கு நீ தா!
மனக்கவலை நீக்குகின்ற தென்மதுரை நின்மலனே
எவ்வுலகும் ஆக்குகின்ற சொக்கநாதா.

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என பஞ்சக்ருதங்கள் செய்யக்கூடியவர் சிவபெருமான். அவ்வண்ணமே நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், ஆகிய பஞ்சபூதங்களை இயக்குபவரும், அதன் வடிவமாகவும் பரமேச்வரன் விளங்குகிறார்.

நிலத்தின் தலமான காஞ்சிபுரத்தில் ப்ரித்வி லிங்கமாகவும் (மண்), நீரின் தலமான திருவானைக்காவில் அப்பு லிங்கமாகவும் (நீர்), நெருப்பின் தலமான திருவண்ணாமலையில் அக்னி லிங்கமாகவும், காற்றின் தலமான காளகஸ்தியில் வாயுலிங்கமாகவும், ஆகாயத்தலமான சிதம்பரத்தில் ஆகாசலிங்கமாகவும் பெருமான் அருணாச்சலேச்வரர் ஆவார். அவனருளாலே அவன்தாள் வணங்கி என்ற வாக்கிற்கிணங்க நமது நெதர்லாந்து தேசத்தில் Beverwijk நகரில் அழகானதொரு ஆலயம் அமைத்து அங்கே உண்ணாமுலைநாயகி உடனமர் அண்ணாமலையாரை ப்ரதிஷ்டை செய்து மஹாகும்பாபிஷேகமானது தைமாதம் 18 -ம் தேதி (01-02-2015) அன்று நடைபெறுவதை எண்ணி பெருமகிழ்ச்சியடைகிறோம்.

புல்லினால் வருடம் கோடி புது மண்ணால் பத்து கோடி
செல்லுமாம் ஞாலம் தன்னில் செங்கலால் நூறு கோடி
அல்லியங்கவ் கோதை பாகன் ஆலய மடாலயங்கள்
கல்லினால் இயற்றினோர் கயிலை விட்டகெலாறன்றே

என்ற பாடலிற்கிணங்க இந்த உன்னதமான ஆலயம் அமைக்க பொருளால், மனத்தால், வாக்கினால், உடலால் உதவிய அனைத்து அடியார்களுக்கும் எல்லாம் வல்ல உமையொருபாகன் திருவருள் கிடைக்க ப்ரார்த்திக்கின்றோம்.

அன்புடன்
''சிவாகம்பாஸ்கரா'' சிவஸ்ரீ. பிரபு பரமேஸ்வர குருக்கள்
ஆலயகுரு, ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம்
டென்ஹெல்டர் , நெதர்லாந்து



உ

ஸ்ரீ குருப்யோ நம:

கந்தன் பாதம் கனவிலும் துணை செய்யும்

சிவாகம சிரோமணி, சிவாகம கலாநிதி

**சிவஸ்ரீ S.K. ராஜா பட்டர் (எ) சந்த்ரசேகர பட்டர்**

ஸ்தானீகர், அருள்மிகு ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம்

அர்ச்சகர், அருள்மிகு மீனாக்ஷி - ஸுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை

முதல்வர், ஸ்ரீ ஸ்கந்தகுரு வித்யாலயம், திருப்பரங்குன்றம்.

உ

ஸ்ரீகுருப்யோ நம:

## அருள்வாழ்த்துரை

*''உண்ணாமுலை உடையாளொடும் உடன் ஆகிய ஒருவன்*
*பெண்ணாகிய பெருமான் மலை திருமாமணி திகழ*
*மண்ணார்ந்தன அருவித்திரள் மழலை முழவு அதிரும்*
*அண்ணாமலை தொழுவார் வினை வழுவா வண்ணம் அறுமே''*

*எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் வருகின்ற ஸ்ரீஜய வருஷம் தைமாதம் 18ஆம் நாள் (01-02-2015) ஞாயிற்றுக்கிழமை அன்று, நெதர்லாந்து நாட்டின், ------------- மாநகரத்தில் எழுந்து அருள்பாலிக்கும் அருள்மிகு உண்ணாமுலைநாயகி உடனமர் ஸ்ரீ அருணாசலேச்வரர் திருக்கோயில் அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகப் பெருவிழா நடைபெற இருப்பது குறித்து மிக்க மகிழ்ச்சி.*

*அங்கிங்கெனாதபடி எங்கும் ப்ரகாசமாய் ஆனந்தபூர்த்தியாக அருளோடு நிறைந்து விளங்குகின்ற பரம்பொருள், ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றுமில்லா பழம்பொருள், அடியார்களாகிய நம்பொருட்டு பல்வேறு வடிவங்களை எடுத்து அருள்புரிகின்றான்.*

*அவ்விறைவனை பஞ்சபூதங்களுக்குத் தலைவனாகவும், அஷ்டமூர்த்தியாகவும் வழிபடுவது நமது சமயத்திற்கான அருஞ்சிறப்பாகும். அவ்வகையில் பஞ்சபூதங்களுள் மூன்றாவதாகத் திகழ்வது அக்னி. அவ்வக்னிக்குத் தலைவராகப் போற்றப்படுகின்ற இறைவன் சிவபெருமான் திருவண்ணாமலையில் பேரொளிப்பிழம்பாகக் காட்சி தருகின்றான். அந்த திருநாமத்தைக்கொண்டு ஆலயம் அமைக்கப் பட்டுள்ளது பெரும் சிறப்பு.*

*மஹாகும்பாபிஷேக விழா சிறப்பாக நடைபெறவும், மலர் வெளியீடு சிறக்கவும், திருப்பரங்கிரிதனில் கோயில் கொண்டருளும் தெய்வானை மணாளன் முருகப்பெருமானின் சரணாரவிந்தங்களையும், மதுரையில் வீற்றிருந்து அருளாட்சிபுரியும் மீனாக்ஷி அம்பிகை உடனமர் சொக்கநாதப் பெருமானின் திருவருளையும் போற்றிப் பணிந்து ப்ரார்த்திக்கின்றோம்.*

பேரன்புடன்

சிவஸ்ரீ K. ராஜாபட்டர்

திருப்பரங்குன்றம்

வாழ்க வையகம்



வாழ்க வளமுடன்

அன்பர்களே,

*அருவாய் உருவாய் அறிவாய் எங்கும் நீக்கமற நிறைந்து அனைத்து உயிர்கள்ளுக்குள்ளும் இன்ப ஊற்றாய் நிறைந்த இறை நிலையை வாழ்த்தி வணங்குவோம்.*

மனிதகுலம் தோன்றிய நாள் தொட்டு தேடலுக்கான விதையும் விதைக்கப்பட்டது. உணவிற்கான தேடலில் துவங்கிய நொடியிலேயே இறைநிலைக்கான தேடலும் பிறந்தது. ஒவ்வொரு சமூகத்திடை இந்த வாழ்கைக்கான அடிப்படை தேவைகள் ஓரளவுக்கு நிறைவை பெற்ற நிலையில் இறைநிலை நோக்கிய தேடல் மேலோங்கி விடுகின்றது. இத் தேடல்களுக்கு நிறைவு செய்யும் விதமாய் பல கால கட்டங்களில் பல அற நிலையங்கள் தோன்றி மக்களுக்கு தொண்டாற்றி வந்துள்ளன. வேதாத்திரி மகரிஷி அவர்களின் மனவளகலையும் மனித சமுதாயத்திற்கு இந்த விளக்கங்களையும் பயிற்சினையும் அளித்து வருகிறது.

இத்தகைய இறைநிலை தேடலும் நெதெர்லாந்து தமிழ் சமூகத்திடை தோன்றி அதை நிறைவு செய்யும் விதமாய் பல அற நிலையங்கள் தொண்டாற்றி வருகின்றன. அவ்வழியில் இப்பொழுது Bevewijk நகரத்தில் ஸ்ரீ அருணச்சலேஸ்வர் ஆலயம் உதயமாகி இருப்பது உவகை அளிக்கிறது. மகரிஷி அவர்கள் குறிப்பிடுகையில், எந்த ஆதி நிலையிலிருந்து எல்லாம் பரிமளித்ததோ அதை பூரணம் என்றும், அனைத்து பாகுபாட்டிற்கு அப்பாற்பட்டதாய் விவரிப்பார். Beverwijk நகரத்தில் அமையவிற்கும் இத்தளம் பூரணத்தின் உருவாய், மொழி, சமய பேதங்களுக்கு அப்பாற்பட்டு மனிதகுல நன்மைக்காய் செயல்பட வேண்டும்.

இத்தளம் உருவாக காரணமான அனைத்து நல்ல உள்ளங்ககளுக்கும், சிறப்பாய் செயல்பட, மகரிஷி அவர்களின் எண்ணத்தில் நின்று SKY Netherlands அறக்கட்டளை சார்பில் வாழ்த்துகிறோம்.

குரு வாழ்க

குருவே துணை



N.Sagarajah
President



P. Ilanchezhian
International correspondant

அறக்கட்டளை
SKY Netherland
Ruysdaelkade 34,
1816 BW Alkmaar
The Netherlands

Post address:
SKY Netherland
Kloostertuin 17,
3994 ZJ Houten
The Netherlands




**B. Vasantha Gurukkal BA (Hons)**

சைவப்புலவர். சைவசித்தாந்த பண்டிதர்

**சிவஸ்ரீ பா. வசந்தக் குருக்கள்**

கற்பகபதி ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில்

18 Chingford Road, Walthamstow, London, E17 4PJ. Home: 02085233802

Temple: 02085273819 Mob: 07903707878 Email: Vasanthan@live.co.uk




சைவசமய அருள் அலைகள் இன்று உலகம் முழுவதும் பரந்துவருகிறது. எல்லா உலகமும் ஆனாய் நீயே என்று நாயன்மார்கள் பாடிய வாக்கு பலன் அளித்துள்ளது. ஐந்து கண்டங்களிலும் அரன் நாமம் சூழ்ந்துள்ளது, சைவமும் தமிழும் சேர்ந்து வரும் நம் மரபும் பண்பாடும் பழுதடையாமல் பாதுகாக்கும் அறநிலையங்களாக ஆலயங்கள் அமைகின்றன. ஆலயங்களின் அமைப்பும் அங்கு பேணப்படும் வழிபாடுகள் விரதங்கள் எல்லாம் உடலுக்கும் உள்ளத்திற்கும் நன்மை தருபவை. விரிந்திருக்கும் இறையருளை குவித்து தருபவை திருக்கோவில்கள்எனலாம். எவ்வளவுதான் கல்வி, செல்வம் இருந்தாலும் மன நிம்மதி இல்லை என்றால் ஒரு பிரஜோசனமும் இல்லை. தெய்வத்தின் சன்னிதியே மனதிற்கு நிம்மதி. இறைவழிபாடு நமது துன்பங்களைக் களைந்து ஆன்மீக இன்பத்தை தருகிறது. தொல்லையும் அல்லலும் நம்மை தொடர்ந்து கொண்டே வருகிறது. இதற்கு மருந்து திருவருள்தான். தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு அல்லால் மனக்கவலை மாற்றல் அரிது என்றும் நாம் பூவுலகில் நீடு வாழ இறைவன் அடியை தொழவேண்டும் என்பதை மலர்மிசை ஏகினான் மாணடிசேர்ந்தார் நிலமிசை நீடு வாழ்வார் என்றும் வள்ளுவர் வாய் மொழிந்தார்.

புலம் பெயர்ந்து நாம் வாழ்ந்தாலும் எமது புலன் பெயராமல் இருக்க உதவுவது இறை வழிபாடே ஆகும். மலங்கப் புலனைந்தும் வஞ்சனையை செய்ய என மணிவாசகரும் கூறினார். மேலை நாடுகளில் பல்வேறு கலாசார சூழலில் வாழும் எம் குழந்தைகள் நல்வழியில் நடக்க கோவில்களும் காரணமாகின்றன, பல்வேறுவிதமான இசை நடனக் கலைகள் ஆலய வழிபாட்டில் உண்டு. நமது குழந்தைகள் இவ்வாறான இசை நடன கலைகளோடு ஆலயங்களில் இணைக்கப்படுகிறார்கள் ஈர்க்கப்படுகிறார்கள்.

சரியை கிரியை யோகம் ஞானம் ஆகிய நான்கு நிலைகளில் ஆலய வழிபாடு சரியைக்கும் கிரியைக்கும் இடமாக அமைகின்றது.இந்நிலைகளில் நன்கு பக்குவப்பட்டவர்கள் யோக ஞான நிலைக்கு செல்வார்கள் என்பதால் ஆலய வழிபாடு எம்போன்ற ஆரம்ப ஆன்மாக்களுக்கு அவசியமானது. யோகிகள் ஞானிகள் சித்தர்கள் போன்றவர்களுக்கு ஆலயங்கள் அவசியமில்லை.

இந்த வகையில் நெதர்லாந்து நாட்டில் பல ஆலயங்கள் அமைந்துள்ளது. சிறப்பாக ஒரு சிவனாலயம் மிளிர்வது சைவ சமயத்தின் நல்ல எழுச்சியாகும். நெதர்லாந்தின் வடபகுதியில் பெவர்வைக் நகரத்தில் அமைந்திருக்கும் (உண்ணாமுலை அம்மை உடனுறை அண்ணாமலைப் பெருமான்) அபீத குசாம்பாள் சமேத அருணாச்சலேஸ்வர சுவாமி அருளாட்சி வழங்கும் கைலாயமாக காட்சி தர வேண்டும். பொதுவாகவே வடக்குப் பகுதி கைலாய மலைப்பகுதி என்பார்கள்.

நாடும் நகரமும் நற்றிருக் கோவிலும் தேடித் திருந்து சிவனென்று பாடுமின் என்றார் திருமூலர் ஒவ்வொரு நாட்டிலும் சிவனாலயம் அமைந்திருப்பது போல் நெதர்லாந்து நாட்டிலும் சிவ வழிபாடு வருவது இறை அருளாணையாகும். ஆலய அமைப்பு அங்கு ஸ்தாபிக்கப்படும் திருவுருவங்கள் அதன் பிரமாணங்கள் எல்லாம் ஆகம சிற்ப நூல்களின் வழியில் அமைகிறது. அதனால் கும்பாபிசேகமும் அதன் கிரியைகளும் ஆகம முறைப்படி நிகழ வேண்டும் என அன்பர்கள் ஆலய நிர்வாகங்கள் முயற்சி எடுக்கின்றனர். இறைவனால் அருளப்பட்ட வேதங்கள் ரிஷிகள் முனிவர்களால் உலகின் நன்மையின் பொருட்டு தரப்பட்டன. அவற்றை ஆலய வழிபாடுகளில் ஆவதன் மூலம் இறை சாந்நித்யம் அதிகரிக்கின்றது. வேதமொடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல் என்பது திருமந்திரம்.

வேதங்கள் மந்திரமாகவும் ஆகமங்கள் செயல்களாகவும் ஆலயங்களில் போற்றப்படுகின்றன. ஆலயகிரியைகள் பற்றி காரணம், காமிகம் போன்ற ஆகமங்கள் சிறப்பாக கூறுகின்றன அதன்படி கும்பாபிசேக கிரியைகள் செய்வது இறைவனுடைய வாக்கினை நாம் கேட்கிறோம் என்பதாகும். அத்துடன் இறைவனருளால் எமக்கு கிடைத்த திருமுறைகள் அருட்பாடல்கள் ஓதப்படவேண்டும். அவற்றின் மூலமும் இறை அருள் அதிகரிக்கின்றது. பல்வேறு உலகியல் வாழ்வில் நாம் பல செலவுகளை செய்கிறோம் ஆன்மீக நன்மைக்கும் அடுத்த சந்ததிக்கும் நாம் சேர்க்கும் சொத்து ஆலய வழிபாட்டிற்கு செலவு செய்யும் தர்ம வழியே ஆகும். ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்று அவ்வையாரும் இதனையே கூறினார்.

புதிதாக அமையும் இவ்வாலயம் சிறப்புற அமைவதற்கு காரணமாகிய ஆலய நிர்வாகிகள் அந்தணப் பெருமக்கள் சிற்ப கலைஞர்கள் நிதி பொருள் சரீர உதவி புரிந்த அன்பர்கள் அனைவருக்கும் அருணாசலப் பெருமான் நல்ல ஆரோக்கியத்தையும் ஆயுளையும் தர வேண்டும் என அரன் அடி போற்றி கும்பாபிசேகம் சிறப்புற ஆசி வழங்குவதோடு ஆலயம் பல்வேறு விரத விழாக்கோலம் கொண்டு நிறையருளோடு நிலைத்திருக்க வேண்டுகிறோம்.

அருணாசல அரனடிபோற்றி வருந்துயர் போக்குவோம்.

# வாழ்த்துச் செய்தி

## அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் ஆலயம்

கொலண்ட்

கோயில்கள் அனைத்தும் ஆகம சாத்திரங்களின் அடிப்படையிலேயே அமைக்கப்பட வேண்டும். அப்படியாக Beverwijk ல்அமைக்கப்பட்ட ஆலயம் அமைகிறது. அனைவரும் வந்து வழிபட்டு தங்கள் குறைகளைத் தீர்த்து அருளைப் பெற வேண்டும். ஈஸ்வரனிடமிருந்து நேரடியாகப் பெறப்பட்ட ஆகமங்கள் சப்தப்ரமணமாகும். அதன்படி சுவிஸ்ஸர்லாந்த்து சூரிஸ் சிவன் ஆலயத்திலிருந்து வீற்றிருக்கும் அம்பாள் உடனுறை பரமேஸ்வரன் பெருமானிடம் இருந்து பெறப்பட்ட சப்தப்ரமணமாகும். இது அவபோத ஞானத்திற்கு வழி வகுக்கும்.இதனாலேயே சிவாலயங்கள் மந்தரம் தந்தரம் சித்தாந்தம் எனும் மூன்றையும் இதை சொல்பவை ஆகமங்கள். சரியை யோகம் ஞானம் எனும் நான்கு பாத உள்ளடக்கியவை. ஸ்வார்த்த பராத்த பூஜா இரண்டிற்குமான திக்ஷைகளும் விதிக்கின்றன. பெரும்பாலான கோயில்களில் காமிகாகமத்தைப் பின்பற்றியே வழிபாடுகளும் உற்ஸவங்களும் நடத்தப்படுகின்றன.

**ஆகதம் சில வக்த்ரேப்ய ; கதம்**
**மதம் சசிவ பக்தாநாம் ஆகமம்**

என்ற வசனத்தின்படி ஈஸ்வரனின் மண்டலத்திலிருந்து தோன்றியது (ஆகதம்) அம்ப திருச் செவிகளை அடைந்து (கதம்) சிவபக்த மதமாக உலகில் பரவியது. 'ஆ' கதம் 'க' தம் 'ம' தம் என்ற மூன்று சொற்களின் மூலங்களின் சேர்க்கையே ஆகமமாகியது. 'அ' என்பது ஞானத்தையும் 'க' என்பது 'ம' பந்த நீக்கத்தையும் குறிக்கும்.

இத்தகைய ஆலய நிர்வாகத்தினருக்கும், விழாக்கள் உபயதாரர்களுக்கும் நிதி உதவி செய்த பக்த அன்பர்களுக்கும் எல்லாம் வல்ல அந்த ஈஸ்வரன் அருள் கிடைக்க வேண்டுகிறேன். அந்த இறைவனை மனமார வேண்டி ஆசி கூறி வாழ்த்துகின்றேன்.

இங்ஙனம்

சிவாகம் பூஷணம் தேவி அனுக்கிரக திகலம்
ப்ரம்மஸ்ரீ இராம. முரளிதரசர்மா

உ

சிவமயம்

# அருள்மிகு ஸ்ரீ வரதராஜ செல்வவிநாயகர் துணை

## வாழ்த்துச் செய்தி

*''உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்*
*பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ*
*மண்ணார்ந்தன அருவித்திரள் மழலை முழம் அதிர*
*அண்ணாமலை தொழுவார் வினை வழுவாவண்ணம் அறுமே''*

''தென்னாடுடைய சிவனே போற்றி'' என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி'' என்ற வாக்கிற்கிணங்க வடபால் விநாயகப் பெருமானையும், தெற்கே முருகப் பெருமானையும் கொண்டுள்ள நமது நெதர்லாந்து நாட்டின் மத்தியில் சைவ சமய முழுமுதற் கடவுளும், மால், அயன் இருவருக்கும் அடிமுடி காட்டாத கற்பனைக்கும் எட்டாத தனிப்பெரும் சோதியாக விளங்கக் கூடிய எம்பெருமான் உண்ணாமுலை நாயகி உடனுறை அண்ணாமலையாருக்கு பேவர்வைக் (Beverwijk) மாநகரத்தில் ஆலயம் அமையவிருப்பதாக அறிந்தோம். அளவிலா மகிழ்ச்சி அடைந்தோம். ''கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்''; என்ற முதுமொழிக்கேற்ப எமது மக்கள் உலகின் பல பாகங்களில் வாழ்ந்து வந்தாலும் சென்ற இடமெல்லாம் பெரிதாகவோ, சிறிதாகவோ ஆலயம் அமைத்து அதைச் சுற்றியே வாழ்கின்ற வழமையைக் கொண்டிருப்பதுடன் எவ்வளவு சோதனைகள் வந்தாலும் பக்தியின் மேல் அவர்கள் கொண்ட அந்த நம்பிக்கை இன்னும் வாழ்ந்து கொண்டிருப்பதையே காட்டுகிறது.

மேலும் ''திருவாரூரில் பிறந்தார்க்கு எல்லார்க்கும் அடியேன்'' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியது போல் பிறக்க முக்தி தரக்கூடிய திருவாரூர், இறக்க மூக்தி தரக்கூடியது காசி. அதேபோல் ''அருணாச்சலா'' என்று நினைத்தாலே முக்தி தரக்கூடிய திருவண்ணாமலை எம்பெருமானுடைய பெயரில் ஆலயம் அமைத்து திருக் குடமுழுக்கு நிகழ்த்தவிருக்கும் ஆலய நிர்வாக சபையினருக்கும், திருப்பணி செய்து கொண்டிருக்கும் தொண்டர் சபையினருக்கும் எல்லாம் வல்ல எம்பெருமான் அருள்மிகு அருணாசலேஸ்வர பெருமானின் திருவருளும், கருணைக் கடலான அருள்மிகு ஸ்ரீ வரதராஜ செல்வ விநாயகப் பெருமானின் திருவருளும் கிடைக்க பிரார்த்திக்கின்றோம்.

அன்புடன்

ஆலய பரிபாலன சபை
அருள்மிகு ஸ்ரீ வரதராஜ செல்வ விநாயகர் ஆலயம்
நெதர்லாந்து



## சிவன் கொடுத்த அருணாச்சலேஸ்வரர்

''கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்பது ஆன்றோர் வாக்கு. எந்த ஒரு மனிதனுக்கும் இயல்பாக எழக்கூடிய எண்ணம் தனக்குள்ளே கிடைக்கக்கூடிய அமைதியைத் தேடிக்கொள்வது. அந்த அமைதி கிடைக்கக்கூடிய இடம் எங்கே என்பது பலரிடம் கேள்வி குறியாகவே தொக்கி நிற்கின்றது.

ஆதிகால மனிதன் இயற்கையோடு சேர்ந்து வாழ்ந்தான். இயற்கை தான் அவனுக்கு நண்பன் மற்றும் எல்லாமே. இயற்கையை தெய்வமாக வழிபட்டான். அதன் மூலம் தனக்கான அமைதியை, ஆறுதலைத் தேடிக்கொண்டான்.

காலங்கள் கடந்து செல்லச் செல்ல மனித சமுதாயம் பல மாற்றங்களைக் காணத் தொடங்கியது. தனக்கும் அப்பால் ஒரு சக்தி உள்ளது என்பதை மனிதன் உணரத் தொடங்கினான். அந்த சக்தியை பலர் தெய்வ சக்தியாக தங்களுக்குள் உள்வாங்கிக் கொண்டார்கள்.

ஒவ்வொருவரும் உள்வாங்கிக் கொண்ட அல்லது உணர்ந்து கொண்ட அறிவின் அடிப்படையில் பலருக்கும் பலவிதமான கருத்துக்கள் எண்ணங்கள் உருவாகின. இந்த அடிப்படையில் உலகில் பல மதங்கள் உருவாகின என்பது அறிஞர்களின் ஆய்வின் பதில்களாகக் கிடைத்தன.

மனிதன் தனக்குள் உறைந்துள்ள அந்தத் தெய்வ சக்தியை தன்னால் உணரக் காலங்கள் பல எடுத்தன. ஆனால் உடனடிச் சாத்தியமாகத் தென்பட்டது வழிபாட்டிற்கான ஒரு பொது இடத்தின் தேவை. அது பலர் ஒன்றுகூடக்கூடிய பொது இடமாக இருத்தல்.

இந்த வகையில் தான் மனிதன் தன்னுள்ளே உள்ள ஆன்மா லயப்படக்கூடிய இடமாக ஆலயத்தை அமைத்துக்கொண்டான். ஆலயங்களின் தோன்றம் ஆரம்ப காலங்களில் இருந்து அக்கால அறிவியல், பொருளாதார சூழ்நிலைகள் என்பனவற்றின் அடிப்படையில் மாறுபட்டுக்கொண்டே வந்துள்ளன.

இந்துமத வழிபாடு ஏற்கெனவே உலகளாவிய ரீதியில் பல நாடுகளில் வேர் விட்டு விழுது தாங்கி பரந்து வியாபித்திருந்தது என்பதை நாம் அறிவோம். சிறப்பாக ஆசியா போன்ற கீழைத்தேச நாடுகளில் மக்களின் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்து இந்துமதம் வளர்ச்சி பெற்று வருவதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம்.

புலம்பெயர் தமிழர்களாகிய நாங்கள் சொந்த மண்ணில் எமது பூர்வீக சொத்துக்களை, சொந்த பந்தங்களைப் பிரிந்து அல்லது இழந்து வந்தாலும், எம்மோடு ஒட்டிப் பிணைந்து வந்தது எமது சமய கலை கலாச்சாரப் பண்பாடுகளே. தாயகத்தில் எந்த ஒரு வசதி குறைந்த சிறு கிராமமாக இருந்தாலும், அங்கு சைவசமய மக்களுக்கான ஆலயங்கள் இல்லாது இருக்காது. குறைந்த பட்சம் ஒரு வேப்பமரத்தடி, அரசமரத்தடி அல்லது ஆலமரத்தடியில் ஏதோ சூலமோ அல்லது வேலோ தாங்கியபடி ஒரு வழிபாட்டிடம் அமைந்திருக்கும்.

இந்தவகையில் அன்னிய மண்ணில் நாம் கால் பதித்து நின்றாலும், எம்மை விட்டுப் பிரியாது எம்மோடு நிலைத்து நிற்கும் பாரம்பரிய பண்பாடுகள் தொடர்பான உணர்வுகள் அனைவருக்கும் ஒரு உந்துதலைத் தந்த வண்ணமே இருந்தன என்பதில் ஐயமில்லை.

நெதர்லாந்து மண்ணில் ஏற்கெனவே மூன்று நான்கு சைவாலயங்கள் இருந்தாலும் எமது வேபர்வைக் பிரதேசத்தில் ஓர் ஆலயம் ஏன் அமையக்கூடாது என்று எனக்குள் எழுந்த எண்ண

அலைகளின் கதிர்வீச்சு, இங்கு வாழும் பல இந்து மக்களின் எண்ணங்களிலும் தோன்றியமை ஓர் ஆலயம் இங்கு அமைவதற்கு வித்திட்டது. தெய்வ அருளினால் அதற்கென்று ஓரிடமும் அமையப்பெற்றது.

''தெய்வத்தால் ஆகாதது ஒன்றுமில்லை'' என்பார்கள். இந்து சமயத்தின் முழுமுதற் கடவுளாகிய சிவனுக்கே இந்த ஆலயம் அமையவேண்டும் என்பது அந்த இறைசக்தியின் அருள் மட்டுமல்லாது இந்த நற் கைங்கரியத்தில் ஆவல்கொண்டு திருப்பணித் தொண்டாற்றும் அனைவரினதும் உள்ளுணர்வாகும். இந்தச் சிவாலயத்தின் கட்டுமாணப் பணிகளை எப்படிக் கொண்டு செல்லலாம் என்ற நோக்கோடு சுவிற்சிலாந்தின் சூரிஸ் மாநகரில் எழுந்தருளியிருக்கும் சிவன் ஆலயத்திற்குச் சென்று அந்த இறைவனிடம் வேண்டுதல் செய்தோம்.

தெய்வ தரிசனம் வீண்போகவில்லை. அந்த ஆலயத்தின் பிரதானி ஒருவர் மூலமாக, தலைசிறந்த ஆலயகட்டுமானங்கள் சிற்பவேலைகளில் பல்லாண்டு அனுபவமுள்ள ஆசான் ஒருவர் அறிமகமானார். சூரிச் சிவன் தந்தப் பேராசான் ''சிற்பக் கலைமாமணி'' விஸ்வப் பிரம்மஸ்ரீ. சரவணமுத்து ஜெயகாந்தன் அவர்களால் வேபர்வைக் மாநகரில் அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் கோயில் உருவாக்கப்பட்டுள்ளது.

வேண்டியோர்க்கு வேண்டும் வரமளிக்கும் தெய்வமாகக் காட்சியளிக்கும் வேபர்வைக் அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் ஆலய பங்க குண்ட பட்ச நூதன ஆலய அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் காணும் அந்த நாள் காட்சியைக் காணக் கண் ஆயிரம் வேண்டும்.

''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''

சிவதொண்டன் இலட்சுமணன் வடிவேல்
பொருளாளர், ஆலய பரிபாலன சபை

---

## தமிழ் தாய் வாழ்த்து

செந்தமிழும் சேர்கலையும் பந்தமுறும் பண்பாடும்
சொந்தநம் சைவநீதி சுமந்த நற்பணிகளும்
வந்தவள நாடாம் வகையான நெதர்லாந்தின்
முந்து வடபால் பேவர்வைக் மகிழ் நகரில்
அந்தமில் அருள்பொழி அருணாச்சல அரனுடன்
சுந்தர அபீதகுச அம்பிகை அடிபோற்றி

வேதமொடு ஆகமமும் விளங்கு உபநிடதமும்
நாதமொடு கீதமும் நல்லருள் திருமுறைகளும்
மேதகு கலைகளும் மேன்மை பெற்றிடவே
சீதகடல்சூழ் சிறப்பு பேவர்வைக் நகரில்நாம்
பேதமற வாழ்ந்து பேரருள் பெற மாதமெலாம்
ஆதரிக்கும் அண்ணாமலையான் பாதம் போற்றி

சரியையொடு கிரியையும் சார் மரபும் வாழிவாழி
நெறிதவறா நம் சைவவழிபாட்டு விதி வாழி வாழி
அறிவார்ந்த அருட் கலைஞர் அண்டத்தில் நீடு வாழி வாழி
செறிவாகும் சைவ சித்தாந்த சிந்தனைகள் வாழி வாழி
விரிவார்ந்த புராணங்கள் விளங்கு தத்துவங்கள் வாழி
புரியும் பல பணியால் இணையும் தொண்டர் வாழிவாழி

வசந்த குருக்கள்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லாத பரம்பொருளான சிவபெருமான் நெதர்லாந்தின் வடபகுதியான பேவர்வைக் (Beverwijk) நகரத்தில் அருணாச்சலேஸ்வரர் என்னும் நாமத்துடன் எழுந்தருளி திருவுள்ளம் கொண்டுள்ளார். திருமதி. கலா மகிந்தன் மேற்கொண்ட முயற்சியின் பயனாக ஆலயம் அமைப்பதற்கான கட்டிடம் கிடைக்கப்பெற்று இவருக்கு துணையாக குறுகிய காலத்தில் இவ் ஆலயம் கட்டி முடிக்கப் படுவதற்கு காரணமான திரு. இ. வடிவேல் அவர்கட்கும் அத்துடன் திரு. ராஜசிங்கம், திரு. கலாநிதி, திரு. செலிவா அவர்களையும் இந்த நேரத்தில் நெஞ்சில் நிறுத்துகின்றேன். அத்துடன் ஆலயத்திற்கு சகல வழிகளிலும் உதவிய மக்களுக்கும் எமது ஆலயம் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

பிஹேமகுமார்- நல்லையா
செயலாளர்
ஆலய பரிபாலன சபை



## அருள்மிகு ஸ்ரீ அருணாச்சலேஸ்வரர்
## ஆலய கும்பாபிஷேகம்

நெதர்லாந்தின் வேபர்வைக் மாநகரில் அருள்மிகு ஸ்ரீ அருணாலேஸ்வரர் கோயில் கொண்டு அருள்பாலிக்கவிருக்கும் அந்த நாள், புலம்பெயர்ந்து இந்நாட்டில் வாழும் அனைத்து இந்து மக்களுக்கும் மகிழ்ச்சி பொங்கும் நன்னாளாகும்.

''கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்ற நம் முன்னோர் வாக்கிற்கு இணங்க, புலம்பெயர் இம்மண்ணில் இவ்வாறு ஓர் சிவாலயம் அமைவது என்பது சைவப்பெரு மக்கள் எண்ணத்தில் தோன்றிய பக்தி சார்ந்த ஓர் எழுற்சி எனலாம்.

ஏற்கெனவே அன்னை பராசக்திக்கென ஓர் ஆலயமும், மைந்தர்கள் விநாயகர், முருகன் ஆகியோருக்கு ஆலயங்கள் என இந்த நெதர்லாந்தின் மண்ணில், வெவ்வேறு பிரதேசங்களில் சைவாலயங்கள் அமையப்பெற்று, சிறப்பாக அங்கு பூஜை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றமை அனைவருக்கும் பெரு மகிழ்ச்சியைத் தந்த வண்ணம் இருக்கின்றது.

இந்நிலையில் வேதநாயகன், விண்ணவர் தலைவன், மாதொரு பாகன் என்று போற்றப்படுகின்ற எமது முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானுக்கு ''அருள்மிகு ஸ்ரீ அருணாலேஸ்வரர்'' என்ற நாமம் சூட்டி ஆலயம் அமைத்திருப்பது, கும்பாபிஷேக நாள் வைத்திருப்பது என்பது அந்தத் தெய்வத்தின் அருட்பெரும் சக்தியாகும்.

இசையால் வசமாகும் இசைப்பிரியன், நாதத்தின் தலைவன், நர்த்தனத்தில் நடராஜனாக விளங்கும் எம்பெருமானுக்கு கும்பாபிஷேக நாள் காணும் இந்நிலையில், நாதஸ்வரக் கலைஞனாக என்னை, எம் குழுவினரை இவ்வுலகுக்குத் தந்த அந்த இறைவனை நினைத்து மனமுருகி வணங்கி இந்த ஆக்கத்தை சமர்ப்பணமாக்குகின்றேன்.

யாழ்ப்பாணம் நாதஸ்வரவித்துவான்

திரு V.K. காணமூர்த்தி புதல்வன்
K. கண்ணதாசன்

Regd. : K.V.K. 5492...

# SILAMPOLI KALASHETRA FINE ARTS ACADEMY

SKFAA

(Home Address)
Prins William Alexander Straat - 48
8501 MC Joure, Nederland
(0031) 0513 852398
(0031) 0684860962



(Dance School Address)
St.Ludgerus Straat 251
3553 CX Utrecht
Nederland

ஆடும்படி கேள், நம் அம்பலத்தான் ஐயனே நாடும் திருவடியிலே, 'ந' கரம், கூடும் 'ம'கரம் உதரம் வளர் தோள் 'சி' கரம் பகரும் முகம் 'வா' மடி'ய' ப்பார் என்று நமசிவாய என்னும் சிவனின் திருமந்திரத்தோடு என் வாழ்த்துரையை தொடங்குகிறேன்.

இந்துமக்களின் முழுமுதற் கடவுளாக விளங்குபவர் சிவபெருமான் அது மட்டுமன்றி எமது பாரம்பரிய நடனமான பரதநாட்டியத்தை தனது தாண்டவ நடனத்தின் மூலம் இப்பூலோகத்திற்கு பரதக்கலையை பரப்ப காரண கர்த்தாவாக இருந்தவர். எமது இந்து மதம் மிகவும் தொன்மையும், பழமையும் வாய்ந்தது சகல புவனங்களுக்கு அதிபதியான சிவபெருமானுக்கு நடன ஆசிரியை என்ற முறையில் நெதர்லாந்து நாட்டிலே ஒரு கோயில் இல்லை என்று என் மனம் ஏங்கியுள்ளது. அத்தோடு கலையும் கலாச்சாரமும் அழியாமல் பேணிப் பாதுகாப்பதில் எமது இந்து ஆலயங்களும் ஒன்றாகும் என்று கூறுவது மிகையாகாது. அந்த வகையில் நெதர்லாந்து பேபர்வைக் நகரத்தில் ஸ்ரீ அருணாச்சலேஸ்வரர் ஆலயம் அமைவதற்கு காரண கர்த்தாவாக விளங்கிய திருமதி. கலா மகிந்தன், ஆலய நிர்வாகிகளுக்கும் எனது வாழ்த்தும் நல்லாசியும் கூறுகின்றேன். அத்தோடு ஆலய கும்பாபிஷேகம் நல்லபடியாக நடைபெற சிவன் அருளை வேண்டி, நீண்ட ஆயுளையும், சிறப்புற வாழவும் வாழ்த்துகிறேன். அன்பே சிவம்! மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!

Directer :

Date : 30-11-2014

Nattiya Mayuri, Nattiya Kalamani,
Dance & Veena Teacher,
Srimathi Shanthi Ravindran



# கோயிலின் மகிமை

கனடாவில் நான் இருக்கும் இடத்திலிருந்து 10 மைல் சுற்றளவில் 6 இந்துக்கோயில்கள் உண்டு. நெதர்லாந்துக்கு நான் வந்து போன காலங்களில் அங்கு ஒன்று இரண்டு இந்துக் கோயில்கள் தான் இருந்ததாக அறிய முடிந்தது.

நெதர்லாந்தில் 4 வருடங்கள் வாழ்ந்த போதிலும் ஒரு இந்துக் கோயில்களும் என் கண்களில் தென்பட வில்லை.

ALKUMOR HICO கிறிஸ்துவ மாதா கோவிலுக்குத் தான் நானும் எனது மைத்துனர் தம்பு கந்தையாகவும் போய்வருவதுண்டு.

இன்று Beverwijeல் ஒரு இந்துக் கோயில் ஒன்று ஏற்பாடாகி கும்பாபிஷேகம் நடத்தும் செய்தி கேட்டு மிக மகிழ்ச்சி அடைகிறேன்.

தம்பு கந்தையாவின் புதல்வியும் கனகரட்ணம் மகிந்தனின் மனைவியுமான கலாமதியின் பிரயத்தனத்தாலும் அவர்களின் இந்துக் கலாச்சார மறை அங்கத்தவர்களின் உதவியினாலும் இந்தக் கோயில் ஸ்தாபனமாகிறதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

வானொலி அலைகள் நம்மைச் சுற்றிலும் போய்க் கொண்டிருக்கின்றன என்றாலும் வானொலிப் பெட்டியில் தான் அந்த அலைகளை உள்வாங்கி வெளிப்படுத்த முடியும். நாம் 3வது உலப்போர் மீண்டுவருதாக வைத்துக் கொள்வோம். எல்லாத் தொழில்நுட்பங்களும் அழிந்து போய்விடும். ஆனால் ஒரேஒரு வானொலிப் பெட்டி நம்மிடம் அழியாமல் தங்கி விடுகிறது என்றால் அதை வைத்துக்கொண்டு எதையும் கேட்க முடியாது. ஏனெனில் வானொலி நிலையங்கள் இரா. அதை தூக்கி எறிந்து விடமாட்டோம். மனம் வராது அது என்ன? என்பது கூடத்தெரியாது. யாராவது கேட்டால் நமது முன்னோர்கள் காலாகாலமாய் பாதுகாத்து வைத்திருந்து நாங்களும் வைத்திருக்கின்றோம் என்றுதான் சொல்வோம்

ஒரு காலத்தில் அது பேசியிருக்கிறது பாடியிருக்கிறது. எங்கிருந்தோ வந்த ஒலி அலைகளை வாங்கி கேட்பவர்களுக்கு வழங்கி இருக்கிறது. ஆனால் இன்று ஒளியற்றுக் கிடக்கிறது.

கோயில்களும் அப்படித்தான் தெய்வசக்தி எங்கு இருந்தாலும் மனிதர்கள் எங்கிருந்தாலும் சில அபூர்வமான கணங்களில் தான் சிலருக்கு அந்த அனுபவம் வாய்த்திருக்கிறது. கோயில்கள் அந்த ஆற்றலை உள்வாங்கி சேமித்து வைத்திருக்கும் மையங்களாகவே அமைக்கப்பட்டன. அங்கு செல்வதன் மூலம் எளிதில் தெய்வத் தோடு தொடர்புறுத்திக் கொண்டு நம் ஆன்மீக அனுபவ தளத்தை உயர்த்திக் கொள்வதற்கு எளிதான வாய்ப்பு அமைந்து விடுகிறது. இந்த நோக்கத்தோடு தான் கோயில்கள் முன்பு கட்டப்பட்டன.

திருநாவுக்கரசர், சம்பந்தர், மாணிக்கவாசகர் அவர்கள் இந்துத் தலங்களைப் பற்றி பாடியிருக்கிறார்கள். நோயாளிகளைக் குணப்படுத்தி இருக்கிறார்கள் உயிர் பிழைக்க வைத்திருக்கிறார்கள்.

சமூகத்தின் உயிர்மையங்களாக திகழும் கோயில்கள் ஆன்மீக நிலையங்களாக மட்டுமன்றி கலைகளை வளர்க்கும் கலாமன்றங்களாவும், அறம் பேணும் அறச்சாலைகளாகவும், பசிப்பிணி போக்கும் மருத்துவ நிலையங்களாகவும், அறிவூட்டும் அறிவாலங்களாகவும் பலவகைப் பரிமாணங்களில் திகழ்ந்த வரலாற்றினை தமிழகத்தில், சோழ மன்னர்கள் ஆட்சி செய்த காலத்தில் நிலவிய வரலாற்றை நாம் காணமுடிகிறது.

ஒரு காச நோயாளி ஒருவர் தாங்க முடியாத துன்பத்தால் இரத்தவாந்தியுடன் சீரடி சாயிபாபாவிடம் போய் சரண்டைந்தார். பாபா கூறினார். ''ஒரு தயிர் பெட்டியுடன் லட்சுமி கோவிலுக்குப் போ. அங்கே ஒரு நாய் இருக்கும். அதற்கு அந்த தயிரை கொடுத்துவிடு'' என்றார். அவர் கூறியப்படியே அவரும் போய் தயிரைக் கொடுக்க அந்த நாய் பசியுடன் படு ஆவலாய் சாப்பிட்டது. அத்தொடு அவனது காசநோயும் தீர்ந்து இரத்த வாந்தியும் நின்றதாக அண்மையில் படிந்திருந்தேன்.

எனவே கோயில்கள் மனிதர்களில் நோய்களைக் குணப்படுத்தியது. மட்டுமல்ல பிராணிகள், பறவைகள் போன்ற உயிரினங்களுக்கும் பசி தீர்க்கும் மையங்களாக திகழ்ந்து வருகின்றன.

இத்தகைய மகிமை வாய்ந்த ஆலயத்தை அமைத்து உருவாக்கியவர்களுக்கு என் அன்பார்ந்த நன்றிகள். நெதர்லாந்தில் இந்த ஆலயத்தை அமைக்க முழு மனப்பூர்வமான இதயத்துடன் பிரயத்தனப்பட்டு செயற்பட மூல ஆதாரமாக இருந்த மகிந்தன் கலாமதி அவர்களுக்கு எனது அன்பார்ந்த ஆசீர்வாதமும் இறையருளும்.

நாம் ஒலிக்கும் பிராத்தனைகள், மந்திரங்கள், பாடல்கள் மானிடக் குரலாக இருந்தாலும் அவை கோயிலுக்குள் எதிரொலிக்கும்போது புதிய ஆற்றல் பெற்று புதுச் சக்தியுடன் நம்மில் திரும்பவும் பாய்கிறது. இந்தியாவில் உள்ள கோயில்கள் அரைக் கோள வடிவம் நிரம்பியது. வானம் பூமியைத் தொடுவதுபோல அமைக்கப்பட்டிருக்கிறது. அதன் கீழ் அமர்ந்து எழுப்பப்படும் மந்திர உச்சாடனம் வீணாய் போய்விடுவதில்லை. கல்லும் கூட ஒலியை சிறந்த முறையில் ஒத்ததீர்வு செய்யும் என்பதை பின்னாளில் கண்டுபிடிக்கப் பட்டது.

எனவே ஆலயம் மிக மகிமை வாய்ந்த புனித இடம். அத்தகைய இடத்தில் நம் ஆன்மிக உணர்வைப் பெறமுடியும். இறைவன் எங்கும் உள்ளான். எல்லா உயிர்களிலும், எல்லாப் பொருட்களிலும் உள்ளார். இருந்தாலும் நம் போன்ற சாதாரண மக்கள் ஆலயத்தில் அவரை சுலபமாக அறிந்து கொள்ளலாம். உணர்ந்து அனுபவிக்கலாம். இது என்னப் பொறுத்த அபிப்பிராயம். ஏனெனில் நான் இன்னும் ஞானி ஆகவில்லை. அதாவது ஞானம் அடைவில்லை.

ஆக்கம்
***நா. சுப்பிரமணியம்***
சிறுகதை எழுத்தாளர்
கனடா

## சிவனே என்றிரு என்பதன் பொருள்

சிவனேனு இரு என்று பலரும் சொல்ல கேட்டிருப்போம், அதற்கு என்ன அர்த்தம் தெரியுமா?.. சிந்தனையை ஒருமுகப்படுத்தி இறைநினைப்பில் இருக்க வேண்டும் என்பதையே சிவனே என்றிரு என்று பெரியவர்கள் குறிப்பிட்டனர். திருமந்திரத்தில் திருமூலர், சிவ சிவ என்றிட தீவினை மாளும் என்கிறார். அவ்வையார், சிவாயநம என்று சிந்தித்திருப்போருக்கு அபாயம் ஒருநாளும் இல்லை என்று குறிப்பிடுகிறார்.

# இறைவனும் இசையும்



காலத்தின் மாற்றம் இன்றைய காலகட்டத்தின் வேகத்தின்பால் கட்டுண்டு இருக்கின்றது. உலகப் பந்தின் சுழற்சி வேகமா? உலகில் வாழும் மனிதனின் அறிவு வேகமா? என்பது புலப்படமுடியாதுள்ளது. விஞ்ஞான விளக்கம் மனித அறிவை விவேகமாக்கியதால் உலக மாற்றமும் மிக வேகமாகிவிட்டது. இந்த மாற்றத்தில் இசையின் மாற்றமும், இவற்றையெல்லாம் படைத்தவன் இறைவனே என்ற இந்துமதக் கொள்கையினையும் உற்றுநோக்கும்பொழுது இசையும், இறைவனும் உள்ளார்ந்த உன்னதமே என்பது சில புராண, இதிகாச வரலாற்றுத் தகவல்கள் மூலம் தெளிவுபடுத்தப்படுகின்றது.

திருவெம்பாவையில் குறிப்படப்படும் ''ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெரும்ஜோதி''யை அருட்பாமாலைகளாலும், தேவாரம், திருவாசகம் போன்றவற்றாலும் போற்றிப்பாடினார்கள் நமது நாயன்மார்கள், சமயகுரவர்கள், தவசீலர்கள் போன்ற சிவபக்தர்கள். இவர்களின் அனுபவத்தில் பிறந்த தெய்வப்பாமாலைகளே அஞ்ஞான இருளை நீக்கி மெய்ஞ்ஞான ஒளியைக்காட்டி நிற்கின்றது. திருநாவுக்கரசு சுவாமிகள்

*''சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்*
*தமிழோடிசை பாடல் மறந்தறியேன்*
*நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்*
*உன் நாமம் என்நாவில் மறந்தறியேன்''*

உளம் உருகிப் பாடியுள்ளார்.

இறைவனைப் பாடிப்பரவசப்படுத்தும் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, புராணம் போன்ற பஞ்சபுராணங்களை பழந்தமிழ்ப் பண்களுக்குரிய இராகத்தில் பாடிப் பரமனைத் துதிக்க வேண்டும்.

''திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்'' என்பர். திருவாசகதினைப் பாடும்பொழுது அதற்குரிய மோகன இராகத்திலும், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு போன்றவற்றை ஆனந்தபைரவியும், திருப்புராணம் பாடும்பொழுது மத்தியமாவதி இராகத்திலும் பாடினால் இசைப்பிரியன் இறைவன் மனம் கசிந்து, அவனது அருளைப் பெற்றிடலாம்.

தீந்தமிழின் மணிமுடியாகத் திகழும் சிவபுராணமும்,

*''கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே''*
*''கண்ணுக்கினியானைப் பாடி கசிந்துள்ளம்''*
*''சீலமும்பாடிச் சிவனே சிவனேயென்று*
*ஓலமிடினும் உணராய் உணராய்காண்''*

போன்ற திருவெம்பாவை அடிகளும், கணப்பொழுதும் கடவுள் முந்தனை நீங்கா நினைவோடு நித்தமும் வேண்டி நெக்குருகிப்பாடு என்பதனைப் புலப்படுத்துகின்றது.

இறைவனால் உருவாக்கப்பட்டதே இசை என்பது இந்துமதக்கூற்று. கர்ணபரம்பரை கதைகளே இதற்கு ஆதாரங்களாகின்றன. பத்தன் என்றாயே அவ்வாறே அடியெடுத்துப்பாடு எனப் பல்லவி கொடுத்தானே அந்தப் பரம்பொருள் சுந்தரமூர்த்தி நாயனாருக்கு ஊமையைப் பாடவைத்த ஆதிபராசக்தி கதையும், தாயாகிக் காட்சி தந்து, ஞானப்பாலூட்டிப் பாலகனான திருஞானசம்பந்தனை ''தோடுடைய செவியன்'' என அடியெடுத்துப்

பாடவைத்தமையும் இந்து மதத்தில் தானுண்டு. இத்தனைக்கும் மேலாக சாமகானம்பாடி இறைவறை மகிழ்வித்து, தனது இன்னுயிரை மீட்டுக் கொண்ட இலங்கைவேந்தன் இராவணனது கதையும் இறைவன் இசைவயப்படுவன். இசைப்பிரியன் என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

விஞ்ஞானத்தின் துணையால் விடிவுகாணலாம் என்று அஞ்ஞான இருளில் மூழ்கி வழிதெரியாது துன்பவலையில் சிக்கித் தத்தளிக்கின்றான். பிரார்த்தனையே ஒரு மனிதனைப் பூரணமாக்குகின்றது. இறைவன் பால் அவனைக் கொண்டு செல்கின்றது. இறைவனை அடையும் வழியே இசையாகும் என்பதனை

''பக்தியுடன் இறைவன் திருநாமத்தைப்பாடு. அப்போது மலைபோலக் குவிந்திருக்கும் எமது பாவங்களெல்லாம் அழிந்து போய்விடும்'' என்று பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் மிகவும் அழகாக எடுத்துக் கூறியுள்ளார். இசையில் இன்பமும், இறையில் பேரின்பமும் கிடைக்கின்றது.

இந்தவகையில் திருவிளையாடலில் ''பாட்டும் நானே பாவமும் நானே'' என்று குறிப்பிடப்படும் எமது இறைவனை வணங்குவதற்குரிய மார்க்கங்கள் பலவாயினும், இன்றைய உலகில் இசைவழி பூஜிப்பதே இறைவனை அடைவதற்கு இலகுவழியாகும். இன்னிசைபடி இறைவனை வணங்குவோம்.

**திருமதி. மல்லிகா தேவராஜ்**
''ஸ்வராலயம்'' இசை ஆசிரியை


KOERIER 24/7

Klus en koerier bedrijf devi

Koerier werk heel nederland en buitenland
Verhuizingen
Meubel en keuken monteren
Laminaat leggen
Nieuwe meubels en laminaat leveren met garantie

Mathan
suresrajh@live.nl
0646193791



# சிவமயம்

*உலகெலாம் உணர்ந்து ஓதுதற் கரியவன்*
*நிலவுலாவிய நீர்மலி வேணியன்*
*அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்*
*மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.*



இறை அன்பர்களே!

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்றும், ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்ற முதுமொழியும் திருக்கோயில் இல்லாத திருவிலூரும் என்ற அப்பர் வாக்கும் எண்ணிப் பார்க்கையில் ஊர் என்றால் அங்கு கோயில் இருக்க வேண்டும் / கோயில் என்றால் அது ஊருக்குள் இருக்க வேண்டும். அப்போது தான் அந்த ஊர் ஊராக இருக்கும். அப்படி இல்லை எனில் அது காடாகும் என்று கூறப்படுகிறது.

அடுத்து ஆலயம் என்பது ஆன்மா லயப்படும் இடமாகும். அது ஆடம்பரத்துக்கான இடமல்ல. மனிதன் மனிதனாக வாழ்வாங்கு வாழ வழி சமைக்கும் இடமாகும். அப்படி மனிதன் வாழும்போது அவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுகிறான் எனப்படுகிறது.

எனவே, சமுதாய நோக்கில் பார்த்தால் எம்மதமாக இருந்தாலும் சரி அம்மதங்களின் கட்டுப்பாடு, சமயநெறி, மன உறுதி, ஒழுக்கம், பண்பாடு எல்லாவற்றிலும் மேலாக அன்பு பிற உயிர்களிடத்து அன்பும் ஐங்குரவர் மீது காட்டும் பணிவு குருவணக்கம் என்றும் விரதங்கள், அனுட்டானங்கள், பூசைகள், விழாக்கள், பண்டிகைகள் எல்லாம் ஆலயங்களைத் தழுவியே பெரும்பாலும் நிகழ்கின்றன! ஆதலால் மக்களுக்கு ஆலயம் என்பது இன்றியமையாத ஒன்றாக இருக்கிறது. அது மட்டுமன்றி நமது முன்னொர்கள் நமக்குத் தந்த சமய வாழ்க்கை, சமூக அமைப்பு, கலை, கலாசாரம், பண்பாடு இவையெல்லாம் எம்மோடு முடிந்து விடாது அது எமது சந்ததியினர் தொடர நாம் வழி சமைக்க வேண்டும். அவர்களிடம் நாம் சரியாக சேர்ப்பக்க வேண்டும். இது ஒவ்வொருவருடைய கடமை.

அத்தோடு ஆன்மீகத் துறையிலும் இறைவன் எல்லா இடத்திலேயும் இருக்கிறான் என்று சொன்னாலும் அவன் இருந்த அருள் செய்யும் இடம் ஆலயம்தான் என்று அறிஞர்கள் கூறுகின்றார்கள் உதாரணம். பசுவின் மடியில் தானே பால் கறக்க முடியும். ஒலிபரப்படும்ஒலியாயினும் வானொலிப் பெட்டியிலும் தானே பார்க்கவோ கேட்கவோ முடிகிறது. அதன் ஒலிஒளி அலைகள் எல்லா இடமும் நிறைந்து இருக்கின்றனவே ஆனாலும் எம்மால் கேட்கவோ பார்க்கவோ முடியவில்லையே. அதே போல் தான் ஆண்டவனும் ஆலயத்தின் மூலமாகத் தான் அருள் பாலிக்கிறான் என்பது தெளிவாகிறது. புராணங்களில் சொல்லப்படும் அவதார புருஷர்களும் விக்கிரக வழிபாடுகளில் தான் ஈடுபட்டார்கள். இது மட்டுமா எல்லோரும் இலகுவில் செய்யக்கூடியது. என்று சொன்னாலும் அதுவும் கூட ''அவனருளாலே அவன் தாள் வணங்கி'' என்று சொல்லப்படுகிறது. அப்படியிருக்கையில் சரியை கிரியை என இரு வழிபாடுகளும் இயற்றிப் புண்ணியம் பெற ஆலயம் முக்கியமாகிறது. மேற்கூறியவைகளை உணர்ந்த Bevewijk நகர அடியார்கள் எமது சிவபெருமானின் அருவுருவத் திருமேனியை ஸ்தாபத்து இன்றைய நன்நாளின் குடமுழுக்கு செய்து ஆரம்பித்து எல்லாம் அவன் செயல் அவன் அன்றி எதுவும் இல்லை என்றும் ''என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற வாக்கிற்கு அமைய செயல்பட்டுள்ளார்கள். அவர்கள் இறைபணி தொடர வையகம் வாழ இறைவனை வேண்டி வாழ்த்தி நிற்கும் இறைதொண்டன்.

*மேன்மை கொள் சைவநீதி*
*விளங்குக உலகுமெலாம்*

சமயச்சொற்பொழிவாளர்
சைவ பூஷணம்
*சு.க. சிவலிங்கநாதன்*



# சிவபெருமானும் பரத நாட்டியமும்

**சி**வபெருமான் நடராஜர் வடிவில் பிரபஞ்ச செயற்பாடுகள் அனைத்தும் தவறாது தொடர்ந்து நிகழ தன்னுடைய ஈஸ்வர தன்மை மூலம் ஐந்தொழிலையும் இடைவிடாது நிகழ்த்திக் கொண்டிருப்பதையே தாண்டவம் வெளிப்படுத்துவதாக சொல்லப்படுகின்றது.

தாண்டவம் என்பதற்கு கூத்து என்றும் நிருத்தம் என்றும் பொருள் கொள்ளப்படுகின்றது. இவற்றை பரதமுனிவர் தனது நாட்டிய சாஸ்த்திரத்தில் பயன்படுத்தியிருக்கும் சொல் உத்ததம் என்பதாகும். தாளலயமும் அங்க சுத்தமும் சிறிதேனும் குறைவின்றி கலை மெருகும் ஆண்மையின் கம்பீரமும் நிறைந்த ஆடலாக தாண்டவம் அமைகின்றது.

சிவன்தான் அந்திவேளையில் ஆடும் ஆட்டங்களை தண்டு தாண்டன் எனப்படும் தனது கணங்கள் மூலம் பரத முனிவரின் நடனக் குழுவிற்கு கற்பிக்கச் செய்தார் என இதன் தோற்றுவாய் கூறப்படுகின்றது.

இவ்விருவரின் பெயர் விளங்கவே இன் நடனங்கள் தாண்டவம் எனப்பட்டதாக புராணரீதியில் இதற்கான பெயர்காரணம் கற்பிற்கப்படுகின்றது.

நூற்றிஎட்டு(108) வகையான தாண்டவ நடனங்கள் சிவனால் ஆடப்பட்டதாக கூறப்படுகின்றது. அதில் அவர் தனியாக ஆடியவை 48 எனவும் தனது சக்தி வடிவான உமாதேவியாரோடு இணைந்து ஆடியவை 36 எனவும் காலச்சூழலின் தேவைக்கேற்ப திருமாலுடன் சேர்ந்து (3) ஆடினார் எனவும் தேவர்களின் வேண்டுகோளின் பெயரில் பன்னிரண்டு (12) ஆடப்பட்டதாகவும் 108 நடனங்கள் பற்றி விபரித்துக் கூறப்படுகின்றது. எனினும் 64 கலைகளையும் வெளிப்படுத்தும் வண்ணம் சிவனால் ஆடப்பட்டவை 64 தாண்டவங்களே என கூறுவாரும் உளர்.

பரதநாட்டியத்திற்கும் இந்து மக்களுடைய முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானுக்கும் மிக நெருங்கிய தொடர்புடமை இருப்பது காணக் கூடியதாக உள்ளது.

பரதநாட்டிய கலையானது தமிழர்களுடைய அடையாளத்தை உலகெங்கும் பரப்பி நிற்கும் கலையாகும். தமிழரது இலக்கியம், வழிபாட்டு முறை ஆடை, அணிகலங்கள் பண்பாடு என்பவற்றை உள்நாட்டில் மட்டுமல்ல அகில உலகத்திற்கும் எடுத்துக்காட்டுகின்ற உண்மைக் கலைவடிவமாக பரதக்கலை விளங்குகின்றது.

நன்றி

ஆக்கம்
***கெனுரட்ஷா (ஆஷா) விஜயபாலசிங்கம்***
வித்யபூஷணம்



# நமசிவய
# சிவயநம
# வயநமசி
# சிவாய தத்புருட
# சிவ மந்திரமும்–பலன்களும்

| | | |
|---|---|---|
| நங்சிவயநம என்று உச்சரிக்க | - | திருமணம் நிறைவேறும் |
| அங்சிவயநம என்று உச்சரிக்க | - | தேக நோய் நீங்கும் |
| வங்சிவயநம என்று உச்சரிக்க | - | யோக சித்திகள் பெறலாம். |
| அங்சிவயநம என்று உச்சரிக்க | - | ஆயுள் வளரும், விருத்தியாகம் |
| ஓம் அங்சிவாய என்று உச்சரிக்க | - | எதற்கும் நிவாரணம் கிட்டும். |
| கிலி நமசிவய என்று உச்சரிக்க | - | வசிய சக்தி வந்தடையும் |
| ஹிரீநமசிவய என்று உச்சரிக்க | - | விரும்பியது நிறைவேறும் |
| ஐயும் நமசிவய என்று உச்சரிக்க | - | புத்தி வித்தை மேம்படும். |
| நம சிவய என்று உச்சரிக்க | - | பேரருள், அமுதம் கிட்டும். |
| உங்யுநமசிவய என்று உச்சரிக்க | - | வியாதிகள் விலகும். |
| கிலியுநமசிவய என்று உச்சரிக்க | - | நாடியது சித்திக்கும் |
| சிங்வங்நமசிவய என்று உச்சரிக்க | - | கடன்கள் தீரும். |
| நமசிவயவங் என்று உச்சரிக்க | - | பூமி கிடைக்கும். |
| சவ்வுஞ் சிவாய என்று உச்சரிக்க | - | சந்தான பாக்யம் ஏற்படும். |
| சிங்றீங் என்று உச்சரிக்க | - | வேதானந்த ஞானியாவார் உங்றீம் |
| சிவயநம என்று உச்சரிக்க | - | மோட்சத்திற்கு வழி வகுக்கும். |
| அங்நங் சிவாய என்று உச்சரிக்க | - | தேக வளம் ஏற்படும். |
| அவ்வுஞ் சிவயநம என்று உச்சரிக்க | - | சிவன் தரிசனம் காணலாம். |
| ஓம் நமசிவாய என்று உச்சரிக்க | - | காலனை வெல்லலாம். |
| லங் ஸ்ரீறியுங் நமசிவாய என்று உச்சரிக்க | - | தானிய விளைச்சல் மேம்படும். |
| ஓம் நமசிவய என்று உச்சரிக்க | - | வாணிபங்கள் மேன்மையுறும் |
| ஓம் அங்உங்சிவயநம என்று உச்சரிக்க | - | வாழ்வு உயரும், வளம் பெருகும். |
| ஓம் ஸ்ரீறியும் சிவயநம என்று உச்சரிக்க | - | அரச போகம் பெறலாம். |
| ஓம் நமசிவய என்று உச்சரிக்க | - | சிரரோகம் நீங்கும். |
| ஓங் அங்சிவாய நம என்று உச்சரிக்க | - | அக்னி குளிர்ச்சியைத் தரும். |



# கும்பாபிஷேக விளக்கம்

அனாதிமலமுத்த சித்துருவாகிய பரம்பொருள் கற்பனை கடந்த சோதியாகினும், அனாதிமல பெத்தர்களாகிய ஆன்மாக்கள் வணங்கிப் போக மோக்ஷங்களை அடைய ஆலயத்தில் நிறுவப்படும் விநாயகரை திருவுருவில் கருணையை உருவாகும் படி பிராத்தித்து அபிஷேகித்தலே கும்பாபிஷேகமாம்.

'கும்பாபிஷேகம்' என்பது குட முழுக்கு ''குடநன்னீராட்டு விழா'' என்றும் சொல்லுவார்கள். இது பிரதிஷ்டை என்றும் கூறப்படும். இது நான்கு வகைப்படும். அவையாவன,

1. ஆவர்த்தம், 2. அனாவர்த்தம், 3. புனராவர்த்தம், 4. அந்தரீதம்

**ஆவர்த்தம்:** புதிதான ஒரு இடத்தில் விநாயகரை வைத்துப் பாலப்பிரதிஷ்டை செய்து பூஜித்துப் புதிதாகக் கோயில் கட்டி, பாலாலய மூர்த்தியைக் கும்பத்தில் எடுத்து, பின்னர் மூலஸ்தானத்தில் இருக்கும் மூர்த்தியில் சேர்த்து அபிஷேகம் செய்வதாம்.

**அனாவர்த்தம்:** வெகு காலத்துக்கு முன் கோயில் கட்டி, பூஜையில்லாமல் அழிய விட்டும், சீர் குலைந்தும் இருந்து, முன்போல் அவைகளைத் திருத்தி ஆலயம் கற்பித்துக் கும்பாபிஷேகம் செய்தலாம்.

**புனராவர்த்தம்:** கர்ப்பக்கிரகம், விமானம், பிரகாரம், கோபுரம், பலிபீடம் முதலியவைகளிற் பழுது ஏற்பட்டாலும், அட்டபந்தனத்தில் பழுது உண்டானாலும், விமானத்தில் உள்ள விக்கிரகங்களிலும் பழுது நிகழ்ந்தாலும், வர்ணம் அழிந்து இருந்தாலும், பாலாலயம் செய்து ஆலயத்தைப் புதுப்பித்து மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்தலாம்.

**அந்தரீதம்:** ஆலயத்தில் சோரன், சண்டாளன், நாய் முதலிய உட்சென்று தீண்டியதன் காரணமாக மூர்த்தியின் பிரத்தியங்கம், உபாங்கம் போன்றவைகளில் ஏதாவது பழுது ஏற்பட்டால் அவைகளைத் திருத்தி உடனே செய்வதாகும். இதில் அந்தரீதப் பிரதிஷ்டைக்கு நாள், நட்சத்திரம் பார்க்க வேண்டியதில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### இனி கும்பாபிஷேகத்தின் முக்கிய பகுதிகளையும் அவற்றுக்கான விளக்கங்களையும் பார்ப்போம்

**அனுஞ்ஞை:** இறைவணக்கம் செய்து சர்வசாதகரிடத்திலும், விநாயகர் இடத்திலும் நாள் குறித்த காலத்தில் இந்த மகத்துவமான கும்பாபிஷேகத்தை செய்ய உத்தரவு தர வேண்டும் என்று வணங்கி உத்தரவு கேட்பதாம்.

**தனபூஜை:** புண்ணிய வசத்தால் கிடைத்த திரவியத்தை பூஜை செய்தலாகும்.

**திரவிய விபாகம்:** பூஜை செய்த திரவியத்தை ஒருபாகம் ஆலயக் கட்டடவேலைக்கும், இரண்டாவது பாகம் நித்திய பூஜை, மாசாந்த விசேட நட்சத்திர பூஜை, உற்சவம், ஆபரணாதி கட்கும் இராமாதி வாங்கவும், மூன்றாவது பாகத்தை பதினொருபாகம் செய்யவும் வேண்டும்.

**ஆசாரியவர்ணம்:** பிரதான ஆசாரியரையும், சர்வசாதகரையும் வணங்கி இத்திரவியத்தைக் கொண்டு மகாகும்பாபிஷேகம் செய்து இறையருளைப் பெற்றுத்தர வேண்டும் என்று எசமான் குருவை வழிபடுதலாம்.

**கணபதி பூஜை :** எவ்வகையினராயினும் முதலில் விநாயகரை வழிபாடு செய்தல் வேண்டும், செய்யாவிடில் அவர்களின் காரியத்தை, இடையூறு செய்! என்று இறைவன் கட்டளை என்பது 'என்னரேயாயினும்' என்ற திருவிளையாடற் புராணத்தில் விளங்குகின்றது. ஆகவே, இங்கு தொடங்கிய மகளும்பாபிஷேகம் இடையூறு இன்றி நிறைவேற விநாயகப் பெருமானுக்குப் பூஜை, அபிஷேகம், ஹோமம் செய்து முதலில் பிரதான சிவாசாரியர் வழிபடுதல்.

**கிராமசாந்தி:**

> ***'சர்வலோக இதம் புண்ணியம்***
> ***வட்சியே கந்து சடானன்***
> ***கிராம நூதன காலேது***
> ***ஷேத்திரவா மந்திரேவிவா***
> ***பிரதிஷ்டோத்துவ காலேச***
> ***பூஜாம் கருத்துவாவிசேஷவதா'***

என்று காரணாகமம் கூறுகிறது. இவ்வாறு சகல லோக சுகத்துக்கும், புதிதான பட்டினம், கிராமங்களில் உள்ள அசுர, ராட்சத, பிசாச, பிரமராட்சதர்களைத் திருப்தி செய்து சந்தோசப்படுத்தி, கிராம அதிதேவதையான வைரவரைப் பூஜித்தலாம்.

**பிரவேசபலி:** நாம் பிரவேசம் செய்து மகா கும்பாபிஷேகம் செய்யும் இடத்தில் உள்ள எட்டுத் திக்குகளிலும் வசிக்கின்ற இயக்கர், இராட்சதர், பிசாசர், பிரம இராட்சதர், பூதர், காளி, சரளி, வைரவர் முதலிய தேவதைகளுக்கு உணவு கொடுத்து எழுப்பி, அவர்களை முறையே ''கடல், மலை, வனம், நதி, மயானம் முதலிய இடங்களிற் சென்று சுகமாய் வீற்றிருங்கள். இது இறைவன் கட்டளை'' எனக் கூறித் திருப்தி செய்தலாம். இதுமகா கும்பாபிஷேகம், திருவிழா, புதுவீடு குடிபுகல் போன்ற காரியங்களிற் செய்ய வேண்டும் என்று ஆகமங்கள் கூறுகின்றன.

**திசாஹோமம்:** நான்கு திக்குகளில் முறையே பாசுபதாஸ்தம், அஹோராஸ்திரம், பிரத்தி யங்கிராஸ்திரம், சிவாஸ்திரம் முதலியவர்களைப் பூசித்துக் காவல் செய்யும்படி கட்டளை இடுதலாம்.

**இரட்சோக்கிரஹோமம்:** அசுர, ராட்சதர்களின் தொல்லை நீங்குவதற்காக மூன்று மேடைகள் அமைத்து, நடுவில் கும்பம் வைத்து, அதில் இரட்சோக்கிர தேவதையை வடவாமுகாக்கினிக்குச் சமமாகப் பாவித்துப் பூசை செய்து, அதன் தென்புறத்தில் வெள்ளை வஸ்திரம் இட்டு, தேங்காய் ஒன்று வைத்து, வடக்குப் பக்கத்திற் சிவப்பு வஸ்திரம் வைத்து, அதன் மேல் வாள் ஒன்று வைத்து, தேங்காயில் சிவனையும் வாளில் கட்கேசுவரனையும், வாளைச்சுற்றி அசிதாங்கபைரவர், குருபைரவர், சண்ட பைரவர் முதலிய எண்மரையும் பூசித்து, அவர்களுக்கு உள்ள திரவியங்களாலும் சமித்தாலும் ஹோமம் செய்து, சம்யோதித்துக் கும்பஜலத்தை ஆலயத்தை சுற்றித் தெளித்தலாம்.

**ஆயுஸ் கர்மம்:** குருமார் செய்து கொள்ளும் தசவித ஸ்நானமாம்

**நவக்கிரகம்:** கும்பாபிஷேகத்தால் உலகத்துக்கு அதிக மழையாலும், மழையின்மையாலும், விரோதிகளாலும், துஷ்டர்களாலும் வரும் துன்பம் நீங்கவும், எல்லாப் பிராணிகளின் பயம், நோய், பிணி நீங்கவும் சூரியன் முதலிய நவக்கிரங்களைப் பூசித்து வணங்கி ஹோமம் செய்தலாம்.

**வாஸ்து சாந்தி :** பூமியானது அசத்தாக, ஜடசம்பந்தம் உள்ளதனால் அதை நீக்கிச் சத்தாக உண்டாவதற்குச் செய்வது, அசுத்த சொரூபமான பூமியை பாலாக்கினியால் தகித்துப் பின் பூமிக்கு அதிபதியான பிரமாவின் மூச்சுக்காற்றினாற் சோதிரூபமாக்கிச் சுத்தம் செய்வதாம். நீற்றுப் பூசணிக்காயைப் பூமியின் வடிவமாகத்

தியானித்து, அதன் விதைகளை அண்டங்களாக நினைத்து, எல்லாவற்றையும் ஹோமம் செய்து, பின் பூமிக்கு அதிபதியான பிரமாவின் கட்டளையினாற் பரிசுத்தமானதாகப் பாவித்து வாஸ்து சாந்தியாம். இச்சாந்தியினை கும்பாபிஷேகம், பாலஸ்தாபனம், யாக மண்டப கல்பனம், கோபுரம், தடாகம், வீடு, உற்சவம் போன்ற இடங்களில் அவசியம் செய்ய வேண்டும்.

**கோபூஜை** : பசுமாடு, கன்று கட்டுதலாகும்.

**விற்பிரபோசனம்**: வேதம் அறிந்த பிராமணர் ''பிருதுவி முதல் சுத்த தத்துவம் வரையுள்ள எல்லாத் தத்துவங்களையும் சுத்தமாக்குகின்றேன். ஹோமம் செய்கின்றேன்: இது நன்கு சுத்தி அடையட்டும்'' என்று சிதாக்கினியில் ஹோமம் செய்கின்ற பாவனையில் போசனம் செய்வித்தலால் அந்த இடம் சுத்தியாகும்.

**மிருத்சங்கிர இணம்**: கிராமத்துக்குச் சாந்தியையும் தேச நன்மையடைவையும் நினைத்து, பூமாதேவியைப் பிரார்த்தித்து, இந்தப் பூமி கண்டங்களாகப் பிரிந்து இருப்பதால் ஒவ்வொரு கண்டத்திற்கும் பூசை செய்து, பிரார்த்தித்து, ஞானயாகம் செய்ய முளையிடுவதற்காக மண்வெட்டியைச் சிவாஸ்திரமாகப் பூசித்து, பூமிதேவியின் வயிற்றில் மூன்று அல்லது ஐந்து முறை மண்ணை எடுத்தலாம். எடுத்த தோஷம் நீங்க இந்த இடத்திற்கு வேறு மண் போட்டுச் சப்தவாரிதி கும்பத்தால் அபிஷேகம் செய்தலாம்.

**அங்குரார்ப்பணம்**: முளையிடுதல், இந்தப்பூமியானது முன்னர் அமிர்தத்தால் நனைந்து சுத்தமானது. ஆகையால் உலகச் சேமத்தின் பொருட்டு நெல் முதலிய நவதானியங்களைப் பாலில் ஊறவிட்டு 'ஓசதி சூக்தம்' செபித்துச் சந்திரனை வணங்கி முளையிடுதலாம்.

**ரஷாபந்தனம்**: காப்புக்கட்டுதல்; குழந்தையின் வருத்தம் தீர மாதா மருந்துண்ணுதல் போல, உலக ஷேமத்திற்காக ஆசாரியர் எடுத்த காரியம் செவ்வனே நிறைவேற இடையூறுகள் தடுக்கா வண்ணம் இறைவியின் கர்ப்பநாடியில் நின்றும் உண்டானதாக நாகராசனைப் பூசித்துக் கையில் கங்கணம் கட்டுதலாம்.

**இரத்தினநியாசம்; நைநோன்மினனம், தானியாதிவாசம், சயனாரோகணம், கிராமப்பிரதட்சணம்**: இவைகள் புதிதான ம் மூர்த்திகளுக்குப் பஞ்சபூத சம்பந்தமான தத்துவங்கள் ஏற்படுத்துவதற்காகச் செய்யப்படும் கிரியைகளால். அன்றியும் இறைவன் ''இருநிலனாய்த் தீயாகி நீருமாகி இயமானனாய் எறியும் காற்றுமாகி'' என்ற தேவாரத்தில் இருந்து இறைவடிவத்தை உண்டுபண்ணும் குறிப்பை உணர்த்துவது ஆகும்.

**யாகசாலா தானியாதி ஸ்தாபனம்**: யாகசாலையிற் சப்ததாதுக்கள் மயமான சப்த தானியங்களைப் பரப்புதல்.

**சூரியகாந்தி சங்கிரகணம்**: ஞானாக்கினிக்கு சூரிய காந்தத்தில் இருந்து அக்கினியை எடுத்தல்

**ருத்விக் சாதகாதி வரணம்**: பிரதான குண்டத்தைத் தவிர ஏனைய குண்டங்களுக்கும் ஏனைய மூர்த்திகளுக்கும் ஏற்ற குருமாரையும் சாதகர்களையும் உபசாதகர்களையும் நியமித்தல்.

**பிரசன்ன அபிஷேக பூஜை**: எங்கும் நிறைந்த மூர்த்தியைப் பூஜிப்பதற்காகத் தமக்கு நேர்முகப்படுத்தல்.

**கடஸ்தாபனம்**: குடத்தைச் சுத்தமாக்கிச் சப்ததாதுக்களும் ஜீவனும் உண்டாக்குவதற்காகக் கும்பத்தின் அடியில் ஆன்மதத்துவத்தையும், விஷ்ணுவையும், கும்ப நுனியிற் சிவதத்துவத்தையும், ருத்திரனையும், கும்பத்தில் நவ சக்திகளையும், மூவிளை நூலிற் சரஸ்வதி, இலக்குமி, ரெளத்திரி ஆகியோரையும், கும்பத்திற்குப் பிடிக்கப்படும் தூபத்தில் அக்கனி சக்தியையும், தீர்த்தத்தில் கங்கை முதலிய புண்ணிய நதிகளையும், மத்தியில் வருணனையும், நவரத்தினங்களில் வாமை முதலிய நவ சக்திகளையும், தங்கத் தாமரைப் பூவிற் சதாசிவத்தையும், வாசனைத் திரவியங்களிற் சப்தமாதுருக்களையும் பூசித்துக் குடத்தில் இட்டு மாவிலையைச் சடையாகவும் தேங்காயைச் சிரசாகவும், கூர்ச்சத்தை முடியாகவும் வஸ்திரத்தைத் தோலாகவும், ஜெஞ்ஞோபவீதத்தைப் பஞ்சப்பிரம மந்திரமாகவும் பூசிப்பதாற் கும்பமானது சர்வதேவதா சொரூபமாகிறது என்று ஆகமங்கள் கூறுகின்றன.

**கலாகர்சணம்**: கலைகளை இருத்தலாம்; சடத்துவன்னியாசமும் கும்பத்திற்குச் சடத்து வானது பரமேஸ்வரர் இருக்கும் ஸ்தானத்தை அடைதலுக்கு உரிய வழியாகும். இதில் சர்வ வியாபகராக உள்ள பரமேஸ்வரர் இந்த ஆறு அத்துவாக்களிற் கலந்தும் இருக்கிறார். பரமேஸ்வரர் சக்தி சொரூபர்; அதீதர்; சக்திக்கும் பேதமின்னை ஆதலால் அங்காங்கிபாபம் என்றும் கூறப்படுகிறது. ஆகவே சக்தியின் இடத்தில் இருந்து கலையும் கலையில் இருந்து தத்துவமும், தத்துவத்தில் இருந்து புவனமும், புவனத்தில் இருந்து வர்ணமும், வர்ணத்தில் இருந்து பதமும், பதத்தில் இருந்து மந்திரமும் உண்டாயின. கலையில் தத்துவம் அடங்கியுள்ளதாதலின் தத்துவம் முதல்

மந்திரம் அடங்கியுள்ளதாதலின் தத்துவம் முதல் மந்திரம் இறுதியாக ஒன்றில் ஒன்று அடங்கி இருந்து திரும்ப வந்ததாதலின் இந்தக் கடத்துவாக்களைச் செய்யவேண்டும் என்பதாம், அன்றியும் கலா நியாசத்தால் சர்வஞ்ஞசக்தியும், புவன நியாசத்தால் அநாதி போததத்துவமும், வர்ண நியாசத்தால் சுவ தந்திரத்துவமும், பதநியாசத்தால் அலுப்த சக்தித்துவமும், மந்திர நியாசத்தால் அநந்த சக்தியத்துவமும் சித்திக்கின்றமையால் அவசியம் செய்ய வேண்டும்

**யாகசாலைப் பூஜை:** யாகாசாலை கலாமயமாக விளங்குகிறது. நிவிர்த்தி முதலிய நான்கு கலைகளும் நான்கு பக்க நிலைகளாகவும், இதற்கு நான்கு கலசமும், இவைகளுக்கு இருபுறங்களிலும் நந்தி முதலிய எண்மர் வாயில் காப்பளராகவும், கிழக்கு முதல் அட்டதிக்குகளில் கீழ், மேல்,ஆகிய பத்துத் திசைகளில், இந்திரன் முதல் விஷ்ணு ஈறாக தசலோக பாலகர்களும் அக்கினிக்கு வடக்கில் சிவ சூரியனும், நிருதிக்குக் கிழக்கில் யாகபலனைத் தரும் வாஸ்து பிரமனும், வாயுவுக்குத் தெற்கில் உத்தமப்பாக மண்டப ரூபமாகிய மகா லட்சுமியும், வாயுவின் வலது புறத்தில் யாகத்தில் ஏற்படும் விக்கினங்களை நீக்கும் விநாயகரும், ஈசானத்துக்கு மேற்கில் எதையும் உத்தரவு கேட்டுச் செய்ய சதாசிவம் முதல் சப்த குரு மூர்த்திகளையும் பூசிப்பதற்கு, 27 கலசங்கள் வைத்து ஞானவான் ஏந்தியபடி யாகேஸ்வரன், யாகேஸ்வரியையும் கலசத்தில் அமைத்து, நவ குண்டங்களோடு விளங்குகின்றனமையால் யாக சாலை கலாமயமாகும்.

**நவகுண்டம்:** சிவபெருமானுக்குச் சொரூபம், தடத்தும் என இரு வடிவங்கள் உள்ளன. சொரூபத்திருமேனி சுயப்பிரகாசத் திருமேனியாகும். அது உலகத்தைக் கடந்த வடிவம். தடத்தவடிவம் என்பது உலகத்தோடு கலந்த வடிவமாம். இந்த உலகம் நிலம், நீர், நெருப்பு, காற்று, நீள்விசும்பு, நிலா, பகலோன், இயமானன் என்னும் எண்வகைப் பொருளிலும் கலந்தது. இதனால் இறைவனை எண்வகை உருவில் வைத்து வணங்கவேண்டும் என்பது பெற்றாம்.

**நிலம்** : பிருதுவியாகும்: இது சதுரமான வடிவம்; அதைக் குறிப்பது கிழக்குத் திக்கில் அமைந்த நாற்கோண வடிவமான குண்டமாம்.

**நீர்** : அப்பு, இதன் வடிவம் பாதிச் சந்திரனான பிறைவடிவம்: அது தெற்கில் உள்ள பிறை வடிவமான குண்டமாம்.

**நெருப்பு** : தேயு. இதன் வடிவு முக்கோணம். இது தென்மேற்கு மூலையில் உள்ள முக்கோண வடிவம்.

**வாயு** : இது அறுகோணவடிவம்: இது வடமேற்கு மூலையில் அமைந்திருக்கும்.

**ஆகாயம்** : இது வட்டவடிவினது; மேற்குத் திக்கில் உள்ள குண்டத்தில் அமைந்திருக்கிறது.

**சூரியன்** : இது தாமரைப்பூ வடிவம்: இது வடக்குத் திக்கில் அமைந்திருக்கிறது.

**சந்திரன்** : இது எண்கோணவடிவினது: இது வடகிழக்கு மூலையில் அமைந்திருக்கிறது.

இயமானன் என்னும் ஆன்மா மாயா தத்துவத்தைக் குறித்து, அரசியலை வடிவாய் தென்கிழக்கு மூலையில் அமைந்திருக்கிறது.

இவை எட்டுத்திக்கிலும் அமைய ஈசானத்திற்கும் கிழக்கிற்கும் மத்தியில் வட்டவடிவமான பிரதான குண்டத்தில் சுயம்பிரகாச மூர்த்தியாய் அமைந்துள்ளது தான் இறை வடிவம். இறைவன் மேலே குறித்த எட்டு வடிமாகிய உலகத்தில் கலந்து இருக்கிறான். ஆகவே அவரை இந்த எட்டுவகையான குண்டத்தில் வைத்துப் பூஜித்து ஓமம் செய்து வணங்குகின்றோம். இது எப்படியெனில், நமது அருவமான உயிரை உருவமான உடம்பில் வைத்து அனுமானித்துக் காண்பது போல இறைவனை வழிபாடு செய்தலே நவ குண்டங்களின் அமைப்பாம். இன்னும் ஈசானம் முதல் சத்தியோசாதம் இறுதியாக உடைய பஞ்சப்பிரம மந்திரங்களும் மூலமந்திரமும் சிவபெருமானுடைய எல்லாம் அறியும் தன்மை, வரம்பில் இன்பம் உடைமை, தூய உடம்பினனாதல் முதலிய எண்குணங்களும் பிரதான குண்டத்தில் இறைவனுக்குப் போல் அமைந்து விளங்கும். மேலும் பிரதான வேதிகையில் அமைந்தாசனம் முதல் உள்ள ஆசனங்கள் மேல் சர்வ தேவதா சொரூபமான இறைவனை வைத்து வணங்கும் இடமும் சிறந்த யாகசாலையேயாம்.

பதவின்யாசம்: மூலஸ்தானத்து இறைவனை ஸ்தாபிக்க ஏற்படுத்தும் இடத்தைக் குறித்தல். இதை ''ஆசார்யசில்பின சார்த்தம், பிரவி சேத்கர்ப கேககம்'' என்ற காரணாகம விதிப்படி. ஆசாரியரும்

சிற்ப சாஸ்திரியும் சேர்ந்து சிவன், அம்மாள், விநாயகர் முதலிய மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்வதற்குரிய இடத்தை வகுத்தலாம்.

**ஸ்தூபிஸ்தாபனம்**: இறைவன் சோதிவடிவினன் அவனைச் சோதி வடிவாக வணங்குவதற்காக வைக்கப்படுவது தீமஸ்தாபனமாம். ''இல்லக விளக்கது இருள் கெடுப்பது .................... நல்லகவிளக்கது நமச்சிவாயவே'' என்னும் தேவாரம் இங்கு நினைவு கூரத்தக்கது.

**இரத்தினஸ்தாபனம்**: நவரத்தினம், நவலோகம் முதலிய வஸ்துக்கள்,ஆரோக்கிய, வீரிய, பிரபா சக்திமயமான திரவியங்களைப் பீடத்தின் மேல் இட்டு, இந்திராதி லோக பாலகர்களைப் பூஜித்துப் பத்மாசனம் வரை பூசித்தல் இரத்தினஸ்தாபனம் ஆகும்.

**இயந்திரஸ்தாபனம்**: கோடுகளும், கோணங்களும் இறைவனின் மூல பிராசாத மந்திரங்களும் எழுதிப் பூசிக்கப்பட்ட யந்திரத்தை உரிய இடத்தில் வைத்தலாம். இது இறைவனுக்கு அருள் சக்தியை ஊட்டுவதாம்.

**பிம்பஸ்தாபனம்**: மூர்த்திகளை முறைப்படி வைத்தலாம்.

**அஷ்டபந்தனம்**: இறைவனின் அம்சமாகிய அஷ்டமூர்த்திகளின் அருள் பெற்று, அணிமாதி அஷ்டசித்திகளும் சித்தியடைந்த நிலையில் ஞானகிரியா சக்தியாகும். சங்கநிதி, பதுமநிதி, இரண்டும் தோன்றி பரம்பொருள் ஆணையால் சாம்பிராட்சிய லட்சுமியும், அதில் இருந்து பயன் தரும் வகையில் தனலட்சுமி, தான்யலட்சுமி, வித்தியா லட்சுமி,கீர்த்தி லட்சுமி, சௌபாக்கிய லட்சுமி, வீர லட்சுமி, சந்தான லட்சுமி, ஈறாக அஷ்ட லட்சுமிகளும் உருக் கொண்டு உயிர்களை உய்விக்கும் வண்ணம் உள்ள கதிகளைத் தருவது அஷ்டபந்தன சமர்ப்பணமாம்.

**சொர்ணபந்தனம்**: தங்கத்தால் செய்வது

**தைலாப்பியங்கம்**: விநாயகருக்கு தைலத்தினால் (எண்ணெய்) ஆசாரியரும், சிற்ப சாஸ்திரியாரும், அன்பர்களும் சாத்துதல், அன்பர்கள் தங்களிடத்தில் உள்ள ஆணவமல சம்பந்தத்தாலும், திரிகரணங்களாலும் ஏற்படும் குற்றம் நீங்கி சுத்தி அடைதற்பொருட்டு, எள்ளில் இருந்து எடுக்கப்பட்ட சுத்தமான நல்லெண்ணய்யை சுவர்ணத்தினால் தொட்டு இறைவனின் சிரசு, கண்கள், மூக்கு, செவி, தொப்புள், பாதம் முதலிய எல்லா அங்கங்களும் குளிரும்படி நிறையச் சாத்துவதாம்.

**பிம்ப சுத்தி**: தீட்சாயினர்கள் முதலானோரால் பரிசிக்கப்பட்ட தோஷநீக்கத்திற்காகவும், உஷ்ண சாந்திக்காகவும், பிம்பத்திற்குச் சுத்தம் உண்டாவதற்கு உதகம், கந்தம், புஷ்பம், பத்திரம், காசாயம், மிருத்தி, பீஜம், பல்லவம், இரத்தினம், லோகம், தாது, அஸ்திரம், ஓசதி, கவ்வியம், குசம், சிருங்கம் முதலிய 16 வகையான திரவியங்கள் நிரம்பிய கலசங்களைப் பூசித்து, ஓமம் செய்து பின்னர் மூர்த்திக்கு முறைப்படி பஞ்சாமிர்தாதி முதலியவைகளால் அபிஷேகம் செய்து அலங்கரித்துப் பூசித்தலாம்.

**பிரம்பிரஷாபந்தனம்**: கும்பாபிஷேக நிமித்தம் மூர்த்திகளுக்குக் காப்புக் கட்டுதலாம்.

**பூர்வசந்தானம்** : மூர்த்திக்குப் பக்கத்தில் ஆசாரியர் சாதகர் உட்கார்ந்து ஆதார சக்தி முதல் பஞ்சமாவரணம் வரை பூசித்து, கலை முதல் மந்திரம் இறுதியாகச் சங்கோபாங்கமாம அவயபவ பேதங்களாய் பிம்பத்திற்கு தர்ப்பை நுனியால் நியாசம் செய்தலாம்.

**விசேட திரவிய ஹோமம்**: இறைவனை அக்கினி வடிவிற் பூசித்தலாம். சகலவிதமான ஹோமத் திரவியங்களையும் இறை மயமாக்கி அதற்குரிய மந்திரங்களோடு பஞ்சப்பிரம மந்திரமும் வியர்கிருதியும் சேர்த்துச் சொல்லி அக்கனியில் ஹோமம் செய்தலாம்.

**ஸ்பரிசாகுதி**: யாகத்தில் உள்ள மூர்த்தி, மூர்த்தீஸ்வரன், மந்திரம் ஆகியவைகளைப் பூஜித்து ஹோமம் செய்த முறைப்படி மூல மூர்த்தியிடம் சென்று அந்தந்த ஸ்தானங்களில் முறையே தொடர்புபடுத்தலாம்.

**ஸ்ரோத்திர வந்தனம்**: ஆசாரியர் மூர்த்திபர்கள் செய்த தொடர்புகளிற் கூடுதல், குறைவு ஏற்பட்டால் அவைகளைக் கருணையினாற் பூர்த்தியாக்கி அருள் செய்ய வேண்டும் என்று பிராத்தித்தலாம்.

**ஆசாரிய பூஜை**: குருமாருக்கும், சர்வ சாதகர்களுக்கும் உடை, உத்தரீயம், உஷ்ணீசம், உருத்திராஷம், மோதிரம், விபூதிப்பை முதலிய உபசாரங்கள் கொடுத்து மகிழ்வித்தலாம்.

**அக்கினி சம்யோஜனம்:** பிரதானகுண்டத்தில் பூஜை செய்து எடுத்து அக்கினி மூர்த்தி முதலானவைகளைப் பிரதான ஆசாரியர் மூலம் குண்டத்திற் சேர்த்தலாம்.

**பூரணாகுதி:** ஓமத்தைப் பூர்த்தி செய்வதற்காகச் செய்யப்படும் கிரியை.

**தீபாராதனை :** சோடசோபசார விசேட பூசையாம்.

**வேத கோசம்:** வடமொழி வேதம் முதலியன ஓதல், தமிழ் வேதம்.

**ஸ்தூபிகும்பாபிஷேகம்:** விமானங்களில் உள்ள ஸ்தூபிக்கு அபிஷேகம் செய்தல்.

**மகா கும்பாபிஷேகம்:** அர்ச்சகர், ஸ்தானிகர் ஒருவரை நந்தி கணத் தலைவராகப் பூஜை செய்து, அவருக்கு வேண்டிய உபசாரங்கள் செய்து அலங்கரித்து, அவரது சிரசின் மீது பிரதான குடத்தை வைத்து, சர்வசாதகர், பிரதான குரு, மூர்த்திபர்கள் முதலியோர் கும்பத்தை தொட்டுக் கொண்டு, எஜமான்கள், பக்த ஜனங்கள் சூழ்ந்து புஷ்பாஞ்சலி, வேதம், தேவாரம், தோத்திரம், சங்கு, மங்கள வாத்தியம், பேரி, மணி முதலிய வாத்திய கோசங்களுடன் பஜனை செய்து பக்தியுடன் மெதுவாக வீதிவலம் வந்து, மூலாலயம் சென்று, ஆசனத்தின் மீது கும்பங்களை வைத்து, கும்பத்திற்கும் மூர்த்திக்கும் நாடிசந்தானம் செய்து தொடர்பேற்படுத்தி, உரிய முகூர்த்தத்தில் இறைவனை ஆவாகனம் செய்து, மூலமந்திரம் உச்சரித்துப் பதமந்திரத்துடன் பக்தர்கள் ஹரஹர என்ற சத்தம் முழங்க, வேத சிவகாமம், தேவார, புராண திருமுறைகளைப் பக்தர்கள் ஓத, சகலவாத்திய கோசங்களும் ஒலிக்க, மகா கும்பாபிஷேகத்தைச் செய்து எஜமானர்களும் சகல ஜீவராசிகளும் உய்தி அடையப் பிரார்த்தித்துச் செய்வதே மகாகும்பாபிஷேகமாகும். வர்த்தனீ குடும்பங்களை ஆவுடையாரைச் சுற்றிலும் அபிஷேகித்து, மகாநைவேத்திய உபசாரம் செய்து, அகண்ட தீபம் வைத்துப் பிரார்த்தித்த பின்னர் தேவர்களின் பூசைக்காக மூன்றே முக்கால் நாழிக்கை நாழிகைக்கு கதவை சாத்தி வைக்கவும்.

**தசதர்சனம்:** கதைவைத் திறந்து பசு, ஆசாரியர், வேதபாரகர், கண்ணாடி, பூரணகும்பம், தீபம், கன்னிகை, சன்னியாசி, சுமங்கலி, எஜமான், பக்தசனம் முதலியோரைச் சகலவாத்திய உபசாரங்களுடன் தனித்தனியே தரிசிக்கச் செய்தல்.

**பிராயச்சித்த ஆகுதி:** இது யாகத்தில் செய்வது.

**ஆசார்ய உற்சவம்:** குருவழிபாடு

**எஜமானுக்குப் பலப்பிராப்தி:** எஜமானுக்கு கும்பாபிஷேகப் பலனை ஒப்புவித்தல்.

இன்னும் இதைப்பற்றிய விரிவுகள் அநேகம் உண்டு •

---

## பவுர்ணமியின் தனிச்சிறப்பு

சந்திரன் படிப்படியாக, ஒளி குறைந்து, முற்றுமாக, நம் கண்ணுக்குத் தென்படாத தினத்தை அமாவாசை என்றும், அதன் பிறகு, படிப்படியாக ஒளி கூடி, முழு இரவும் முழுமையாகத் தென்படும் நாளை பவுர்ணமி என்றும் கூறுகிறோம். பகலில் சூரியனும்; இரவில் சந்திரனுமாக, ஒரு நாளில் 24 மணி நேரமும், விண் ஒளிகள், நம்மீது, இயற்கையாகவே படர்வது பவுர்ணமி அன்று மட்டுமே. இதனால் தான் பரம்பொருள் வழிபாட்டில் மற்ற நாட்களில் செய்யப்படும் வழிபாடுகளை விட பவுர்ணமி பூசையை மிகச் சிறந்ததாகப் போற்றி வந்திருக்கின்றனர். பொதுவாக, ஒவ்வொரு திதியையும், குறிப்பிட்ட ஒரு தெய்வ வழிபாட்டுக்கே மிக உகந்ததாக கருதப்படுவதை அறிவோம். உதாரணமாக, சதுர்த்தி வினாயகருக்கும், சஷ்டி முருகனுக்கும், அஷ்டமி, நவமி அம்மனுக்கும், ஏகாதசி விஷ்ணுவுக்கும், திரயோதசி, சதுர்த்தசி சிவபெருமானுக்கும் ஏற்றதாகக் கூறப்படுகிறது. இதற்கு மாறாக, பவுர்ணமியை மட்டும், சிவனுக்கும், விஷ்ணுவுக்கும், முருகனுக்கும் அன்னை பராசக்திக்கும், லக்ஷ்மிக்கும் என்று பல தெய்வ வழிபாடுகளுக்கும் மிக மேன்மையாகக் கருதுவது குறிப்பிடத்தக்கது. பவுர்ணமியில் பூசை பண்ணியதும் பலன் என்று கூறுமளவுக்கு முழுநிலவன்று வழிபடுவது மிக்க சிறப்புடையது.

காலத்தைக் கணக்கிடும் பல முறைகளில், சூர்யமானம், சந்திரமானம் என்பவை மிக முக்கியமானவை. பொதுவாக, வடபாரத மாநிலங்களில் தான், சந்திரனின் நகர்வை அடிப்படையாகக் கொண்டாலும், சூரியனின் நகர்வைப் பின்பற்றும் தழிகத்திலும் பலமுக்கிய செயல்பாடுகளுக்கு நிலவின் நிலையும் கருதப்பட்டிருக்கிறது. குறிப்பாக, இறைவழிபாட்டில், அதுவும், ஆலய வழிபாட்டில் பவுர்ணமியும் அதை ஒட்டிய நக்ஷத்திரமுமே மிகவும் மேன்மையாகக் கருதப்பட்டிருக்கின்றன. சித்திரைத் தேர் முதல், பங்குனிக் காவடி வரை, லட்சக்கணக்கானோர் கலந்து கொள்ளும் மிகப்பெரிய திருவிழாக்கள் அநேகமாக முழுநிலவு நாளன்றே நடைபெறுகின்றன. இத்தகு முக்கிய திருவிழாக்களில் ஒன்று தான் திருவண்ணாமலையில் திருக்கார்த்திகையன்று நடைபெறும் தீபவிழாவும் ஆகும். அண்மையில் பிரபலமாகியுள்ள கிரி வலம் வரும் வழிபாடும் பவுர்ணமியின் மேன்மை கருதியே.



# சைவ தத்துவங்களில் எண்ணும் எழுத்தும் குறிப்பவை

**ஒன்று**

ஆண்டவன்
அறிவு
முக்தி

**இரண்டு**

இரு செல்வங்கள் - கல்வி, பொருள்
இரு அறங்கள் - இல்லறம், துறவறம்
இரு தோற்றங்கள் - சரம், அசரம்
இரு வினைகள் - நல்வினை, தீவினை
இரு பிறப்புக்கள் - இம்மை, மறுமை

**மூன்று**

மூன்று புரம் - பொன்மதில், வெள்ளி மதில், இருப்பு மதில்
மூன்று பலை(காய்) - கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய்
மூன்று (திரி)கடுகம்(மருந்து) - சுக்கு, மிளகு, திப்பிலி
மூன்று தானம் - உத்தம தானம், மத்திம தானம் ,அதம தானம்
மூன்று குணம் - சாத்துவீக குணம், இராச(ச) குணம், தாமத குணம்
மூன்று உயிர்த்தீ - உதராக்கினி, காமாக்கினி, கோபாக்கினி.
மூன்று மொழிகள் - பழித்தல், புகழ்தல், மெய்கூறல்.
மூன்று சுடர்கள் - சூரியன், சந்திரன், அக்கினி.
மூன்று குற்றங்கள் - காமம், வெகுளி, மயக்கம்.
மூன்று உலகங்கள் - பூமி, அந்தரம், சுவர்க்கம்.
மூன்று தொழில்கள் - படைத்தல், காத்தல், அழித்தல்.
மூன்று காலங்கள் - இறந்த காலம், எதிர் காலம், நிகழ் காலம்.
மூன்று பொறிகள் - வாக்கு, காயம், மனம்.
மூன்று பிறப்புக்கள் - உம்மை, இம்மை, மறுமை.
மூன்று பாவபுண்ணிய பழக்கங்கள் - செய்தல், செய்வித்தல், உடன்படல்.
மூன்று நாடிகள் - வாத நாடி, பித்த நாடி, சிலேத்துமம். நாடி

## நான்கு

நான்கு உபாயங்கள் - சாமம், பேதம், தானம், தண்டம்.

நான்கு புண்ணிய தோற்றங்கள் - தவம், ஒழுக்கம், கொடை, கல்வி.

பெண்டிர் குணம் நான்கு - அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு.

ஆடவர் குணம் நான்கு - அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி

நான்கு இழிச்சொல் - குறளை, பொய், கடுஞ்சொல், பயனிலசொலல்.

நாற் கதி - தேவர், மானுடர், விலங்கு, நரகர்.

## ஐந்து

ஐந்து துரக கதி - மல்லகதி, மயூரகதி, வானரகதி, வல்லியகதி, சரகதி.

ஐந்து உணவு - கடித்தல், நக்கல், பருகல், விழுங்கல், சுவைத்தல்.

ஐம் பூதங்கள் - நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம்.

ஐந்து வேள்விகள் - தேவயாகம், பிரமயாகம், பூதயாகம், பிதிர்யாகம், மானுடயாகம்.

ஐந்து தொழில்கள்(இறைவன்) - படைத்தல், காத்தல், அழித்தல்., மறைத்தல், அருளல்

ஐந்து அவத்தைகள் - சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம்.

ஐந்து வினாக்கள் - அறியான் வினாவல், அறிவொப்புக்காண்டல்,
ஐயந்தீர்தல், அவனறிவுதான் கோடல், மெய்யவற்குக் காட்டல்.

ஐந்து கர்ம இந்திரியங்கள் - வாக்கு, பாணி, பாதம், பாயுரு, உபத்(ஸ்)தம்.

ஐந்து கர்ம இந்திரிய விடயங்கள் - வசனம், கர்மம், கமனம், விசர்ச(ஜ)னம், ஆநந்தம்.

ஐந்து ஞான இந்திரியங்கள் - துவக்கு, சட்சு(க்ஷு), சுரோத்திரம், சிகு(ஜிஹ்)வை, ஆக்கிராணம்.

ஐந்து தன் மாத்திரைகள் - சப்த, பரிச, ரூப, ரச, கந்தம்.

ஐந்து அந்தக் கரணங்கள் - மனம், புத்தி, சித்தம், அகங்காரம், உள்ளம்.

ஐந்து வாயுக்கள் - பிராணண், அபானன், வியனன், உதானன், சமானன்.

ஐந்து உப வயுக்கள் - நாகன், கூர்மன், கி(க்)ருகரன், தேவதத்தன், தநஞ்சயன்(தனஞ்சயன்).

ஐந்து ஆச்ரயங்கள் - அமராச்சரயம், விபச(ஜ)னாச்ரயம், ச(ஜ)லாச்ரயம், மலாச்ரயம், சுக்கிலாச்ரயம்.

ஐந்து கோசங்கள் - அன்னமயம், பிராணமயம், மனோமயம், விக்ஞானமயம், ஆநந்தமயம்.

## ஐந்து வடிவங்களும், திசைகளும்

| பெயர் | தொழில் | திசை | வடிவம் | நிறம் |
|---|---|---|---|---|
| சத்யோ ஜாதம் | படைத்தல் | மேற்கு | நிலம் | பால் நிறம் |
| வாமதேவம் | காத்தல் | வடக்கு | நீர் | சிவப்பு நிறம் |
| அகோரம் | அழித்தல் | தெற்கு | நெருப்பு | அஞ்சன (கறுப்பு) நிறம் |
| தற்புருடம் | மறைத்தல் | கிழக்கு | காற்று | மஞ்சள் குங்கும நிறம் |
| ஈசானம் | அருளல் | வடகிழக்கு | ஆகாயம் | படிக நிறம் |

## ஆறு

ஆறு வேதாங்கங்கள் : சிட்சை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சந்தோவிசிதம், சோதிடம்.

ஆறு உட்பகைகள் : அவா, வெகுளி, இவறல், மயக்கம், செருக்கு, பொறாமை
(காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம்.)

ஆறு புறச்சமயங்கள் : உலோகாதயம், பௌத்தம், ஆருகதம், மீமாஞ்சம், மாயாவாதம், பாஞ்சராத்திரம்.

ஆறு அகச்சமயங்கள் : சைவம், பாசுபதம், மாவிரதம், காளாமுகம், வாமம், வைரவம்.

## ஏழு

நாட்டுக்கு வரும் குற்றங்கள் ஏழு : விட்டில், தொட்டியர், பன்றி, கள்வர், அவமழை, யானை, கிளி.

ஏழு முனிவர் : அகத்தியன், புலத்தியன், அங்கிரா, கௌதமன், வசிட்டன், காசிபன், மார்க்கண்டன்.

ஏழு நரகம் : கூடசாலம், இரௌரவம், கும்பிபாகம், பூதி, அள்ளல், செந்து, மகாபூதி.

ஏழு கீழுலகம் : அதலம், விதலம், சுதலம், தராதலம், இரசாதலம், மகாதலம், பாதால(ள)ம்.

ஏழு மேலுலகம் : பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம்,மகாலோகம், சனலோகம், தவலோகம், சத்தியலோகம்.

ஏழு கடல் : உப்புக்கடல், கறுப்பஞ்சாற்றுக் கடல், மதுக் கடல், நெய்க்கடல், தயிற் கடல்,
பாற் கடல், சுத்த நீர்க் கடல்.

### ஏழு திரைகள் :

| | | |
|---|---|---|
| கருப்பு | – | மாயா சக்தி |
| நீலத்திரை | – | கிரியா சக்தி |
| பச்சை | – | பரா சக்தி |
| சிவப்பு | – | இச்சா சக்தி |
| பொன்வண்ணம் | – | ஞான சக்தி |
| வெண்மை | – | ஆதி சக்தி |
| கலப்பு | – | சிற்சக்தி |



### ஏழு பிறப்பு :

ஐந்து மாதம் வரை – குழவிப் பருவம்.
அவயவங்கள் உற்பத்திக் காலம்.
பிண்டம் வெளிப்பட்ட காலம்.
குழந்தைப் பருவம்.
பாலப் பருவம்.
குமரப் பருவம்.
முதுமைப் பருவம்.

### இதில் சூட்சமப் பிறப்பு 7 :

சாக்கிரம்
சொப்பனம்
சுழுத்தி
சாக்கிரத்தில் சொப்பனம்
சாக்கிரத்தில்சுழுத்தி
சொப்பனத்தில் சொப்பனம்
சொப்பனத்தில் சுழுத்தி

### ஏழு தாதுக்கள் :

இரதம், உதிரம், எலும்பு, தோல், இறைச்சி, மூளை, சுக்கிலமாகிய விந்து.

### எட்டு

எட்டு சித்திகள் : அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம்

எட்டு யோகாங்கங்கள் : இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தியானம், தாரணை, சமாதி

எட்டு தருமாங்கங்கள் : அறமையப் படாமை, விருப்பமின்மை, வெறுப்பின்மை, மயக்கமின்மை, பழியை நீக்கல், அழிந்தோரை நிலை நிறுத்தல், அறுசமயத்தோர்க்கு அன்பு, அறம் விளக்கல்.

எட்டு மெய்ப்பரிசங்கள் : தட்டல், பற்றல், தடவல், தீண்டல், குத்தல், வெட்டல், கட்டல், ஊன்றல்.

எட்டு உடற்குறைகள் : குறள், செவிடு, மூங்கை, கூன், மருள்(அலி), குருடு, மா(விலங்கு உறுப்புடையது), உறுப்பில்லாப் பிண்டம் (ஊனமுற்றது).

### ஒன்பது

ஒன்பது தாரணை : நாம தாரணை, மாயா தாரணை, வச்சிர தாரணை, சித்திர தாரணை, சத்த தாரணை, வத்து தாரணை, சதுரங்க தாரணை, செய்யுள் தாரணை, எண்பொருட்டாரணை (நினைவு, குறைவு ஆகிய).

பெரியோருக்குச் செய்யும் புண்ணியம் ஒன்பது : எதிர்கொளல், பணிதல், ஆசனத்திருத்தல், கால் கழுவல், அருச்சித்தல், தூபங்காட்டல், தீபங்காட்டல், துதித்தல், அமுதூட்டல்.

# திருமுறைகள்



திருமுறைகள் மொத்தம் பன்னிரண்டு. சிவஞானம் பற்றிய சாத்திரங்கள், மெய்கண்ட சாத்திரங்கள் மொத்தம் பதினான்கு.

திருமுறைகள் ஓதத் தொடங்கும்பொழுது, பிடியதன் உருஉமை, நங்கடம்பனைப் பெற்றவள், சமர சூரன்மாவை - என்று தொடங்கும் மூன்று திருப்பாடல்களையும் பாடிவிட்டு, அதன் பின்னரே திருமுறைகளை ஓதுதல் மரபு.

தில்லையில் மறைந்துகிடந்த திருமுறைகளைக் கணபதியின் கருணையினால் உலகிற்கு எடுத்தருளித் தொகுத்து வழங்கியவர் நம்பியாண்டார் நம்பி ஆவார்.

பன்னிரண்டாம் திருமுறை ஆகிய பெரிய புராணம் அடியார்கள் வாழ்க்கை விரித்துக் கூறும் வரலாற்று நூல் ஆகும். அதற்குத் திருத்தொண்டர்புராணம் என்றும் பெயர். அதை அருளியவர் சேக்கிழார் பெருமான்.

சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகை (ஏழாம் திருமுறை)யை முதல் நூலாகவும், நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதி (பதினோராம் திருமுறை)யை வகை நூலாகவும், பெரிய புராணத்தை விரிநூல் ஆகவும் கூறுவர். இவற்றுள் முதல் நூலைத் தொகைநூல் என்றும் சொல்வர். தொகை நூலும் விரிநூலும் இறைவனார் திருவாயினாலேயே அடியெடுத்துக் கொடுத்துத் தொடங்கி வைக்கப் பெற்றன.

திருமுறைகள் 12ல் முதல் 3 திருமுறைகள் திருஞானசம்பந்தர் அருளியவை. 4,5,6 ஆகிய அடுத்த 3 திருமுறைகள் அப்பர் பெருமான் அருளியவை. ஏழாம் திருமுறை சுந்தரர் அருளியது.

எட்டாம் திருமுறையாவது மணிவாசகப் பெருந்தகை அருளிய திருவாசகம், திருக்கோவையார் இரண்டும்.

ஒன்பதாம் திருமுறை பலர் பாடிய பாடல்கள் கொண்டது - திருவிசைப்பா, திருப்பல்லாண்டு இரண்டும் இந்தத் திருமுறையில் இடம் பெறும்.

பத்தாம் திருமுறை - திருமூலர் அருளிய திருமந்திரம் - மூவாயிரம் பாடல்கள் கொண்டது.

பதினோராம் திருமுறையில் பலர் பாடிய பல்வகைப் பாடல்கள் இடம் பெறும்.

பன்னிரண்டாம் திருமுறை, சேக்கிழார் அருளிய பெரிய புராணம் ஆகும்.

சிவபெருமான் இயற்றிவழங்கிய பாடல் பதினோராம் திருமுறையின் முதற்பாடலாக அமையும். இயற்றியவர் திருவாலவாயுடையார் என்ற குறிப்புடன் இடம் பெறும். அப்பாடலுக்குத் திருமுகப்பாசுரம் என்று பெயர். தன் அன்பர் பாணபத்திரருக்காக, இறைவன், சேரமான் பெருமாள் நாயனாருக்கு எழுதியனுப்பிய கடிதம் (திருமுகம்)தான் அந்தப் பாடல்.

திருமுறைப்பாடல்களைக் கண்டெடுத்துத் தொகுத்தருளிய நம்பியாண்டார் நம்பியின் பாடல்களும் பதினோராம் திருமுறையில் இடம் பெறுகின்றன. திருஞானசம்பந்தர் மீது ஆறு சிற்றிலங்கியங்களும், திருநாவுக்கரசு மீது ஒன்றும் அவற்றில் குறிப்பிடத்தக்கவை. நம்பியாண்டார் நம்பி அருளிய திருத்தொண்டர் திருஅந்தாதியும் 11ம் திருமுறையில் இடம் பெறும்.

ஆனைமுகப் பெருமானைப் போற்றும் மூன்று மாலைகள் பதினோராம் திருமுறையில் உள்ளன. அவை கபிலதேவர், அதிரா அடிகள், நம்பியாண்டார் நம்பி ஆகிய மூவரால் அருளப்பெற்றன. (Each one)

திருமுறை ஆசிரியர்களில் இடம் பெறும் ஒரே பெண்பாற்புலவர் காரைக்கால் அம்மையார் ஆவார். (வைணவத்திலும் திவ்வியப் பிரபந்த பாடல்களை - பாசுரங்களை - வழங்கி அருளிய ஆசிரியர்கள்

மொத்தம் 12 பேர். அவர்களை ஆழ்வார்கள் என்பர். அவர்களில் ஆண்டாள் என்ற கோதை நாச்சியார் மட்டுமே பெண்பாலாகும்.

### பஞ்சபுராண மரபு

திருமுறை நூல்களில் வெண்பா வடிவில் உள்ள திருப்பாடல்கள் திருவாசகத்திலும் பதினோராம் திருமுறையிலும் மட்டுமே இடம் பெற்றுள்ளன.

### சிவன் – இறைவன் தன்கையால் எழுதியருளிய திருவாசகம்

சிவபெருமானைப் பூசை செய்யும் போது வழிபாடு செய்யும் போதும் அநுட்டான விதிகளை மேற்கொள்ளும் போதும், 'பஞ்ச புராணப் பாடல்கள்' ஓதுவது மரபாகும். தேவாரம் - திருவாசகம் - 1, திருவிசைப்பா- 1, திருப்பல்லாண்டு - 1, பெரியபுராணம் - 1 என்று இந்த வரிசையில் மொத்தம் ஐந்து பாடல்கள் பாடபெறுவது அம்மரபு. அம்மரபில், பாடல்கள் 'விண்ணப்பம் செய்யப்பெற்றன' என்று கூறுவர்.

மார்கழி மாதத்தில் திருவாதிரைக்கு முன் 'திருவெம்பாவைக்காலம்' தொடங்குகிறது என்பர். பத்தாவது நாள் முழுமதி (பௌர்ணமி - Full Moon) நாளாகிய திருவாதிரை அமையும்

இக்காலத்தில், திருவாசகத்தின் ஒரு பகுதியாக திருவெம்பாவையை மட்டுமே ஓத (பாராயணம் செய்ய) வேண்டும் என்பர். அது சமயம் மற்ற திருமுறைப் பாடல்கள் காப்பிடப் பெற்ற (Frozen) என்பது வழக்கம்.

திருவாசகம் - இறைவனே கையால் எழுதிய பெருமை உடையது. திருவாசகத்தை முதலில் ஜி.யூ. போப் என்ற ஆங்கிலப்பாதிரியார் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.

சிவபெருமானுக்கு எண்ணற்ற சிறப்புப் பெயர்களை நூல்கள் வழங்கும். இவற்றுள், தமிழ்ப்புலவர்கள் கொண்டாடி மகிழும் பெயர், 'பிறவாயாக்கைப் பெரியோன்' என்பதாகும். இப்புகழ்மொழியை வழங்கியவர் சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோ அடிகள் ஆவார்.

சைவத்தலங்களில் - பாடல் பெற்ற சிவத்தலங்கள் மிகவும் சிறப்புக்குரியவை. அவற்றில் மிகமிகச் சிறப்பித்துக் கொண்டாடப்பெறும் தலங்கள் நான்கு. அவையாவன தில்லை, திருவண்ணாமலை, திருவாரூர், காசி என்பனவாம். திருவாரூரிற் பிறந்தாலே முத்தி கிட்டும். தில்லையைக் கண்டுதொழ முத்தி தரும். காசியில் உயிர்துறக்க முத்தி வரும். திருவண்ணாமலையை நினைத்தாலே முத்தி கிடைக்கும் என்பது மரபு.

பொன்னம்பலம் என்பது தில்லைச் சிற்றம்பலம் ஆகிய சிதம்பரத்தையும் வெள்ளையம்பலம் என்பது திருஆலவாய் ஆகிய மதுரையையும் குறிக்கும்.

இறைவன் திருக்கூத்து (நடனம்) மேற்கொள்ளும் இடங்கள் ஐந்து ஆகும். அவையாவன -

1. ***பொன் அம்பலம் - கனகசபை (தில்லை - சிதம்பரம்)***
2. ***வெள்ளி அம்பலம் - ரஜதசபை (மதுரை - கூடல்)***
3. ***இரத்தின சபை - திருஆலங்காடு***
4. ***தாமிர சபை - திருநெல்வேலி***
5. ***சித்திர சபை - திருக்குற்றாலம்***

ஆடல் வல்லான் ஆகிய நடராசப் பெருமான் திருமஞ்சனம் (அபிஷேகம்) கொள்ளும் மிக உயர்ந்த நாள்கள் ஆறு ஆகும்.

1. ***மார்கழித் திருவாதிரை (முழுமதி நாள்)***
2. ***மாசிச் சதுர்த்தசி***
3. ***சித்திரைத் திருநாள்***
4. ***ஆனி உத்தரம்***
5. ***ஆவணிச் சதுர்த்தசி***
6. ***புரட்டாசிச் சதுர்த்தசி***

என்ற ஆறு நாள்கள் நடராசர் அபிஷேகச் சிறப்பு நாள்கள் ஆகும். மேற் கூறிய நாள்கள் முறையே

*1. விடியல்வேளை (வைகறை)*

*2. காலசந்தி*

*3. உச்சிக்காலம்*

*4. திருஅந்திக்காப்பு*

*5. இரண்டாம் காலம்*

*6. அர்த்தசாமம்*

என்று கூறப்பெறும். மனித உலகின் ஒரு ஆண்டுக்காலம், தேவர் உலகில் ஒரு நாள் என்ற கணக்கினடியாக இம்மரபு கூறுவர்.

### முருகன் புகழ் பாடும் முருகவேள் பன்னிரு திருமுறை

சிவபெருமான் புகழைப்பேசும் தமிழ்ப் பாடல்கள் திருமுறைகள் என்று போற்றப் பெறுவதுபோல், முருகப் பெருமானைப்பாடி மகிழும் தமிழ்ப் பாடல்களும் தொகுக்கப் பெற்றது. முருகவேள் பன்னிரு திருமுறை என்று வகுக்கப் பெற்றுள்ளன. அவ்வரிய திருப்பணியைச் செய்தருளியவர் தணிகைமணி ஸ்ரீமான். வ.சு. செங்கல்வராய பிள்ளை அவர்கள்.

சைவத் திருமுறைகளில் 12வது திருமுறை சிவனடியார் வரலாறு கூறும் பெரியபுராணம் ஆவது போலே, முருகவேள் திருமுறைகளின் 12வது திருமுறையும் வரலாற்று நூலாய் அமையும். முருகன் அருள்பெற்ற அடியார்களின் வரலாற்றைப் பாடும் அத் திருமுறைக்கு சேய்த்தொண்டர் புராணம் என்று பெயர். அதனை இயற்றி அருளியவர் வரகவி சொக்கலிங்கனார் என்ற புலவர்.

முருகப் பெருமானைப் போற்றும் சங்க இலக்கியமாகிய திருமுருகாற்றுப்படை, பதினோராம் திருமுறையில் இடம் பெற்றுள்ளது.

### முக்கண்களாக உள்ள மூன்று புராணங்கள்

புராணங்கள் மொத்தம் பதினெட்டு என்றும் அவற்றைத் தொகுத்து வழங்கியவர் வியாச முனிவர் என்றும் கூறுவர். வியாசர் தொகுத்த பதினெண் புராணங்களில் சைவம் பற்றியன பத்து நூல்கள் என்ப. அவையாவன, சைவம், மார்க்கண்டேயம், பவிடியம், இலிங்கம், வராகம், காந்தம், வாமனம், கூர்மம், மச்சம், வாயவியம் என்பனவாம்.

சைவ சமயத்தார் போற்றிக் கொண்டாடும், பூசிக்கும், புராணங்கள் மூன்று. அவை இறைவனாகிய சிவபெருமானின் முக்கண்களை ஒத்தவை என்பர் அறிஞர். அடியார்களின் அக இருளை நீக்கும் பெரியபுராணம், ஞாயிறு ஆகிய வலக் கண்ணை ஒக்கும். சந்திர குலத்தில் வந்த பாண்டிய மரபில் அவதாரம் செய்த சிவபிரானின் திருவிளையாடல்களைப் பாடும் திருவிளையாடற் புராணம், திங்கள் ஆகிய இடக் கண்ணை ஒக்கும். நெற்றிக் கண்ணில் இருந்து சோதிப்பிழம்பாய்த் தோன்றிய முருகன் வரலாற்றைக் கூறும் கந்தபுராணம், நெற்றிக்கண் ஆகிய நெருப்புக் கண்ணை ஒத்ததாகும்.

மதுரையம்பதிக்குத் தலபுராணம் என்று திருவிளையாடற்புராணம் பேசப்பெறும். இந்நூலில் ஆடவர்க்குரிய அங்க இலக்கணம் (சாமுத்திரிகா லட்சணம்) மிகச்சிறப்பான பகுதியாக அமைந்துள்ளது.

### நால்வர் நினைவுக்கு நற்பாடல்கள் இரண்டு

சைவ சமயத்திற்கு உற்ற மற்றும் ஏற்ற ஆசிரியர்கள் (குரவர் = Plural of குரு) நால்வர் ஆவர். அவர்களின் வாழ்நாள் எல்லையையும் அவர்கள் திருவருளிற் கலந்து முத்தி பெற்றநாள் நட்சத்திரக்குறிப்பையும் மறவாது நிறைவிற்கொண்டு வழிபாடு செய்து, சிந்தித்து, பயன்பெற வேண்டும் என்பது அதீத சைவர்களின் நெறி மரபு. அதற்குத் துணையாக, இரு பாக்களைப் போற்றி வழங்குவர்.

*அப்பருக்(கு) எண்பத்தொன்(று); அருள்வாதவூரர்க்குச்*
*செப்பிய நாலெட்டில் தெய்வீகம் - இப்புவியில்*

*சுந்தரர்க்கு மூவாறு; தொல்ஞான சம்பந்தர்க்கு*
*அந்தம் பதினாறு அறி*
*சித்திரைச் சதயம் அப்பர்; சிறந்தவை காசி மூலம்*
*அத்தரைப் பணிசம் பந்தர்; ஆனிமா மகத்தில் அந்த*
*முத்தமிழ் வாம வூரர்; முதியநல் ஆடி தன்னில்*
*சுத்தமாம் சோதி நாளில்; சுந்தரர் கயிலை சேர்ந்தார்.*

என்ற இருபாடல்களும் சைவ அன்பர்கள் நினைவிற் கொள்ளும் பாடல்கள் ஆகும்.

சமயாச்சாரியர்கள் நால்வரின் சிறப்பை போற்றும் ஒப்பற்ற நூல் 'நால்வர் நான்மணிமாலை' ஆகும். இதை இயற்றியவர் துறைமங்கல சிவப்பிரகாச சுவாமிகள் ஆவர்.

நால்வர் மீதும் அரிய, சித்தாந்தக் கூடு உள்ளடங்கிய பிள்ளைத்தமிழ் நூலும் இடம் பெற்றுள்ளது. அதனை அருளியவர் காரைக்குடி சிவபூசைச் செல்வர் 'சிந்தாந்தம்' சொக்க ஐயா அவர்கள்

திருமுறைகள் 'தோத்திர நூல்கள்' என சைவ சித்தாந்த நூல்கள் 'சாத்திர நூல்' என்றும் வழங்கும் மரபு உண்டு.

திருமுறைகள் ஓதத்தொடங்கும் முன்பு 'திருச்சிற்றம்பலம்' என்று கூறித் தொடங்குதலும் நிறைவு செய்யும் பொழுது, வாழ்த்துப்பாடியபின் 'திருச்சிற்றம்பலம்' என்று நிறைவு செய்தலும் மரபு.

கோயில் என்று பொதுவாகச் சொன்னால் சைவர்கட்குத் தில்லைப் பெருங்கோயிலை (சிதம்பரம்) வைணவர்கட்குத் திருவரங்கத்தை உணர்த்துவதாகும்.

நட்சத்திரங்கள் மொத்தம் இருபத்து ஏழு ஆகும். அவற்றில் 'திரு' என்ற அடைமொழி இரண்டு திரு ஆதிரையும் திரு ஓணமும் ஆகியவை . இவை முறையே சிவபிரானுக்கும் திருமாலுக்கும் உகந்தவையாகும்.

நாயன்மார் திருக்கூட்டமாகிய அறுபத்து மூவர் தனியடியார்களில் பெண்மக்கள் மொத்தம் மூவர். அவர்கள் - காரைக்கால் அம்மை மங்கையர்க்கரசியார், இசைஞானியார் என்னும் மூவரும் ஆவர்.

கயிலைக் கடவுள் ஆகிய சிவபிரான், இரண்டு பேரைத் தோழர்களாய் கொண்டார். ஒருவர் இருநிதிக் கிழவனாகிய பெரும் பொருட்செல்வர் குபேரன். மற்றொருவர், நிறைந்த தமிழ்ப்புலவச் செல்வராகிய சுந்தரமூர்த்தி அடிகள். (நால்வர் நான்மணிமாலை) ●

# சிவசொரூபம்

***நாம்** எப்படி வாழ வேண்டும் என்பதைக் காட்டுவதே, சிவசொரூபம்.*

*ஈசனின் ஜடாமுடியில் உள்ள சந்திரன் நம்முடைய இன்பமும், துன்பமும் மாறி மாறி வளர்பிறையாகவும், தேய்பிறையாகவும் வரும் என்பதைக் காட்டுகிறது. அங்கே இருக்கும் கங்கை, எப்போதும் தூய்மையாக இருக்க வேண்டும் என்பதைக் குறிக்கிறது. ஆசாபாசங்கள் நம்மை அலைக்கழித்தாலும் நம்முடைய மனம் அதனால் கெட்டுப் போய் விடக்கூடாது.*

*ஒவ்வொரு நிமிடமும் நம்மைப் பாவக் குழியில் தள்ள நச்சுப் பாம்பாக சூழ்நிலை சுற்றிக் கொண்டு காத்திருக்கிறது. ஆனால் அந்த விஷம் உள்ளே இறங்க நாம் விட்டு விடக் கூடாது. இதையே பரமனின் கழுத்தைச் சுற்றிய பாம்பும் அவர் விஷத்தைக் கண்டத்தில் தேக்கி வைத்திருப்பதும் உணர்த்துகிறது.*

*மிருக உணர்ச்சிகள் நம்மை பாதிக்கலாம். ஆனால் அவற்றிலிருந்து நீங்கிய, உயர்ந்த மனித உணர்வுடன் நாம் வாழ வேண்டும் என்பதை புலித்தோல் உடை அறிவுருத்துகிறது.*

*தேகத்தில் பாதியாக தேவியை வைத்துக் கொண்டிருந்தாலும் சிவபெருமான் காமத்தை வென்றவர். காமனையே எரித்தவர். அதைப் போல நாமும் உலகியலைப் பற்றி வாழ்ந்தாலும், காமத்துக்கு அடிமையாகாமல் அதைத் தூய்மைப்படுத்தி ஆன்மிகமாக வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.*



# முன்னோர் சொல் வேதம்

## சிவ தோற்றத்தின் அடையாளங்கள்

மொகஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பெற்ற தியானத்திலுள்ள பசுபதி சின்னத்தின் மூலமே சிவவழிபாடு. அப்பகுதியிலேயே முதன்முதலில் சிவவழிபாடு நடைபெற்றிருக்கலாம் என்பது ஆராய்ச்சியாளர்களின் கூற்றாகும். சிவனை வழிபடும் பழக்கம் பழங்காலத்திலும் நம்மிடம் இருந்துள்ளது. சிவனை வழிபடும் இடங்களிளெல்லாம் திராவிடர்களின் பதிவுகள் இருக்கின்றன. சிந்து சமவெளி நாகரிகத்திலும் நம்முடைய மூத்தோர்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்கள் கண்டறியப்பட்டுள்ளன என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

சிவ பெருமானின் தனித்துவ அடையாளங்களாகக் கீழ்வருவன கொள்ளப்படுகின்றன. இவ் வடிவங்களையும் இறைவனது குணங்களைனையும் பற்றித் தேவாரப் பதிகங்கள் சிறப்பித்துக் கூறுகின்றன.

நெற்றிக்கண் காணப்படல்.

கழுத்து நீலநிறமாகக் காணப்படல்.

சடைமுடியில் பிறைநிலாவைக் கொண்டிருத்தல்.

நீண்ட சுருண்ட சடாமுடி

தலையில் கங்கை நதி பாய்ந்து கொண்டிருத்தல்.

உடல் சாம்பல் நிறமாக இருத்தல்.

புலித் தோலினை ஆடையாக அணிந்திருத்தல்.

கழுத்தினைச் சுற்றி பாம்பு காணப்படல்.

கையினில் உடுக்கை, திரிசூலம் தாங்கியிருத்தல்.

நந்தியினை (எருது) வாகனமாகக் கொண்டிருத்தல்.

## சிவனின் ஐந்து முகங்கள்

சதாசிவ மூர்த்தியின் ஆயிரத்தில் ஒரு கூறிலிருந்து தோன்றியவரே மகேசர். மகேச மூர்த்தி மகேச வடிவங்கள் என்ற பெயரிலும் அழைக்கப்டுகிறார். இவரே படைத்தல், காத்தல், ஒடுக்கல் ஆகியவற்றை நேரடியாக இயற்றுவதாக சொல்வார்கள். உருவத் திருமேனியுடன் காட்சியளிக்கும் இவரின் வடிவங்களே இனி நாம் காணப்போவது. இந்த மகேச மூர்த்தி அடியவர்களை தண்டிக்கவும், அடியவர்களுக்கு உதவிகள் செய்து காக்கவும் பல வடிவங்களை எடுத்து பல திருவிளையாடல்களை புரிகிறார். இவரை நின்ற கோலம், அமர்ந்த கோலம், நாட்டியம் ஆடும் கூத்துக் கோலம், வாகனங்களில் ஏறி வரும் கோலம், உக்கிரமாய் இருத்தல், சாந்த ஸ்வரூபியாய் காட்சி அளித்தல் என பல்வேறு நினலகளிலும் அதாவது சதாசிவ மூர்த்தியின் மகேச மூர்த்திக்கு ஒரு முகம், மூன்று கண்கள், ஜடா மகுடம், நான்கு கரங்கள் ஆகியவற்றுடன் காட்சி அளிக்கின்றார். பின்னிரு கரங்களில் மானும், மழுவும் காணப்படும். முன்னிரு கரங்கள் அபயஹஸ்தமாக காணப்படுகிறது. மகேச்வர வடிவங்களை சதாசிவ மூர்த்தியின் ஐந்து முகங்களுக்கும் பொருந்துமாறு 25 விதங்களில் குறிப்பிடுவார்கள்.

1. **சத்யோஜாதம் : சத்யோஜாத முகத்தில் இருந்து**

   1. லிங்கோத்பவர், 2. சுகாசனர், 3. உமா மகேஸ்வரர், 4. சங்கர நாராயணர், 5. அர்த்தநாரீஸ்வரர்

2. **வாமதேவம் : வாமதேவ முகத்தில் இருந்து**

   1. கங்காளர், 2. சக்ரதானர், 3. கஜமுக அனுக்ரஹர், 4. சண்டோ அனுக்ரஹர், 5. ஏக பாதர்

3. **அகோரம் : அகோர முகத்தில் இருந்து**

   1. கஜசம்ஹாரர், 2. வீரபத்திரர், 3. தட்சிணாமூர்த்தி, 4. கிராதமூர்த்தி, 5. நீலகண்டர்

4. **தற்புருடம் : தத்புருஷம் என்னும் முகத்தில் இருந்து தோன்றியவர்கள்**

   1. பிட்சாடன மூர்த்தி, 2. காமதகனர், 3. கால சம்ஹாரர், 4. ஜலந்தரவதர், 5. திரிபுராந்தகர்

5. **ஈசானாம் : ஈசான முகத்தில் இருந்து தோன்றியவர்கள்**

   1. சோமஸ்கந்தர், 2. நடராஜர், 3. ரிஷபாரூடர், 4. கல்யாண சுந்தரர், 5. சந்திர சேகரர்

இம் முகத்தின் மூலம் ஆகம இரகசியப் பொருளினைக் கேட்டு அறிந்தனர் அறுபத்தாறு முனிவர்கள்

உலகத்தார் உய்யும் பொருட்டும், உலகை காக்கவும் ஈசன் பல வடிவங்களை எடுப்பதாய்ச் சிவனடியார்கள் கூற்று. அவை மூன்று வகைப்படும். அவை போக வடிவம், யோக வடிவம், வேக வடிவம். இதில் போகம் இன்பத்தையும், யோகம் அமைதியையும், வேகம் கோபத்தையும் குறிக்கின்றன. பொதுவாக மகேச வடிவத்தை இல்லறத்ததாரே பெரிதும் பூசை செய்வர் என்பது வழக்கு. அதற்கேற்பத் திருமூலரின் திருமந்திரத்திலும், ஏழாம் தந்திரம் பாடல் எண் மூன்று, அத்தியாயம் பதிமூன்று மகேசுர பூஜையில் இவ்வாறு கூறுகின்றார்.

இலிங்கோற்பவர் சிவனது உருவத் திருமேனிகளில் ஒன்றாகும். கருவறையின் பின்புறமாக மேற்கு நோக்கி அமைந்திருக்கும். இறைவனது பாதமும் முடியும் கண்ணிற்குப் புலப்படாத வகையில் இவ்வடிவம் அமைந்திருக்கும் ●

---

## தைரியம் அதிகரிக்க...!

***சிவனுக்கு எல்லா நாளிலும் பூஜை நடந்தாலும், பவுர்ணமியில் நடக்கும் பூஜை சிறப்பிடம் பெறுகிறது. இந்நாளில் சந்திரன், முழு ஆற்றலுடன் பூரண சுப கிரகமாக இருப்பார். எனவே, இவ்வேளையில் சிவனை வழிபடுவது விசேஷம். நம் மனதை இயக்குபவர் என்பதால் சந்திரனுக்கு மனோகாரகன் என்று பெயர். பவுர்ணமியன்று சிவனை வழிபட தைரியம் அதிகரிக்கும்.***



# சக்தி விரதங்கள்

தமிழ் மாதங்கள் பனிரெண்டில் ஆடி மாதத்திற்கென்று தனிச் சிறப்பு உண்டு. ஆடி மாதம் தெய்வீகப் பண்டிகைகள் தொடங்கும் காலம். தை மாதம் வரை இவை தொடரும். 'ஆடி மாதம் பண்டிகைகளை அழைக்கும் காலம்' என்பர். மழைக்காலம் தொடங்குவதும் இப்பொழுதுதான். அதேபோல் தை மாதத்திற்குப் பிறகு பண்டிகைகள் அதிகம் இல்லை. மழையும் இருக்காது.

ஆடி மாதம் தட்சிணாயனத்தின் தொடக்கம். தேவர்களின் இரவுக் காலமாக இதனைக் கருதுவர். ஆடி மாதத்தை 'சக்தி மாதம்' என்று ஜோதிட நூல்கள் குறிப்பிடுகின்றன. தட்சிணாயனம் துவங்கும் ஆடி மாதத்தில் சூரியனில் இருந்து சூட்சும சக்திகள் வெளிப்படும். பிராண வாயு அதிகமாகக் கிடைக்கும். உயிர்களுக்கு ஆதார சக்தியை அதிகமாகத் தரும் மாதம் இதுவே. வேத பாராயணங்கள், மந்திரங்கள், ஜெபங்களுக்கும் ஆடி மாதம் சிறந்தது.

### அம்மனுக்கு உகந்த ஆடி!

பெண் தெய்வங்களின் போற்றுதலுக்குரிய மாதமாக ஆடி மாதம் விளங்குகிறது. இதற்கு பல காரணங்கள் உள்ளன.

அன்னை காமாட்சி தேவி, பரமசிவனை நோக்கித் தவமிருந்து, ஈசனை அடையும் பேறு பெற்ற மாதம் இம்மாதம்தான். தேவியின் திருவுருவங்களில் ஒன்றான வராஹி தேவியைச் சிறப்பிக்கும் நோக்குடன் 'வராஹி நவராத்திரி' இம்மாதத்தில்தான் கொண்டாடப்படுகிறது. தைரியத்தையும், வெற்றியையும் அருள்பவள் வராஹி தேவி.

ஆடி மாதத்தில் எல்லா மாரியம்மன் கோயில்களிலும் திருவிழாக்கள் விமர்சையாக நடைபெறும். காவடி எடுத்தல், தீமிதி, கூழ் ஊற்றுதல் என்று ஊரே அமர்க்களப்படும். படவேடு ரேணுகாம்பாள், திருவேற்காடு கருமாரியம்மன், புன்னை நல்லூர் மாரியம்மன், சமயபுரம் மாரியம்மன் போன்ற பல திருத்தலங்களில் திருவிழாக்கள் அரங்கேறும். ஆடி மாதம், வளர்பிறை, துவாதசி தொடங்கி, கார்த்திகை மாத வளர்பிறை, துவாதசி வரை துளசி அம்மனை வழிபட நீண்ட ஆயுளும், ஆரோக்யமும் கிடைக்கும். வளமான வாழ்க்கை அமையும்.

### ஆடிப்பூரம்!

ஆடி மாதத்தில் வரும் பூர நட்சத்திரம் ஆடிப்பூரம் என்று சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

## ஆடி செவ்வாய்; ஆடி வெள்ளி!

இம்மாதத்தில் வரும் செவ்வாய் மற்றும் வெள்ளிக் கிழமைகள் மிகவும் விசேஷமானவை. அன்றைய தினங்களில், இல்லத்தின் வாசலில் கோலமிட்டு, பூஜையறையில் குத்துவிளக்கேற்றி ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் மற்றும் பல அம்மன் பாடல்களைப் பாடுவார்கள். பால் பாயசம், சர்க்கரைப் பொங்கல் போன்றவற்றை நிவேதனம் செய்வார்கள். பெண் குழந்தைகளை அம்மனாக பாவித்து, உணவளித்து, அவர்களுக்கு ரவிக்கை, தாம்பூலம், வளையல், குங்குமச்சிமிழ், சீப்பு, கண்ணாடி, மருதாணி, மஞ்சள் போன்றவற்றைக் கொடுத்து சிறப்பிக்க தேவியின் அருள் கிடைக்கும்.

ஆடி வெள்ளியில் வரும் வரலட்சுமி விரதம் சிறப்பான மகாலட்சுமி பூஜையாகும். வீட்டிற்கு மகாலட்சுமியை வரவேற்று, பூஜை செய்து உபசரித்தால் மகாலட்மியின் அருட்கடாட்சப் பார்வை கிடைக்கும் என்பது திண்ணம். இந்தக் கிழமைகளில் ஆலயங்களில் குத்து விளக்கு பூஜை நடைபெறும். நாகதேவதைக்கு பால் தெளித்து விசேஷ பூஜை செய்வார்கள். பராசக்தியின் ஒன்பது அம்சங்களான (சர்வபூசதமணி, மனோன்மணி, பலப்பிரதமணி, பலவிகாரணி, கலவிகாரணி, காளி, ரௌத்ரி, ஜேஷ்டை, வாமை). ஒன்பது சிவாச்சார்யர்கள், ஒன்பது வகை மலர்களால் ஒரே சமயத்தில் அர்ச்சிக்கும் 'நவசக்தி அர்ச்சனை' நடைபெறும். ஆடி வெள்ளியில் 'சண்டி ஹோமம்' போன்ற சக்தி ஹோமங்களும் செய்வார்கள்.

இந்த வெள்ளியில், திருவானைக்காவல் ஜம்புகேஸ்வரர் ஆலயத்தில் அகிலாண்டேஸ்வரிக்கு ஸ்ரீவித்யா பூஜை நடைபெறும். இந்த தேவியின் காதுகளில் ஸ்ரீசக்ரமே தாடங்கமாக உள்ளது குறிப்பிடத்தக்கது. இவ்வாலயத்தில் ஆடிவெள்ளியன்று அம்பாள் கலையில் லட்சுமியாகவும், உச்சிகால வேளையில் பார்வதி தேவியாகவும், மாலையில் சரஸ்வதி தேவியாகவும் காட்சி தருகிறாள்.

புதுச்சேரியில் வங்கக் கடலோரத்தில் அமைந்துள்ள செங்கழுநீர் அம்மன் ஆலயத்தில் ஆடி மாதத்தின் எல்லா வெள்ளிக் கிழமைகளிலும் விசேஷ பூஜைகளும், தேவியின் வீதி உலாவும் நடைபெறும். ஆடி செவ்வாயன்று தலை குளித்து அம்மனை வழிபட திருமாங்கல்ய பாக்கியம் கிடைக்கும். இதுதவிர ஆடி செவ்வாயில் ஔவையாருக்கு மேற்கொள்ளும் நோன்பு குறிப்பிடத்தக்கது. இந்த ஔவை நோன்பு கடைபிடிப்பதால் விரைவில் திருமணம் நடக்கும். மழலைச் செல்வம் இல்லாதவர்களுக்கு அந்த பாக்கியம் கிடைக்கும். இந்த நோன்பில் பச்சரிசி மாவுடன், வெல்லம் கலந்து உப்பில்லாமல் கொழுக்கட்டை செய்வார்கள். பெண்கள் மட்டுமே மேற்கொள்ளும் இந்த விரதம் இரவு பத்து மணிக்கு நடைபெறும்.

## எண் 7ன் சிறப்புகள்

1. பிறப்புகள் : தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம்
2. பெண்களின் பருவம் : பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, திரிவை, பேரிளம்பெண்
3. தினங்கள் : ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி
4. கன்னிகள் : அபிராமி, மகேஸ்வரி, கவுமாரி, நாராயணி, வராகி, காளி, இந்திராணி
5. மண்டலங்கள் : வாயு, வருணன், சந்திரன், சூரியன், நட்சத்திரம், அக்கினி, திரிசங்கு
6. மேகங்கள் : சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவத்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீலவருணம்
7. கடல்கள் : உவர்நீர், நன்னீர், பால், தயிர், நெய், தேன், கருப்பஞ்சாறு
8. சுவரங்கள் : ச ரி க ம ப த நி
9. இசைகள் : குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி,விளரி, தாரம்
10. நகர்கள் : அயோத்தி, மதுரா, காசி, காஞ்சி, மாயா, அவந்தி, துவாரகா
11. அகத்திணைகள் : குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, கைக்கிளை, பெருந்திணை
12. தலை வள்ளல்கள் : சகரன், காரி, நளன், துந்துமாரி, நிருதி, செம்பியன், விராடன்
13. இடை வள்ளல்கள் : அக்குலன், அந்திமான், கன்னன், சந்தன், சந்திமான், சிசுபாலன், வக்கிரன்
14. கடை வள்ளல்கள் : பாரி, ஆய், எழினி, நள்ளி, மலையன், பேகன், ஓரி.
15. ரிஷிகள் : அகத்தியர், அங்கீரசர், கவுதமர், காசிபர், புலத்தியர், வசிட்டர், மார்க்கண்டேயர்
16. சிரஞ்சீவிகள் : அசுவத்தாமன், விபீஷணன், மாபலி, அனுமன், வியாசர், பரசுராமர், கிருபாசாரியன்

# சரஸ்வதி



இவள் பிரமனால் உருவாக்கப்பட்டுப் பின் அவனாலேயே மணக்கப்பட்டவள். கல்வியின் அதிதேவதை. இவள் வெள்ளை நிறமானவள். வெள்ளை நிற வஸ்திரம், கைகளில் ஜபமாலை, புத்தகம், வீணை, எழுத்தாணி தரித்து எழுந்தருளியிருப்பவள். இவளுக்குப் பிரம்ம வித்தை முகமாகவும், நான்கு வேதமும் கரங்களாகவும்,எண்ணும் எழுத்தும் இதிகாசங்கள் பாதங்களாவும், ஓங்காரம் யாழாகவும் திகழ்கின்றன.

தன்னைச் சிருஷ்டித்த பிரமனே தன்னைக் கூட வருவது கண்டு மான் வடிவோடு அஞ்சியோடப் பிரமனும் ஆண்மானுருக் கொண்டு துரத்தியதாகவும் பின் சிவன் கருணையால் பிரமனையே கணவனாய்ப் பெற்றதாகவும் புராணங்கள் கூறுகின்றன.

பிரம்மன் தன்னை நீக்கி யாகம் செய்ததால் சரஸ்வதி எனும் பெயரிலான நதியாகிப் பிரம்மனின் யாகத்தை அழிக்க வந்தவள்.

தன் நாயகனான பிரமனோடு கங்கையில் குளிக்கச் சென்றபோது ஓர் கந்தவர்கன் பாடல் கேட்டுச் சரஸ்வதி தாமதிக்க, அவளை விட்டுச் சென்ற பிரமன் மற்றைய தேவியரோடு குளித்தது கண்டு இவள் கோபிக்க, உன் குற்றமுணராது கோபித்ததால் அட்சரவடிவாகிய நீ பூவுலகத்தில் நாற்பதெட்டுப் புலவருருவாக தோன்றிச் சிவனைப்பணிந்து அவன் தரும சங்கப்பலகையில் இருந்து வருக எனச் சபிக்க அச்சாபமேற்று நடந்தவள்.

ஒரு யாகத்தில் இவள் வரத்தாமதித்ததால் பிரமன் இடைக்குலக்கன்னிகை ஒருத்தியைத் தாரமாகப் பெற்றனன். அதனால் கோபங்கொண்டு தேவரை இவள் சபித்ததாய் வரலாறு.

ஒருமுறை இவளும் இலட்சுமியும் தம்முள் மாறு கொண்டு தங்களில் உயர்ந்தவர் யார் என்று பிரமனைக் கேட்கப் பிரமன் இலட்சுமியே என்றதனால் நதியாய் இவள் உருவெடுத்தனளாம்.

பிரமன் யாகம் செய்ய அந்த யாககலசத்துள் தோன்றியவள். புலத்திய முனிவரை அரக்கனாகும்படி சபித்தவள். சரத்காலத்தில் பூஜிக்கப்படுவதால் சாரதை எனவும் பெயர் கொண்டவள்.

தன்னைப் படைத்த பிரமன் மோகித்துக் கூறிய வார்த்தைகளால் கோபங் கொண்டு அங்ஙனம் மோகவார்த்தைகளைக் கூறிய பிரம்மனின் ஐந்து முகங்களுள் ஒன்றினைச் சிவனை நீ பூசித்து அவனால் அறுபடுவாய் எனச் சாபமிட்டவள். இவை அனைத்தும் சிவமகாபுராணம் சொல்லும் செய்திகள்.

இவளும் கங்கை, லஷ்மி முதலியவர்களும் விஷ்ணுபத்தினிகள். ஒரு கால் விஷ்ணு கங்கையிடம் அதிக ஆசை கொண்டு அவளுடன் நகை முகமாயிருத்தலைக்கண்ட சரஸ்வதி, பொறாமை கொண்டு லஷ்மியை நோக்க லஷ்மி கங்கைக்குச் சார்பாயிருத்தலைக் கண்டு இவள் லஷ்மியைச் செடியாகவும் நதியாகவும் போகச்சபித்தாள். கங்கை சரஸ்வதியை நதியுருவமாகவெனச் சபித்தாள். பின் ஸரஸ்வதி கங்கையைநோக்கி நீயும் நதியுருவமாய் உலகத்தவரது பாவத்தைச் சுமக்க என்றனள். லஷ்மி இதனால் தர்மஜ்வஜருக்குக் குமரியாகித் துளசியாகவும், பத்மாவதியெனும் நதியாகவும் பிரவகித்தாள். லஷ்மி சங்கசூடனை மணந்தனள். கங்கை சந்துனுவை மணந்தனள். சரஸ்வதி பிரமபத்தினி ஆயினள். சரஸ்வதிபாரதவருஷத்தில் நதியாக வந்தபடியால் பாரதி என்றும், பிரமனுக்குப் பத்தினியாதலால் பிரம்மி என்றும், வாக்குகளுக்குத் தேவியாதலால் வாணி என்றும், அக்கினியைப்போல் பாவத்தைக் கொளுத்தி யாவருங்காண மஞ்சள் நிறம் பெற்றிருத்தலின் சரஸ்வதி என்றும் அழைக்கப்படுகின்றனள். இந்த மூன்று தேவியரும் பூலோகத்தில் கலி வருஷம் ஐயாயிரம் சென்றபின் தங்கள் பதமடைவர் என்று தேவி பாகவதத்தில் கூறப்படுகின்றது.

## மகாசரஸ்வதி

மகாசரஸ்வதி சரிதம் மார்க்கண்டேய புராணத்தைச் சேர்ந்த தேவி மகாத்மியத்திலே விரிவாகக் கூறப்பெற்றிருக்கிறது. சும்ப நிசும்பர்களால் வருத்தமுற்ற தேவர்கள் வேண்டப், பார்வதியின் கோசத்தினின்றும் வெளிவந்த காரணத்தினால் கௌசீகி என்று அழைக்கப்படுகிறாள். மணி, சூலம், ஏறு, சங்கம், உலக்கை, சக்கரம், வில், அம்பு இவற்றைக் கரங்களில் தரிப்பவள். ''கலீம்' ' பீஜரூபிணி.

மேகத்தினின்று வெளிவரும் சந்திரனைப் போன்ற ஒளியினள். தன் இசையால் சும்ப நிசும்பர்களைக் கவர்ந்து தன்னை அடைவதற்காகப் போரிடச் செய்தவள். தன் ஓங்கார சத்தத்தினால் தூம்ரலோசனை பஸ்பமாக்கியவள்.

## பிரம்மசக்தி சரஸ்வதி

வித்தைகளின் அதிதேவதையான சரஸ்வதி தேவி பிரம்மனின் சக்தியாவாள். இந்தச் சரஸ்வதி பற்றித் தேவி மகாத்மயிம் ப்ராதரனி கரவிறன்யத்தில் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆதிசக்தி முழுமையான சத்வகுணம் கொண்டு சரஸ்வதியின் ரூபம் பெற்றவளாம். அக்கமாலை, அங்குசம், வீணை, புத்தகம் ஏந்திய நான்கு கரங்களுடன் விளங்குபவள் இவள். மகாவித்யா, மகாவாணி, பாரதி, வாக்சரஸ்வதி, சூரியா, ப்ராம்ஸ்ரீ, காமதேனு, பிஜகர்பதீஸ்வரி எனப் பல பெயர் கொண்டவள் இவள்.

கவிதை, சாஸ்திரம், கலை, சங்கீதம் போன்ற அனைத்தையும் அளிப்பவள். சப்த ப்ரபஞ்சத்தின் ஆதாரமாய் அளிப்பவள். 51 அட்சர ரூபிணியாகவும் விளங்குகின்றனாள்.

உபய பாரதி. (பூமியில் அன்னை சரஸ்வதியின் அவதாரம்)

ஒரு சமயம் சத்யலோகத்தில் பிரம்மதேவருடைய சந்நிதியில் முனிவர்கள் ஒன்று கூடி அவரவர் அத்யானம் செய்த வேதப் பகுதிகளைக் கூறிப் பிரம்ம தேவரை மகிழ்வித்தனர். அப்போது கோபத்தின் உருவமான துர்வாச மகரிசி தானும் வேதத்தைக் கூறினார். அப்போது ஓரிடத்தில் ஸ்வரம் தவறியது. இதைக்கண்டு பக்கத்திலிருந்த சரஸ்வதிதேவி சிரித்தாள். அதனால் கோபமுற்ற துர்வாசர். ''சரஸ்வதி நீ மனுசியாகப் பிறப்பாய் எனச் சாபமிட்டார்'' அச்சாபத்தின் காரணமாக அன்னை சரஸ்வதி பூலோகத்தில் அவதரித்தாள். இவள் ஹிமமித்திரரின் புத்திரரான விச்வரூபரை (மண்டன மிச்சரை) மணந்தாள். இவளே மண்டனமிச்சரருக்கும். சங்கர பகவத் பாதருக்கும் நடந்த வாதத்தில் சாட்சியாக வரிக்கப்பட்டாள். மண்டனர் சங்கரரிடம் தோற்றுப்போனபின் இவள் தன்னையும் சங்கரர் ஜெயித்தால் தான் மண்டனரை ஜெயித்ததாக உபய பாரதியுடனும் வாதிட இசைந்தார்.

பதினேழுதினங்கள் நடந்த வாதத்தில் இவள் காமசாஸ்திரத்தை வாதிட முனைய, சங்கரர் அவ்விடயத்தை வாதிடத் தனக்கு ஒருமாதகாலம் அவகாசம் கேட்டுப் பெற்று அமருமகன் எனும் அரசனின் சரீரத்தில் புகுந்து பின் அவளுடன் வாதிட வந்தார்.

அவரைக்கண்டு நீங்கள் சதாசிவன் எனக்கூறிப் பாரதி மறையச் சங்கரர் அவளை யோக சக்தியினால் கண்டு தாயே! சரஸ்வதி தேவியே ஆன தாங்கள் நான் ஏற்படுத்தும் சிருங்கேரியில் சாரதா எனும் பெயருடனும், காஞ்சியில் காமகோடி எனும் பெயருடனும் சாந்நித்தியம் பெற வேண்டுமெனப் பெயர் பெற்றார்.

## சரஸ்வதியின் அருள்பெற்ற அடியார்

ஊமைப்பிள்ளையாகப் பிறந்து முருகன் அருளால் அரியவரம் பெற்றுப் பல அருள் நூல்களை இயற்றிய ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் காசியில் வசித்த முஸ்லீம் மன்னரை நேரில் சந்தித்து அளவளாவி, இந்து சமுதாயத்தை நிலைநிறுத்த விரும்பி வட இந்திய பாஷைகளைக் கற்கக் கருதினார். அன்னை சரஸ்வதியைப் போற்றிச் சகலகலாவல்லி மாலையை இவர் பாட, அம்மொழிகள் இவருக்கு இயல்பாயின. அதனால் அம்மன்னிடம் பேசிக் காசியில் ஒரு மடத்தினை ஸ்தாபித்தார்.

## தேவி பாகவதத்தில் சரஸ்வதி

மூலப் பிரகிருதியான பராசக்தியிடமிருந்து தோன்றிய ஐந்து பிரதான சக்திகளில் சரஸ்வதியும் ஒருவள் எனவும், அம் மூலப்பிரகிருதியில் இருந்து தோன்றிய ராதாதேவியின் சக்தியின் நாக்கு நுனியிலிருந்து

வெண்ணிறம் கொண்டவளும். வெண்ணாடை தரித்தவளுமான இச் சரஸ்வதி தோன்றினாள் எனவும், இவள் படைத்தற் கடவுளான பிரம்மனுக்குச் சக்தியாகக் கொடுக்கப்பட்டாள் எனத் தேவி பாகவதம் கூறுகின்றது.

## அன்னை சரஸ்வதி அருளும் அறுபத்து நான்கு கலைகள்

1. அக்கர இலக்கணம்
2. இலிகிதம்
3. கணிதம்
4. வேதம்
5. புராணம்
6. வியாகரணம்
7. நீதி சாஸ்திரம்
8. சோதிட சாஸ்திரம்
9. தரும சாஸ்திரம்
10. யோக சாஸ்திரம்
11. மந்திர சாஸ்திரம்
12. சகுன சாஸ்திரம்
13. சிற்பசாஸ்திரம்
14. வைத்தியசாஸ்திரம்
15. உருவ சாஸ்திரம்
16. இதிகாசம்
17. காவியம்
18. அலங்காரம்
19. மதுரபாடனம்
20. நாடகம்
21. நிருத்தம்
22. சக்தபிரமம்
23. வீணை
24. வேணு
25. மிருதங்கம்
26. தாளம்
27. அத்திர பரீஷை
28. கனக பரீஷை
29. இரத பரீஷை
30. கஜ பரீஷை
31. அசுவ பரீஷை
32. இரத்தின பரீஷை
33. பூபரீஷை
34. சங்கிராம இலக்கணம்
35. மல்யுத்தம்
36. ஆகருஷணம்
37. உச்சாடனம்
38. வித்துவேஷணம்
39. மதன சாஸ்திரம்
40. மோகனம்
41. வசீகரணம்
42. இரசவாதம்
43. காந்தர்வவாதம்
44. பைபீலவாகம்
45. கௌத்துகவாதம்
46. தாதுவாதம்
47. காருடம்
48. நாட்டம்
49. முட்டி
50. ஆகாயப்பிரவேசம்
51. ஆகாயமனம்
52. பாகாயப் பிரவேசம்
53. அதிரியச்சயம்
54. இந்திர ஜாலம்
55. மகேந்திர ஜாலம்
56. அக்கினித்தம்பம்
57. ஜலதஸ்தம்பம்
58. வாயுத் தம்பம்
59. திட்டித் தம்பம்
60. வாக்குத்தம்பம்
61. சுக்கிலத் தம்பம்
62. கன்னத்தம்பம்
63. கட்கத் தம்பம்
64. அவத்தைப்பிரயோகம்




# சப்த மாதர்

### பிராமி

பிரம்மனின் சக்தி. இவர் மஞ்சள் நிறமானவர். நான்கு முகங்களையும் ஆறு கரங்களையும் கொண்டு காணப்படுவார். வலது பக்க மூன்று கரங்களில் ஒன்று வரத முந்திரையிலிருக்கும். மற்றைய இரு கரங்களிலும் அட்சமாலை சிகுவா என்பன காணப்படும். இடது கரங்களில் ஒன்று அபய முத்திரையிலிருக்க மற்றையன புத்தகம், கமண்டலம் என்பனவற்றினை ஏந்தியவாறு காணப்படும். அம்சுமத்பேதாகமம், ரூபமண்டனம் என்னும் நூல்கள் பிராமியை நான்கு கரங்களுடனும் விபரிக்கின்றன. இவர் செந்தாமரை மீது உட்கார்ந்திருப்பர். வாகனமாகவும் கொடியாகவும் அன்னம் காணப்படும். மஞ்சள் ஆடை உடுத்தி, ஆபரணங்களை அணிந்திருப்பார். தலையில் கரண்ட மகுடம் காணப்படும்.

### மகேசுவரி

சிவனின் சக்தி, வெள்ளை நிறமானவர். இவர் ஐந்து முகங்களையும், ஒவ்வோர் முகத்திலும் மூன்று கண்களையும் கொண்டிருப்பார் என ஸ்ரீ தத்துவநிதி, விஷ்ணுதர்மோத்திர புராணம் எனபனவற்றிற் கூறப்பட்டுள்ளது. ஸ்ரீ தத்துவநிதி இவருக்குப் பத்துக் கரங்கள் காணப்படுமெனவும், இடது பக்கத்திலுள்ள கரங்களிலோன்று வரத முத்திரையிலிருக்க ஏனையவற்றில் பாசம், மணி, நாகம், அங்குசம் என்பன இடம் பெற்றிருக்கும் எனவும் கூறுகின்றது. விஷ்ணுதர்மோத்திர புராணத்தில் இவருக்கு ஆறு கரங்களும், ரூபமண்டனம், மச்சபுராணம், அம்சுமத்பேதாகமம், பூர்வ காரணாகமம் என்பனவற்றில் நான்கு கரங்களும் கூறப்பட்டுள்ளது. இவரது தலையில் ஜடா மகுடம் காணப்படும். அதில் பிறைச் சந்திரனைச் சூடியிருப்பார். எருதினை வாகனமாகவும் கொண்டிருப்பார்.

### கௌமாரி

முருகனின் சக்தி. இவர் ஆறுமுகங்களையும் பன்னிரு கரங்களையும் கொண்டிருப்பார் என ஸ்ரீ தத்துவநிதி கூறுகின்றது. பன்னிரு கரங்களில் இரு கரங்கள் வரத அபய முத்திரைகளிலிருக்க மற்றையை கரங்கள் வேல், கொடி, தண்டம், பாத்திரம், அம்பு, வில், மணி, தாமரை, சேவல், பரசு என்பனவற்றினை ஏந்தியிருக்கும். அம்சுமத்பேதாகமம் ரூப மண்டனம் காரணாகமம் என்பனவற்றில் இவருக்கு நான்கு கரங்கள் கூறப்பட்டுள்ளது. அம்சுமத்பேதாகமத்தின் படி இவரது நான்கு கரங்களுள் இரு கரங்கள் அபய வரத முத்திரையிலிருக்கும். மற்றையன வேல், சேவல் என்பனவற்றினை ஏந்தியிருக்கும். இவர் பதிமூன்று கண்களைக் கொண்டிருப்பார் எனவும் இவ்வாகமம் கூறுகின்றது. கௌமாரி மயிலினை வாகனமாகவும் கொடியாகவும் கொண்டவர்.

## வைஷ்ணவி

விஷ்ணுவின் சக்தியான இவர் நீல நிறமானவர். ஆறு கரங்களைக் கொண்டிருப்பர். வலது கரங்களில் ஒன்று வரத முத்திரையிலிருக்கும். மற்றைய கரங்களில் கதா, தாமரை என்பன காணப்படும். இடது கரங்களில் ஒன்று அபய முத்திரையினைக் காட்டுவதாகவும் மற்றையன சங்கு சக்கரம் ஏந்தியவாறும் காணப்படும் அம்சுமத்பேதாகமம், ரூபமண்டனம் என்னும் நூல்கள் வைஷ்ணவியை நான்கு கரங்களுடன் விபரிக்கின்றன. வைஷ்ணவியை அழகிய கண்களையும், முகத்தினையும், மார்பினையும் கொண்டிருகப்பார். மஞ்சள் ஆடை அணிந்திருப்பார். விஷ்ணுவிற்குரிய ஆபரணங்களை அணிந்து கருடனை வாகனமாகவும் கொடியாகவும் கொண்டிருப்பார்.

## வராகி

வராகமூர்த்தியின் சக்தி, கறுப்பு நிறமானவர். பன்றியின் முகத்தை ஒத்த முகத்தினையும் பெரிய வயிற்றினையும் கொண்டிருப்பார். இவருக்கு ஆறு கரங்கள் காணப்படும். வலது கரங்களில் ஒன்று வரத முத்திரையிலிருக்கும். மற்றையனவற்றில் தண்டம், வாள் என்பன இடம் பெற்றிருக்கும். இடது கரங்களில் ஒன்று அபய முத்திரையினைக் காட்ட மற்றையன கேடயம், பாத்திரம் என்பவனவற்றினை ஏந்தியவாறு காணப்படும். இவர் எருமையை வாகனமாகக் கொண்டிருப்பார் என வராகியினைப் பற்றி ஸ்ரீ தத்துவநிதி விபரிக்கின்றது. தண்டநாத வராகி, சுவப்ன வராகி, சுத்த வராகி என்னும் மேலும் மூன்று வகையான வராகியின் உருவ அமைபுபு பற்றியும் இந்நூலில் கூறப்படுகின்றது. தண்டநாதவராகி பொன்னிறமானவர் பன்றியின் முகத்தினை ஒத்த முகம் கொண்டிருப்பார். இவரது கரங்களில் சங்கு, சக்கரம், கலப்பை, உலக்கை, பாசம், அங்குசம், தண்டம் என்பன காணப்படும். இரு கரங்கள் அபய, வரத முத்திரையிலிருக்கும். சுவப்ன வராகி மேக நிறமானவர். மூன்று கண்களைக் கொண்டிருப்பார். பிறைச் சந்திரனைச் சூடியிருப்பார். வாள், கேடயம், பாசம், அரிவாள் என்பன கரங்களில் இடம் பெற்றிருக்கும். இரு கரங்கள் அபய வரத முத்திரையிலிருக்கும். சுத்த வராகி நீல நிறமானவர். பன்றியின் முகத்தினை ஒத்த முகம் கொண்டவர். வெண்மையான பற்கள் வெளியே நீட்டப்பட்டவாறிருக்கும். தலையில் பிறைச்சந்திரைச் சூடியிருப்பார். கபாலம், உலக்கை, நாகம் என்பன கரங்களிற் காணப்படும்.

## இந்திராணி

இந்திரனின் சக்தி; பொன்னிறமானவர்; ஆறு கரங்களைக் கொண்டிருப்பார் என ஸ்ரீ தத்துவநிதி கூறுகின்றது. வலது கரங்களில் ஒன்று வரத முத்திரையிலிருக்கும். மற்றையனவற்றில் அட்சமாலை, வஜ்ரம் என்பன காணப்படும். இடதுபக்க கரங்களிலொன்று அபய முத்திரையினைக் காட்டுவதாகவும் மற்றையன தாமரை, பாத்திரம் என்பனவற்றினை ஏந்தியவாறும் காணப்படும். அம்சுமதபேதாகமம் பூர்ணகாரணாகமம் என்னும் நூல்களில் இவருக்கு நான்கு கரங்கள் கூறப்படுகின்றன. அவற்றுள் இரு கரங்கள் அபய, வரத முத்திரையிலிருக்க மற்றைய இரு கரங்கள் வேல், வஜ்ரம் என்பனவற்றினை ஏந்தியிருக்கும். தேவி புராணத்தில் அங்குசம், வஜ்ரம் என்பனவற்றினை ஏந்திய இரு கரங்களுடன் கூறப்பட்டுள்ளது. இந்திராணிக்கு ஸ்ரீ தத்துவநிதியில் ஆயிரம் கண்களும், அம்சுமத்பேதாகமமத்தில் மூன்று கண்களும், பூர்வகாரணாகமத்தில் இரு கண்களும் கூறப்படுகின்றது. ரூபமண்டனம் என்னும் நூல் இவரை பல கண்களுடன் காட்டவேண்டும் எனக் கூறுகின்றது. இவரது தலையில் கிரீடம் காணப்படும். பல ஆபரணங்களை அணிந்திருப்பார். இந்திராணி சௌமிய இயல்பினைக் கொண்டவர். இவரது வாகனமாகவும் கொடியாகவும் யானை இடம் பெற்றிருக்கும்.

## சாமுண்டி

கறுக்கு நிறமானவர். பயங்கரமான தோற்றம் கொண்டவர். இறந்த மனித உடலை இருக்கையாகக் கொண்டவர். பாம்புகளை உடலில் அணிந்திருப்பார், ஒட்டிப்போன மெலிந்த வயிறு, குழிவிழுந்த கண்களைக் கொண்டிருப்பார். இவருக்குப் பத்துக் கரங்கள் காணப்படும். வலது கரங்களில் உலக்கை, சக்கரம், சாமரை, அங்குசம், வாள், இடது கரங்களில் கேடயம், பாசம், வில், தண்டம், கோடரி என்பன காணப்படும் என சாமுண்டியின் உருவ அமைப்பினைப் பற்றி ஸ்ரீ தத்துவநிதி விபரிக்கின்றது. விஷ்ணு தர்மோத்திர புராணத்தில் சாமுண்டி செந்நிறத்தினைக் கொண்டிருப்பார் எனக் கூறப்பட்டுள்ளது. தேவி மகாமித்யம் இவர் இரு கரங்களைக் கொண்டிருப்பார் எனவும் அவை வாள், பாசம் என்பன ஏந்தியிருக்கும் எனவும் விபரிக்கின்றது. இவர் நான்கு கரங்களையும், மூன்று கண்களையும் கொண்டவர் எனவும் தடித்த மேல் நோக்கிய கேசம் காணப்படுமெனவும் செந்நிறத்தினைக் கொண்டிருப்பார் எனவும் ஆகமங்களில் கூறப்பட்டுள்ளது.



# பின்னமிலான் எங்கள் பிரான்

திருவருள் மு. நற்குணதயாளன்

இறைவன் யார்? எங்கே இருக்கிறான்? என்னால் அவனைக் காண முடியுமா?

இப்படி பலவிதமான வினாக்கள் பல கோணங்களில் எழுந்து கொண்டேயிருக்கின்றன.

தன்னைத்தானே அடையாளம் காண முடியாத மனிதன் இறைவனைப் பற்றி வினாவெழுப்பி அவனைக் காண்பதற்கான முயற்சியில் ஈடுபடுகின்றான். நான் யார்? என்ற வினாவை எழுப்பி அதற்கு விடை காண்பதற்குப் பதிலாக இறைவன் யார் என்ற வினா மனித மனங்களில் எழுகின்றது. ரமண மகரிஷி அவர்கள் முதலில் தன்னுள் எழுப்பிய வினாவே நான் யார் என்பதுதான். சிறு வயதில் தன் மூச்சை அடக்கி தன்னைத்தானே தரிசித்தவர் ரமணர்.

இறைவனைப்பற்றி பல கருத்துகள் உண்டு.

*அருவும் உருவும் அறிஞர்க்கு அறிவாம்*
***உருவும் உடையான் உளன்.***

என்று திருவருட்பயன் கூறுகின்றது.

இறைவன் ஞானியருக்கு அறிவே வடிவாகவும். ஏனையோருக்கு அருவம் உருவம் அருவுருவம் என்ற மூன்று திருமேனிகளை உடையவனாகவும் இருக்கிறான் என்று உமாமதி சிவம் கூறுகிறார்.

நான் யார் என்ற வினாவுக்கு விடைதேடும்போது நான் இந்த உடலா? நான் இதயமா? நான் மனமா? என்று வினாக்களைத் தொடுக்கும்போது இல்லை என்கின்ற பதில் சுலபமாக வந்து விடுகிறது. அப்படியாயின் நான் யார்? மீண்டும் அதே வினா. நீ ஒவ்வொன்றையும் கேட்கின்றபோது இல்லை என்ற பதிலைக் கூறுவது எது. உன்னுடைய அறிவுதானே. ஆக அந்த அறிவுதான் நீ என்பதைப் புரிந்து கொள்.

இந்த அறிவைப் பயன்படுத்தி இறைவனைப் பற்றி சிந்திக்கத் தொடங்கு. அவனை நேசிப்பதில் நேரத்தைச் செலவிடு.

இறைவனது நிலைகள் இரண்டு. ஒன்று உண்மை நிலை. மற்றையது பொது நிலை. இறைவன் தனக்கென உருவம் பெயர் தொழில் ஒன்றும் இல்லாதிருக்கின்ற நிலை உண்மை நிலையாகும். இப்படியான உண்மை நிலையில் இறைவன் இருந்தாலும் உயிர்களின் பொருட்டு உருவத்தைக் கொள்கிறான். இந் நிலைமை இறைவனின் பொது நிலைமை ஆகும்.

இறைவனின் உண்மை நிலையைக் கண்டறிபவர்கள் ஞானியர் என்று அழைக்கப்படுகிறார்கள். அதாவது நான் யார் என்ற வினாவிற்கு விடையைக் கண்டு கொண்டவர்கள்.

நான் யார் என்ற வினாவிற்கு விடை காண முடியாதவர்களுக்கு தன்னை வழிபட்டு உய்வதற்காகவே இறைவன் பொது நிலையில் நின்று அருவம் உருவம் அருவுருவம் ஆகிய மூன்று நிலைகளையும் எடுக்கிறான்.

உய்ய என்னுள்ளத்தில் ஓங்காரமாய் நின்ற மெய்யா.. என்ற மாணிக்கவாசகரின் திருவாசக வரிகள் எம்மை மகிழ்வூட்டுகின்றன. அதாவது இறைவன் உயிர்களிடத்து மொழி வடிவாய் ஓசையாய் நின்று அவற்றிற்கு உணர்தல் தன்மையை உண்டாக்குகின்றான் என்பது கருத்தாகும். அதாவது இறைவனை இறைவன் இருக்கின்றான் என்ற அறிவு சார்ந்த கருத்து நிலையை உணர்தல் ஆகும். இந்த நிலை இறைவனது அருவுருவத் திருமேனி எனப்படுகின்றது. இவ்வாறு கருத்து நிலையில் இருந்து இறைவன் பொருள் நிலைக்கு வருகின்றான். இந்த நிலையை நாம் உருவத் திருமேனி என்கின்றோம். இவ்வகைத் திருமேனியில் இறைவன் யோக வடிவாகவும் போக வடிவாகவும் வேக வடிவாகவும் வடிவங்களை எடுக்கின்றான்.

போக வடிவம் என்கின்றபோது உலக இன்பத்தைத் தரும் பொருட்டு மணக்கோலம் கொள்ளுதல் ஆகும். அதாவது அப்பனும் அம்மையுமாகத் தோற்றமளித்தல் ஆகும். யோக வடிவம் என்பது தட்சணாமூர்த்தித் தோற்றமாகும். அதாவது உயிர்களுக்கு ஞானத்தைத் தருதற்பொருட்டு இறைவன் எடுக்கின்ற வடிவமாகும். வேக வடிவம் அழித்தற் தொழிலைச் செய்யும் பொருட்டு எடுக்கப்படுகின்றது. உயிர்களினுடைய துன்பங்களைத் தீர்க்கும் பொருட்டும் அநியாயங்களை அழிக்கும் பொருட்டும் இறைவன் போர்க் கோலம் பூணுகின்ற வடிவே வேக வடிவாகும்.

ஒளி வடிவாக இறைவன் தோன்றுதல் அருவுருவம் என்பர். தோன்றி மறைகின்ற சுடர்போல அருவுருவத் திருமேனியும் சில சமயம் தோன்றிப் பின் மறைந்து விடும்.

இறைவனுக்கு மேலாக எதுவுமே இல்லை என்பதே சமயங்களின் நம்பிக்கையாகும்.

***பல்லாருயிரும் உணரும் பான்மையென மேலொருவன்***
***இல்லாதான் எங்கள் இறை***

என்பது திருவருட்பயன்.

இறைவன் தன்னைத்தானே அறிமுகப் படுத்துவதால் தனக்கு மேலே தன்னை அறிவிப்பதற்கு யாரும் இல்லாதவன்.

உயிர்கள் எதனையும் இன்னொன்றின் உதவியின்றி அறிய முடிவதில்லை. கண் இன்றி உயிரால் எதனையும் பார்க்க முடிவதில்லை. காதின்றி எதனையும் கேட்க முடிவதில்லை. உயிர்கள் பார்க்கவோ கேட்கவோ நகரவோ உணரவோ உடலின் புறக்கருவிகளும் மனம் போன்ற அகக் கருவிகளும் நன்கு தேவைப்படுகின்றன.

இவற்றையெல்லாம் உயிருக்கு உணர்த்தி உயிரோடு கலந்து நிற்பவன் இறைவனே. எந் நிலையிலும் இறைவன் அறிவிக்கவே உயிர்கள் அறிகின்றன.

எல்லா உயிர்களும் தம்மை அறிவதற்கு மேலோன் ஒருவனை உடையனவாக இருக்கின்றன.

இத்தகு சக்தி வாய்ந்த இறைவன் தன்னைத்தானே அறிந்து கொள்பவனாகவும் சுதந்திர அறிவு கொண்டவனாகவும் இருக்கின்றான்.

***எங்கும் எவையும் எரியுறுநீர் போல்ஏகம்***
***தங்குமவன் தானே தனி***

என்று திருவருட்பயன் பகர்கின்றது.

காய்ச்சிய நீரில் கலந்து நிற்கும் வெப்பம்போல இறைவன் எல்லா உலகங்களிலும் உயிர்களிலும் ஒன்றாய்க் கலந்து நிற்கின்றான் அதே நேரத்தில் அவன் அவற்றிற்கு வேறாயத் தனித்தும் நிற்கிறான். நீர் தனித்த ஒன்று வெப்பம் தனித்த ஒன்று ஆனால் வெப்பமானது நீரில் கலந்து அதனோடு ஒன்றாய் நிற்கிறது. ஆனால் பார்க்கும்போது நீர் மட்டுமே தெரிகின்றது. நீரைத் தொட்டால் சுடுகின்றது. வெப்பமானது எமது கண்ணுக்குத் தெரியாமல் நீரோடு கலந்து இருப்பினும் நீரைத் தொட்டதும் வெப்பத்தின் சுடும் இயல்பு மட்டுமே எமக்குத் தெரிகின்றது. அதாவது அது நீரோடு கலந்து இருப்பதுபோல் தோன்றினாலும் அது வேறாகவே இருக்கின்றது. இதைப் போலவே இறைவன் உயிர்களோடு கலந்து நின்றாலும் தன்னியல்புகளை வெளிக்காட்டி வேறாகவே நிற்கின்றான். இறைவன் இயல்பாகவே பாசத்திற்படாத தூய தன்மை கொண்டவன் என்பதையும் உலகப் பொருளியலில் தோய்வின்றி நிற்பவன் என்பதையும் வலியுறுத்தவே தானே தனி என்று திருவருட்பயன் கூறி நிற்கின்றது.



# சிவம்

## குருபிரானைத் தேடி அலைபவனே மனிதன்

ஆறறிவோடு பிறந்த மனிதர்கள் அனைவரும் ஐயறிவு உணர்வுடையவர்களாகவே வாழ்ந்து மறைந்து விடுகிறார்கள். ஆறாவது அறிவை அறிந்து, அதைப் பெற்றுக் கொண்டு சிவமாவதற்கு ஒரு மெய்க் குருபிரானைத் தேடி அலைபவனை மனிதன். பெரு முயற்சிக்குப் பிறகு மெய்க்குருபிரானை அடைந்து சிவயோகத்தில் இருந்து அவரிடம் அருளமுதம் பெற்று சிவயோகத்தில் திளைத்துத் தன்னைச் சிவமாக்கிக் கொண்டவனை தேவன் எனும் தெய்வத்தின் திருவாய்மொழியினை அறிவுடையோர் உணர்வாராக.

மனிதராகப் பிறப்பெடுத்தவர்கள் இந்தப் பிறவி முடியுமுன்னே, மெய்க்குருபிரானை அடைந்து, அவரிடம் மனம், மொழி, மெய்களைத் தத்தம் செய்து, அவர் இருவென இருந்து, செல்லெனச் செல்வது உடல் ஒழுக்கம் அல்லது உடல் யோகம், அள்ள அள்ளக் குறையாத அமுத சுரபியிலிருந்த குருபிரானின் ஆவி உணவைச் செவிவழியாகப் பருகி அதனால் மனத்தின் பேயாட்டங்கள் நின்று அறிவில் ஒன்றி நிற்பதுவே, நினைவுத்தவம் அல்லது சிவயோகம். இவ்வாறு உடல், மனத்தவ ஒழுக்கமாவே சிவயோகத்தில் நின்று குருபிரானின் தேனமுதத்தைச் செவிச் செல்வமாக உண்டு, உணர்ந்து களிப்படையும் பேரின்பமே சம்போகம். இந்தச் சிவபோகம் துய்த்தவர்களே சிவமாக முடியும்.

*சீவன் எனச் சிவன் என்ன வேறில்லை*
*சீவனார் சிவனாரை அறிகிலர்*
*சீவனார் சிவனாரை அறிந்தபின்*
*சீவனார் சிவனாயிட்டிங்கு இருப்பவரே* (திருமந்திரம் - (2017)

தன் உயிராகிய சீவனைச் சிவமாக்குவதற்குக் குருபிரானின் அன்பைப் பெற வேண்டும். மெய்க்குருபிரானிடம் சீடன் வைக்கும் அன்பும், சீடன்பால் குருபிரான் வைக்கும் பேரன்புமே (கொடுத்தும் - கொண்டும்) சீவனைச் சீவமாக்கும். சிவயோகத்தில் நின்று சிவபோகத்தில் திளைத்துச் சிவமாவதற்கு ஒரே வழி அன்பு மட்டுமே.

***அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்***
***அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்***
***அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்***
***அன்பே சிவமாய் அமர்ந் திருந்தாரே***

- திருமந்திரம் - 270

எனத் தெய்வத் திருமூலர் கூறுவது ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. மனைவி, மக்கள், சுற்றத்தாரின் மேல் வைக்கும் அன்பு, ஒன்றை எதிர்ப்பார்த்துச் செய்யப்படுவது. குருபிரான் (குருவே சிவமெனக் கூறினன் நந்தி - திருமந்திரம் - 158) சீடனிடம் வைக்கும் அன்பு எதையும் எதிர்பார்க்காதது. அப் பேரன்பே சீவனை (உயிரை) சிவமாக்கும். பரசிவம் அன்புருவாய் அமைந்துள்ளது. அன்புருவாய் அனைத்துயிர்களிலும் சிவபரம்பொருள் அணுவாய், அணுவினுக்கு அணுவாய் அமைந்த உயிராய், உயிருக்குள்ளிருக்கும் ஒளியாய், ஒளியாகிய அறிவாய் அமைந்து அண்டத்தையும் பிண்டத்தையும் ஆள்கிறது. என் செய்ய இயலும்? அன்பெனும் பிடிக்குள் அகப்படும் பரசிவத்தை அன்பெனும் கண்ணீரதனால் கட்டுவோம்.

*அன்பெனும் பிடியுள் அகப்படும்மலையே*
*அன்பெனும் குடில்புகும் அரசே*
*அன்பெனும் வலைக்குட் படுபரம் பொருளே*
*அன்பெனும் கரத்தமர் அமுதே*
*அன்பெனும் குடத்துள்அடங்கிடும் கடலே*
*அன்பெனும் உயிர்ஒளிர் அறிவே*
*அன்பெனும் அணுவுள் அமைந்தபேர் ஒளியே*
*அன்புரு வாம்பர சிவமே.*

(திருவருட்பா. பரசிவ வணக்கம் 3)

### அழுது அழுது தொழுவோமாக

அன்புருவாய் அமைந்துள்ள சிவத்தைக் காணவும். அதுவாக நாம் ஆகவும் நாம் என்ன செய்ய வேண்டும்? அன்புருவாய் கடவுளைக்காண உண்மையாக விரும்பினால் - அழுத கண்ணீர் மாறுமா! ஆகாரத்தில் இச்சை செல்லுமா? என வடலூர் வள்ளற்பிரான் கூறியிருக்கதை உணர்வுடையார் உணர்ந்து உய்தி பெறுக! அழுதால் உன்னைப் பெறலாமே என்கிறார் மாணிக்கவாசகர். எனவே, சிவமாதற்கு உடலையும், உள்ளத்தையும்,உணர்வையும் குருபிரானின் முன்னிலையில் அழுது அழுது தொழுது தொழுது ஒருமுகப்படுத்துவோம். அன்பின் வழியது உயிர்நிலை (குறள் 80) என்பதற்கேற்ப அன்பினால் குருபிரானைச் சிக்கனப்பிடித்து சிவயோகச் சித்தி பெற்று சிவபோகத்தில் ஆழ்ந்து சிவமாவோம்! வாரீர் உலகத்தீர்! ●


# சிவலிங்க வகைகள்



பச்சை மண்ணால் ஆன லிங்கம், சுட்டமண் லிங்கம், மரலிங்கம், கல் லிங்கம், செம்பு முதலான உலோகங்களால ஆன லிங்கம், ரத்தின லிங்கம், மணி லிங்கம், பாண லிங்கம், ரச லிங்கம், சுயம்பு லிங்கம் எனப் பல வகையான சிவலிங்கங்கள் உண்டு. இவற்றில் ஒன்றைவிட ஒன்று உயர்ந்தது...

பச்சை மண்ணாலான சிவலிங்கத்தை விட சுட்ட மண்ணாலான சிவ லிங்கம் -10 மடங்கு அதிகம் உயர்ந்தது.

மண்ணாலான சிவ லிங்கம் -10 மடங்கு அதிகம்.
அதைவிட மர லிங்கம் - 10 மடங்கு அதிகம்.
அதைவிட கல்லிங்கம் -10 மடங்கு அதிகம்.
அதைவிட உலோக லிங்கம் -100 மடங்கு அதிகம்.
அதைவிட ரத்தின லிங்கம் -அளவிட முடியா அளவு அதிகம்..
அதைவிட மணி லிங்கம் -லட்சம் மடங்கு அதிகம்.
அதைவிட பாண லிங்கம் - கோடி மடங்கு அதிகம்.
அதைவிட ரச லிங்கம் - கோடி மடங்கு அதிகம்.
அதைவிட, சுயம்புலிங்கம் - மிகவும் உயர்ந்தது.



# யோகாசனம் செய்வதற்கு முன்பும் பின்பும்

இன்று அவசரகதியில் வாழ்ந்துக்கொண்டு வருகிறோம். உங்களின் உடலுக்காக தினசரி அரை மணி நேரம் முதல் ஒரு மணி நேரம் வரை ஒதுக்குங்கள். முதலில் சற்று தினசரி தடுமாற்றம் ஏற்படும். பிறகு போகப்போக அன்றாட வாழ்க்கையில் யோகா ஓர் அங்கமாக மாறிவிடும். யோகாசனம் பற்றிய எளிய குறிப்புகள்:

1. தினசரி காலை 4.30 மணி முதல் 6.00 மணிக்குள்ளாக யோகாசன பயிற்சி செய்யலாம்.
2. யோகாசன பயிற்சியில் தியானம், மூச்சுப்பயற்சி ஆசனம் இந்த மூன்றும் ஒன்றுக்கொன்று தொடர்புள்ளது. ஆகவே, சில நிமிடங்கள் தியானம், பிறகு பிராணாயாமம், அதன் பிறகு ஆசனங்கள் செய்வது நல்லது.
3. நீர் ஆகாரமாக இருந்தால், அருந்திய பின் அரை மணி நேரம் கழிந்த பின்பும், எளிய சிற்றுண்டியாக இருந்தால் இரண்டு மணி நேரம் கழித்தும், முழுமையான ஆகாரமாக இருந்தால் நான்கு மணி நேரம் கழித்தும் யோகப்பயிற்சிகளை செய்யவும்.
4. உங்களது உடலின் தன்மைக்கு ஏற்பவும், தினசரி பழக்கத்திற்கு ஏற்பவும் ஆரம்ப காலங்களில் குளியல் முறையை பின்பற்றவும்.
5. எப்போதும் குளித்த பின்பு யோகப்பயிற்சிகளை செய்தால் மனம் குதூகலமாக இருக்கும்.
6. யோகாசனப்பயிற்சிகளை செய்வதற்கு தரை விரிப்பு சற்று கனமாக இருந்தால், சிலவகை ஆசனங்கள் செய்யும் பொழுது வழுக்காமல் இருக்கும்.
7. யோகாசனம், தியானம், மூச்சுப்பயற்சி இவைகளை எப்போதும் கிழக்கு முகம் பார்த்தோ, அல்லது வடக்கு முகம் பார்த்தோ பயிற்சி செய்தல் நல்லது.
8. பருத்தி துணியாலான உடைகளை அணிவது நல்லது. உடலை மிகவும் இறுக்கி, ஆசனங்கள் செய்யும் பொழுது அழுத்தி வலிப்பதாக இருக்கக்கூடாது. அது போலவே உள்ளாடைகள் மிகவும் தொளதொள வென்றும் இருக்கக்கூடாது.
9. நேரமில்லாமல் வருந்துபவர்கள், காலை நேரத்தில் தியானம், மூச்சுப்பயற்சி செய்துவிட்டு, மாலை நேரத்தில் யோகாசனப்பயிற்சியையும் செய்யலாம்.
10. நீண்ட நேரம் வெயிலில் அலைந்தாலும், நீண்ட நேரம் கண் விழித்திருந்தாலும், அல்லது நீண்ட பிரயாணங்களில் உடல் களைதிருந்தாலும் இரவில் சரிவர தூக்கம் இல்லாமல் தவித்த நேரத்திலும் யோகாசன உடற்பயிற்சிகளை அன்று செய்யக்கூடாது. ஏனெனில் இந்த நேரத்தில் யோகாசனப் பயிற்சி செய்தால் மேலும் மேலும் உடல் களைப்பும், உடல் வெப்பமும் அதிகரிக்கும் ஆகவே போதுமான ஓய்விற்கு பின்பு பயிற்சி செய்யவும்.
11. யோகாசனம் செய்த பின்பு கட்டாயம் சவாசனம் என்ற ஓய்வு ஆசனத்தில் குறைந்தது 10 நிமிடங்களாவது இருக்க வேண்டும். அப்பொழுது தான் உடலின் இரத்த ஓட்டம் சரியான நிலைக்கு வரும். மேலும் வியர்வைகள் சமன்பாட்டிற்கு வரும். உடல், மனம், சுவாசம் இவைகளில் தெய்வீக காந்த அலைகள் ஊடுருவி பாயும். எனவே சவாசனம் அவசியம் செய்யவும்.
12. யோகப் பயிற்சியை முடித்துக் கொண்டு வியர்வை அடங்கிய பின்னால் தான் குளிக்க வேண்டும்.
13. யோகாசனப் பயிற்சிக்குப்பின்பு 15 நிமிடங்கள் கழித்து எளிய ஆகாரங்கலையோ, பழச்சாறு, அல்லது உணவு உட்கொள்ளலாம்,
14. யோகாசனப் பயிற்சி செய்பவர்கள் வாரத்திற்கு ஒரு முறையோ அல்லது இருமுறையோ அவசியம் எண்ணெய் தேய்த்து 10 நிமிடங்களுக்குள் தலை தேய்த்துக் குளித்தல் நல்லது. இதனால் கபால சூடு தணியும்.
15. பெண்கள் கருவுற்ற காலங்களிலும், மாதவிடாய் காலங்களிலும், உடல் பயிற்சி இயக்கமான ஆசனங்களை தவிர்த்து, தியானமும் மூச்சுப்பயிற்சி முறைகளிலும் அதிகம் கவனம் செலுத்த வேண்டும். நன்கு சவாசனத்தில் ஓய்வு பெற வேண்டும். பகல் உறக்கத்தை தவிர்த்தல் நல்லது.



# கேதாரகௌரி விரதம்

**கே**தாரம் என்பது இமயமலைசாரலைக் குறிப்பதாகும். அதாவது மலையைச் சார்ந்த வயல் பகுதியை கேதாரம் என்பர். இந்த இமயமலைக் கேதாரப்பகுதியில் சுயம்பு லிங்கமாக கேதாரேஸ்சுவரர் தோன்றினார். சக்திரூபமான பார்வதி தேவி சிவனை நினைந்து வழிபட்டு அதன் பலனாக அர்த்தநாரியாகவும், அர்த்த நாரீசுவரராகவும் ஒன்றுபட்ட தினமே கேதார கௌரி விரதமாகும். வயலில் ஆலமரத்தடியில் இருந்து இவ்விரதம் அனுஷ்டிக்கப்பட்டதால் கேதாரகௌரிவிரதம் எனவும் ஈசனை வழிபடுகின்றபடியால் கேதாரேஸ்வரி விரதம் எனவும் பெயர் பெறுகின்றது.

முன்னொருகாலத்தில் கைலைமலையிலே தேவாதி தேவர்கள், முனிவர்கள் சித்தர்கள், கந்தர்வர்கள் புடைசூழ சிவன், பார்வதி தேவியோடு வீற்றிருக்கின்றார். பிருங்கி முனிவரின் விகடான நடனத்தைக் கண்டு களித்த சிவனும் ஏனையோரும் முனிவரைப் பாராட்டினார்கள். இதனால் மகிழ்வுற்ற பிருங்கி முனிவர் அம்பிகையைத் தவிர்த்து சிவனை மட்டும் வலம்வந்து நமஸ்கரித்து நின்றார். இதனால் கோபம் கொண்ட அம்பிகை கைலைமலையை விட்டுத் தவம் செய்வதற்காக கௌதமமுனிவரின் ஆச்சிரமத்திற்கு புறப்பட்டார். அம்பிகை வரவினால் ஆச்சிரமமும் சூழலும் புதுப்பொலிவுடன் விளங்கியது. ஓமத்துக்குத் தேவையான பொருட்களைச் சேகரித்துக் கொண்டு வீடுதிரும்பிய மாபெரும் தவஸ்தியான கௌதம முனிவர் தமது ஆச்சிரமம் பொலிவுற்றதன் காரணம் அம்பிகையின் வரவே என அறிந்து அவளை அர்ச்சித்து பூஜை செய்துவிட்டு அம்பிகையிடம் ''இங்கு தாங்கள் வந்தமைக்குக் காரணம்'' என்ன என்று கேட்டார். அதற்கு அம்பிகை முனிவரை நோக்கி ''தபஸ்வியான சிவபெருமானின் பாதியுடம்பை நான் பெறவேண்டும் என்றாள்''. முனிவரும் புராணங்கள், சாஸ்திரங்கள் யாவற்றையும் அலசி ஆராய்ந்து கேதாரேஸ்வர விரத்தை அனுஷ்டிக்கும் முறையை விளக்கமாக அம்பிகைகுக் கூறியருளினார். முனிவரின் கூற்றுப்படி அம்பிகையும் 21 நாளும் சிவனைப் பூஜித்து சிவனின் பாதி உடலைப் பெற்று அர்த்தநாரீஸ்வரன் என்று எல்லாரும் போற்றும் படி சிவனின் இடப்பாகத்தில் அமர்ந்து எமக்கு அருள் புரிகின்றாள். இந்நாளில் அம்பிக்கை சிவனை நோக்கி ''எம்பெருமானே இவ்விரத்தை உலகில் யார் செய்தாலும் விரும்பிய யாவற்றையும் பெறுவதற்கு அருள் புரியவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார். சிவனின் அம்பிகையின் வேண்டுக்கோளை ஏற்று எற்று அங்கனமே ஆகுக என்று அருள் புரிந்தார்.

## கேதாரேஸ்வர விரதம் அனுஷ்டிக்கும் முறை

ஆண்டுதோறும் புரட்டாதி மாதம் சுக்ல பட்ட தசமியில் இவ்விரதத்தை ஆரம்பிக்க வேண்டும். இருபத்தோரிழைகள் கொண்டதும் இருபத்தொரு முடிச்சுக்கள் கொண்டதுமான நூலினால் உருவாக்கப்பட்ட மந்திரக் கயிற்றை செய்துகொண்டு அன்றுமுதல் சிவபெருமானை மண்ணால் ஆக்கப்பட்ட விம்பத்திலும், கும்பத்திலும் பூஜித்து இவ்விரதத்தை அனுஷ்டிக்க வேண்டும். தூய்மையான அழகான இடத்திலே மண்ணால் செய்யப்பட்ட சிவலிங்கத்தை அமைத்து கும்பம் வைத்து பூக்கள் வில்வம் முதலியனவற்றால் அர்ச்சனை செய்யவேண்டும். ஒவ்வொரு நாளும் கேதாரேஸ்வரனுக்கு இருபத்தொரு எண்ணிக்கை கொண்ட அப்பம், வடை, பழம், பாக்கு, வெற்றிலை, பாயாசம், சர்க்கரை அன்னம், புளிஅன்னம் முதலிய நைவேத்தியங்களை வைத்து தூபதீபம் காட்டியும் சோடோபோசார பூஜை செய்தும் கேதேஸ்வரனை வழிபடுதல் வேண்டும். இருபத்தொரு நாளும் பூஜையில் வைக்கப்பட்ட இருப்பத்தொரு முடிச்சுக்கள் கொண்ட நூலினை இருபத்தோராவது திதியான அமவாசைத் திதியில் இடது கையில் கட்டிக்கொள்ளவேண்டும்.

## இவ்விரத்தை அனுஷ்டிக்கக் கூடியவர்கள்

ஐந்து மாதங்களிற்கு மேல் கர்ப்பிணியாக இல்லாத பெண்களும் மாதவிலக்கு நீக்கப்பெற்ற பெண்களும் 21 நாட்கள் விரதமிருக்கலாம். ஏனையோர் மாதவிலக்கு அம்முறை வந்தபின் அமாவாசைத் திதிக்கு முன்னுள்ள 9 நாட்களோ 7 நாட்களோ மூன்று நாட்களோ அல்லது அன்றைய தினமோ இவ் விரதத்தை அனுஷ்டித்து 21 முடிச்சிட்ட கயிற்றை இடது புஜத்திலோ அல்லது மணிக்கட்டிலோ கட்டிக் கொள்ளலாம். கேதாரகௌரி தினத்தில் பார்வதி சமேதரான சிவபெருமானை வழிபடவேண்டும். ஆண்களும் இவ்விரத்தை அனுஷ்டிக்கலாம்.

## பூலோகத்தில் இவ்விரதம் பரவிய முறை

சிவபெருமானின் அருகேயுள்ள நந்திகேசர் இவ்விரத மகிமையை சிவபக்தனான கந்தர்வராஜனுக்கு கூறியருளினார். விரத்தை அனுஷ்டித்துப் பெருமானை அடைந்த கந்தர்வராஜனும் மானிட உலகில் இவ்விரதத்தைப் பரப்ப எண்ணி பூலோகத்தில் உஜ்ஜயினி பட்டணத்தின் மன்னனுக்கு கூறினான். மன்னனும் இவ்விரத்தினால் சிறந்த சுகபோகங்களைப் பெற்றான். மேலும் உஜ்ஜயனி தேசத்து வைசிய குலத்துப் பெண்களான புண்ணியவதியும், பாக்கியவதியும் இவ்விரதத்தை அனுஷ்டித்தார்கள். மிகவும் வறுமையினால் வாடிய இவர்கள் இவ்விரதத்தை அனுஷ்டிக்க சிவபெருமான் தோன்றி இவர்களுக்கு வேண்டிய செல்வத்தையும் நீண்ட ஆயுளையும் நல்வாழ்வையும் கொடுத்தருளினார்.

இந்த விரதம் தமிழகத்தில் நாமக்கல் மாவட்டத்தில் திருச்செங்கோடு அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருமலையில் வருடந்தோறும் கடைப்பிடிக்கப்படுகிறது. ஆனால் இங்கு ஆவணிமாதம் வளர்பிறை நவமியில் ஆரம்பித்து புரட்டாசி மஹாளய அமாவாசைக்கு முன்தினம்வரை 21 நாட்கள் நடைபெறுகிறது. வாய்ப்பு உள்ளவர்கள் அவசியம் கலந்து கொள்ளவேண்டும்

## விரதபலன்

தம்பதிகள் சேமமாக இருத்தலும் பிணிநீங்கலும் வறுமை நீங்கி செல்வம் பெறுவதற்கும் கன்னியர்களுக்கு விரைவில் திருமணம் நடைபெறுவதற்கும் சிவனருளைப் பரிபூரணாகப் பெறுவதற்கும் உகந்தது. கணவனும் மனைவியும் கருத்தொருமித்து ஒற்றுமையாக வாழவேண்டும் என்பதே இவ்விரத்தின் அடிப்படைத் தத்துவமாகும். ●

## நடன தரிசனம்!

**திருவான்மியூர் மருந்தீஸ்வரர் கோயில் சிவலிங்கம் பால் நிறமான சுயம்பு மூர்த்தம். வால்மீகி ரிஷி வழிபட்ட இத்தலத்தில் அவரது உற்சவத் திருமேனி உள்ளது. மேலைக் கோபுர வாயிலில் பவுர்ணமி தோறும் வால்மீகி முனிவருக்கு தியாகராஜர் நடன தரிசனம் கொடுக்கின்றார் என்பது ஐதீகம்.**



# பங்குனி உத்தரம்

பங்குனி உத்தரம் என்பது சைவக் கடவுளாகிய முருகனுக்குரிய சிறப்பு விரத தினமாகக் கொண்டாடப்படுகிறது. இது பங்குனி மாதத்தில் வரும் உத்தர நட்சத்திர தினமாகும். தமிழ் மாதங்களில் 12ம் மாதம் பங்குனி. நட்சத்திரங்களில் 12ம் நட்சத்திரம் உத்தரம். எனவே 12 கை வேலவனுக்குச் சிறப்பான தினமாகக் கொண்டாடப்படுகிறது. அநேகமான முருகன் கோயில்களில் இத்தினத்தில் வருடாந்த திருவிழாக்கள் (மஹோற்சவம்) நடைபெறும்.

அறுபடை வீடுகளில் மூன்றாம் படைவீடான திருவாவினன்குடி அமைந்து இருக்கும் பழனியில் பங்குனி மாதம் உத்தரம் நட்சத்திர திதியில் நடைபெறும் விழா பங்குனி உத்தரம் ஆகும். அனைத்து அறுபடைவீடுகளில் பங்குனி உத்தரம் விழா நடைபெற்றாலும், பழனியில் நடைபெறும் பங்குனி உத்தரம் திருவிழாவும், தேரோட்டமும், சிறப்பு வாய்ந்த திருவிழாவாகும்.

திண்டுக்கல் மாவட்டமும், அதைச்சுற்றியுள்ள மாவட்டங்களிலிருந்து, சைவ சமயத்தவர்கள், ஈரோடு மாவட்டம், கொடுமுடிக்குச் சென்று காவிரி நதியில் தீர்த்தம் (புனித நீர்) கொண்டுவந்து, பழனியில் போகரால் நிறுவப்பட்ட நவபாசாண முருகனுக்கு செலுத்துவார்கள். பங்குனியில் வெயில் கடுமையாக இருக்கும், நவபாசாணத்தால் ஆன முருகன் சிலை வெப்பத்தால் சிதைந்து போகாமல் இருக்க மூலிகைகள் கலந்த காவிரி நதியின் நீரால் குளிர்விப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட திருவிழா பங்குனி உத்தரம் திருவிழா.

## மீனாட்சி கல்யாணம்

சிவனுக்கும் பார்வதிக்கும் சோமசுந்தரர் என்றும் மீனாட்சி என்றும் நாமம் கொடுத்து மணம் செய்வித்த நாளும் பங்குனி உத்தர நாளாகும். சிவனின் மோன நிலையைக் கலைத்த மன்மதனை எரித்ததால் கலங்கி நின்ற தேவர்களுக்கு ஆறுதல் வார்த்தையாக சிவன் தேவியை இத்தினத்தில் மணந்தார் என்பது ஐதீகம்.

இத்தினத்தில் சிவனுக்கும் பார்வதிக்கும் ஆடை அணிகளால் அழகுசெய்து மணவறையில் அமர்த்தி வாத்தியங்கள் முழங்க, வேதங்கள் ஓதி, ஹோமம் வளர்த்து, தோத்திரங்கள் கூறி, தாலி கட்டி, வாழ்த்துக்கள் கூறி, அலங்கரித்த பல்லக்கில் இருவரையும் ஊர்வலமாகக் கொண்டு சென்று பள்ளியறைக்கு அனுப்பி வைப்பார்கள்.

பங்குனி உத்தரக் கல்யாணத் திருவிழா பசுவாகிய ஆன்மா பதியாகிய சிவத்துடன் இணைவதாக ஓர் உயர்ந்த நிலையினை எடுத்துக்காட்டுகின்றது. இத்தினத்தில் அம்மையப்பனைக் குறித்து சைவர்கள் விரதமிருப்பர். பகற்பொழுது உணவு உட்கொள்ளாது, இரவில் பால், பழம் போன்ற உணவு வகைகளை உட்கொண்டு, விரதம் அனுஷ்டிப்பர். இதனைக் கல்யாணசுந்தர விரதம் என்றும் அழைப்பர்.



# திருவாதிரை நோன்பு



திருவாதிரை நோன்பு (விரதம்) என்பது திருவாதிரை நட்சத்திரத்தோடு கூடிய நிறைமதி நாளில் உபவாசம் இருந்து நோற்கும் ஒரு நோன்பாகும். அத்துடன், திருவெம்பாவை வழிபாட்டுக்குரிய பத்துத் தினங்களின் இறுதி நாளாகவும் மார்கழித் திருவாதிரை அமைகின்றது. சிவனுக்குரிய நட்சத்திரம் திருவாதிரை ஆகும். இவ்விரதம் சிவனுக்கு மிகவும் உகந்தது. இதனை ஒட்டியே சிவபெருமானை ஆதிரையின் முதல்வன் என்றும் ஆதிரையான் என்றும் கூறுவர்.

## ஆருத்ரா தரிசனம்

மார்கழி மாதம் தஷிணாயனத்தின் இறுதி மாதமாகும். மார்கழி மாதத்தில் தில்லைச் சிதம்பரத்தில் கோவில் கொண்டருளிய நடராஜப் பெருமானைத் தரிசிக்க தேவர்கள் ஒன்றுகூடுவதாக ஐதீகம் உண்டு. தேவர்களுக்கு இம்மாதம் அதிகாலைப் பொழுதாகும். இக்காலத்தில் (வைகறையில்) சுவாமி தரிசனம் செய்வது உத்தமமாகக் கருதப்படுகின்றது. அக்காலத்தைப் பிரம்ம முகூர்த்தம் என்றும் அழைப்பர்.

மார்கழி மாதம் திருவாதிரை நாளன்று நடராசருக்குச் சிறப்புகள் நடைபெறும். அவற்றுள் சிதம்பரத்தில் நடப்பது மிகவும் சிறப்புடையது. திருவாதிரை தினத்தில் தில்லை நடராஜப் பெருமான் ஆரோகணித்து தேரில் வீதி வலம் வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.இதை ஆருத்ரா தரிசனம் செய்வதற்காக செல்வர். ஆருத்ரா என்பது ஆதிரையைக் குறிக்கும் சொல். இக்காட்சியியைக் கண்டு தரிசிக்க பிறநாடுகளில் இருந்து அடியார் கூட்டம் தொன்று தொட்டு இங்கு செல்வது வழக்கம். சிதம்பரம் பஞ்சபூதத் தலங்களில் ஆகாயம் என்றும் நடராஜப் பெருமானைத் தரிசிக்க முத்தி கிடைப்பதாகவும் சொல்லப்படுகின்றது.

சைவர்களுக்கு மார்கழி மாதம் திருவாதிரை திருவெம்பாவை நோன்பினாலும், விநாயகர் சஷ்டி விரதத்தாலும் பெருமை பெறுகின்றது. சைவர்களுக்கு மட்டுமல்லாமல் வைஷ்ணவர்களுக்கும் இம்மாதம் சிறப்புக்குரியதாகும். சுவர்க்க வாயிலில் ஏகாதசி விரதம் இம்மாதத்திலேயே கடைப்பிடிக்கப்படுகின்றது. கண்ணன் கீதையில் மாதங்களில் நான் மார்கழி என்று கூறியுள்ளார். ஆண்டாளும் தனது திருப்பாவையில் மார்கழி மாதத்து மதி நிறைந்த நன்னாள் என வர்ணிக்கின்றாள். இதனை சிறப்புடைய மார்கழி மாதத்து ஆதிரை நாள் என்று அழைக்கப்படும்.

### ஐதீகக் கதை

தாருகா வனத்து முனிவர்கள் சிவபெருமானை நிந்தித்து ஒரு பெருவேள்வி நடத்தினர். சிவனார் பிச்சாடனர் வேடமேற்று பிச்சை எடுக்க முனிவர்களின் இல்லங்களுக்குச் சென்றார். முனிபத்தினிகள் தம்மை மறந்து பிச்சாடனராகிய சிவபெருமான் பின்னே செல்லலாயினார். இதனால் வெகுண்ட முனிவர்கள் வேள்வித்தீயில் மத யானை, முயலகன், உடுக்கை, மான், தீப்பிழம்பு என்பவற்றைத் தோற்றுவித்து சிவன்பால் ஏவினர்.

சிவனார் மதயானையைக் கொன்று, அதன் தோலை அணிந்தார். மற்றவைகளைத் தானே தரித்துக் கொண்டு முயலகன் மீது வலது காலை ஊன்றி இடது காலைத் தூக்கி நடனமாடி, முனிவர்களுக்கு உண்மையை உணர்த்தினார். இதுவே ஆருத்திரா தரிசனம் என்று சொல்லப்படுகின்றது.

## நோன்பு நோற்கப்படும் முறை

மார்கழி மாத திருவாதிரையை இறுதி நாளாகக் கொண்டு, பத்துத் திங்கள் திருவெம்பாவை நோன்பு நோற்கப்படுகின்றது. சில சிவாலயங்களில் பகல் திருவிழாவும், ஒன்பதாம் நாள் தேர்த்திருவிழாவும் அன்று பின் இரவு அதிகாலை வேளையில் நடராஜப் பெருமானுக்கு விஷேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றுப் பத்தாம் நாள் சூரிய உதயத்தில் தரிசனம் நடைபெறும்.

விரதத்தைக் கடைப்பிடிப்போர் திருவாதிரை தினம் உபவாசம் இருந்து மறுநாள் பாரணஞ் செய்வர். திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் தமது தேவாரத்தில் ஆதிரை நாளைப் பின்வருமாறு சிறப்பித்துள்ளார்.

*'ஊர்திரை வேலை யுலாவும் உயர்மலைக்*
*கூர்தரு வேல்வல்லார் கோற்றங் கோள் சேரிதனில்*
*கார்தரு சோலைக் கபாலீச்சரம் அமர்ந்தான்*
*ஆதிரைநாள் காணாதே போதியார் பூம்பாவாய்'*

திருநாவுக்கரசரும் திருவாரூரில் நிகழ்ந்த திருவாதிரை விழாவின் சிறப்பினையும் அழகையும் பின்வருமாறு பாடியுள்ளார்.

*'முத்து விதான மணிப்பொற் கவரி முறையாலே*
*பக்தர்க ளோடு பாவையர் சூழப் பலிப்பின்னே*
*வித்தகக் கோல வெண்டலை மாலை விரதிகள்*
*அத்தனாரூ ராதிரை நாளா லதுவண்ணம்'*

சங்சரசங்கிதை என்னும் வடமொழி நூலின் உபதேச காண்டத்தில் இந்நோன்பின் மகிமை கூறப்பட்டுள்ளது. கச்சியப்ப சிவாசாரியாரின் மாணாக்கராகிய கோனேரியப்ப முதலியார் தமிழில் இதனை மொழிபெயர்த்துள்ளார்.

---

# சிவபெருமானை வழிபட்டு உய்வு பெற்ற உயிர்கள்

சக்தி, பெருமால், பிரம்மா, இந்திரன், தேவர்கள் என சிவபெருமானை வழிபட்டு பேரு பெற்றதைப் போல பூமியில் உள்ள உயிர்களும் உய்வு பெற்றுள்ளன. கீழே உயர்களின் பெயர்களும், வழிபட்ட தலங்களும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சிங்கம் | – | திருநல்லூர் | நாரை | – | நாரையூர், மதுரை |
| யானை | – | திருக்குற்றாலம், மதுரை, காளையார் கோவில், திருவானைக்காவல், திருக்காளத்தி | கரிக்குருவி | – | மதுரை, வலிவலம் |
| | | | மயில் | – | மயிலாடுதுறை, மயிலாப்பூர் |
| | | | கருடன் | – | வைத்தீஸ்வரன், சிறுகுடி |
| | | | நண்டு | – | திருந்துதேவன்குடி, திருநீடூர் |
| காளை | – | திருவையாறு | வண்டு | – | திருசைலம், திருண்டுறை, வாழ்கொளிபுத்தூர் |
| பசு | – | ஆவூர், செய்யாறு, ஆவடுதுறை கரூர், பட்டீஸ்வரம் | தேனீ | – | நன்னிலம் |
| குதிரை | – | சீயாத்தமங்கை | ஆமை | – | திருமணஞ்சேரி |
| ஆடு | – | திருவாடானை | எறும்பு | – | திருவெறும்பூர் |
| பன்றி | – | சிவபுரம் | பாம்பு | – | காளத்தி, திருப்பாம்புரம், குடந்தைக் கீழ்க்கோட்டம் |
| கழுதை | – | கரவீரம் | | | |
| குரங்கு, | | | சிலந்தி | – | ஆனைக்கா |
| அணில், காகம் | – | குரங்கணில் முட்டம் | எலி | – | திருமறைக்காடு |
| முயல் | – | திருப்பாதிரிப் புலியூர் | ஈ | – | திருஈங்கோய் மலை |



# மகா சிவராத்திரி

## சிவராத்திரி விரத வகைகள்

சிவராத்திரி விரதம் ஐந்து வகைப்படும்

*நித்திய சிவராத்திரி*
*மாத சிவராத்திரி*
*பட்ச சிவராத்திரி*
*யோக சிவராத்திரி*
*மகா சிவராத்திரி*

மகா சிவராத்திரி இந்துக்களால் கொண்டாடப்படும் சிவனுக்குரிய விரதமாகும். இவ்விரதம் ஆண்டுதோறும் மாசி மாதத்தில் வரும் கிருஷ்ணபட்ச (தேய்பிறை) சதுர்த்தசி திதியில் இரவில் கொண்டாடப்படும். இதன் நோன்பு முறைகளைக் கூறும் நூல் மகா சிவராத்திரி கற்பம் என்னும் சிறிய நூல்.

ஒவ்வொரு மாதமும் தேய்பிறை சதுர்த்தசி இரவு மாத சிவராத்திரி ஆகும். சிவனடியார் பலர் இந்த சிவராத்திரியையும் மாதந்தோறும் தவறாமல் கடைப்பிடித்து வருகின்றனர்.

விரதம் கடைப்பிடிப்போர் (விரதம் பிடிப்போர்) முதல் ஒருநாள் ஒரு பொழுது உணவருந்தி சிவராத்திரியன்று உபவாசமாய் காலையில் குளித்து சிவ சிந்தனையுடன் கண்விழித்திருந்து நான்கு யாம வழிபாடு செய்யவேண்டும். அடுத்தநாள் காலையில் தீர்த்தமாடி, சுவாமி தரிசனம் செய்து அடியார்களுடன் உணவருந்தி (பாரணை செய்து) விரதத்தை நிறைவு செய்தல் வேண்டும்.

சிவாலயங்களில் நடைபெறும் நான்கு யாம அபிசேக ஆராதனைகளுக்கு அவரவர் வசதிக்கேற்பப் பொருள்களைக் கொடுத்து உதவலாம்.

## நான்கு யாம வழிபாட்டிற்குரிய திரவியங்கள்

### முதல் யாமம்

வழிபட வேண்டிய மூர்த்தம் - சோமாஸ்கந்தர்
அபிஷேகம் - பஞ்சகவ்யம்
அலங்காரம் - வில்வம்
அர்ச்சனை - தாமரை, அலரி
நிவேதனம் - பருப்பன்னம்
பழம் - வில்வம்
பட்டு - செம்பட்டு
தோத்திரம் - இருக்கு வேதம், சிவபுராணம்
மணம் - பச்சைக் கற்பூரம், தேர்ந்த சந்தணம்
புகை - சாம்பிராணி, சந்தணக்கட்டை
ஒளி - புட்பதீபம்

### இரண்டாம் யாமம்

வழிபட வேண்டிய மூர்த்தம் - தென்முகக் கடவுள்
அபிஷேகம் - பஞ்சாமிர்தம்
அலங்காரம் - குருந்தை
அர்ச்சனை - துளசி
நிவேதனம் - பாயசம், சர்க்கரைப் பொங்கல்
பழம் - பலா
பட்டு - மஞ்சள் பட்டு
தோத்திரம் - யசுர் வேதம், கீர்த்தித் திருவகவல்
மணம் - அகில், சந்தணம்
புகை - சாம்பிராணி, குங்குமம்
ஒளி - நட்சத்திர தீபம்

### மூன்றாம் யாமம்

வழிபட வேண்டிய மூர்த்தம் - இலிங்கோற்பவர்
அபிஷேகம் - தேன், பாலோதகம்
அலங்காரம் - கிளுவை, விளா
அர்ச்சனை - மூன்று இதழ் வில்வம், சாதி மலர்
நிவேதனம் - எள் அன்னம்
பழம் - மாதுளம்
பட்டு - வெண் பட்டு
தோத்திரம் - சாம வேதம், திருவண்டப்பகுதி
மணம் - கஸ்தூரி சேர்ந்த சந்தணம்
புகை - மேகம், கருங் குங்கிலியம்
ஒளி - ஐதுமுக தீபம்

### நான்காம் யாமம்

வழிபட வேண்டிய மூர்த்தம் - சந்திரசேகரர் (இடபரூபர்)
அபிஷேகம் - கருப்பஞ்சாறு, வாசனை நீர்
அலங்காரம் - கரு நொச்சி
அர்ச்சனை - நந்தியாவட்டை
நிவேதனம் - வெண்சாதம்
பழம் - நானாவித பழங்கள்
பட்டு - நீலப் பட்டு
தோத்திரம் - அதர்வண வேதம், போற்றித்திருவகவல்
மணம் - புணுகு சேர்ந்த சந்தணம்
புகை - கர்ப்பூரம், இலவங்கம்
ஒளி - மூன்று முக தீபம்

## இவ்விரதம் பற்றிய ஐதீகங்கள்

இவ்விரத்தைப் பற்றிய ஐதீகங்கள் பல உள்ளன. ஒரு காலத்தில் உலகப் பிரளயத்தின் போது உயிர்கள் எல்லாம் சிவனிடத்தே ஒடுங்கின. உலகங்களே தோன்றவில்லை. இந்த நிலையில் எல்லையில்லாக் கருணையுடைய அம்பிகை அண்டங்கள் தோன்றி இயங்கும் பொருட்டு இறைவனை இடைவிடாது தியானம் செய்தாள். அப்போது இறைவன் தன்னுள் ஒடுங்கி இருந்த உலகங்களை மீண்டும் உண்டாகச் செய்து உயிர்களையும் படைத்தருளினார். அப்பொழுது உமையவள் சுவாமி நான் தங்கள் மனதில் தியானித்துப் போற்றிய காலம் **சிவராத்திரி** என்று பெயர் பெறவேண்டும் என்றும் அதனைச் சிவராத்திரி விரதம் என்று யாவரும் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அதை கடைப்பிடிப்பவர்கள் எல்லா நலன்களும் பெற்று முக்தியடையவேண்டும் என்று பிராத்தித்தார் இறைவனும் அவ்வாறே என்று அருள் புரிந்தார். அம்பிகையைத் தொடர்ந்து நந்தியம் பெருமான், சனகாதி முனிவர் சிவராத்திரி விரதம் அனுஷ்டித்து தங்கள் விருப்பம் நிறைவேறப்பெற்றார்.

## விரத காலங்களில் ஓதக் கூடிய தேவாரங்கள்

திருக்கேதீச்சரப் பதிகங்கள்
திருவண்ணாமலைப் பதிகங்கள்

## பலன் தரும் பரிகாரங்கள்

மாசிமாதம் கிருஷ்ணபட்சம் சதுர்த்தியன்று அமாவாசைக்கு முதல் நாள் சிவராத்திரி விரதம் கொண்டாடப்படுகிறது. அன்றைய தினம் சிவபெருமானை வழிபட்டால் கவலைகள் அனைத்தும் நீங்கும்.காரிய வெற்றியும் ஏற்படும். 'சிவாய நம' என்று சிந்தித்திருந்தால் 'அபாயம்' நமக்கு ஏற்படாது, 'உபாயம்' நமக்கு ஏற்படும் என்று முன்னோர்கள் கூறியுள்ளனர். அந்த புனிதமான நாளில் விரதம் இருந்தால் புண்ணியமும் கூடும்.பொருளாதார நிலையும் உயரும். ஒரு நாள் முழுவதும், ஆறு கால பூஜையிலும் சிவனை நினைத்து வழிப்பட்டு சிவாலயங்களில் சிவன் சன்னதியில் அமர்ந்து சிவன் பெயரை உச்சரித்து வந்தால் ஒரே நாளில் ஓர் ஆண்டிற்கான பலனும் நமக்கு கிடைக்கும். அதனால் தான் சிவராத்திரி விரதம் சிறந்த பலனைக் கொடுக்கிறது. ●



# சேந்தனார் வரலாறு

**சே**ந்தனார் ஓர் விறகுவெட்டி. அவர் சிதம்பரம் அருகேயுள்ள ஓர் ஊரில் வாழ்ந்து வந்தார். அவர் சிறந்த சிவபக்தர். தினமும் ஒரு சிவனடியாருக்கு உணவளித்தப்பின் தான் உணவருந்துவார்.

ஒரு நாள் அதிகமாக மழைபெய்து விறகுகள் ஈரமாயின. அதனால் அன்று அவரால் விறகு விற்க முடியவில்லை. அதனால் அரிசி வாங்க காசு அவரிடம் இல்லை. எனவே அன்று கேழ்வரகில் களி செய்து சிவனடியாரை எதிர்பார்த்திருந்தார். ஆனால் யாரும் தென்படவில்லை. மனம் நொந்த சேந்தனாரின் பக்தியை உலகிற்கு உணர்த்த விரும்பி நடராஜப் பெருமான் ஓர் சிவனடியார் வேடத்தில் சேந்தனார் இல்லம் ஏகினார். சேந்தனார் அகமகிழ்ந்து களியை சிவனடியாருக்குப் படைத்தார். சிவனடியார் களியை மிக விருப்பமுடன் உண்டதுமல்லாமல் எஞ்சியிருந்த களியையும் தனது அடுத்த வேளை உணவிற்குத் தருமாறு வாங்கிச் சென்றார்.

மறுநாள் காலையில் வழக்கம் போல் தில்லைவாழ் அந்தணர்கள் சிதம்பரம் கோயில் கருவறையைத் திறந்தனர். என்ன அதிசயம்! நடராஜப் பெருமனைச் சுற்றி எங்கும் களிச் சிதறல்கள். உடனே அரசருக்கு அறிவித்தார்கள். அரசர் அன்று இரவு தான் கண்ட கனவை எண்ணினார். கனவில் நடராஜப் பெருமான் தான் களியுண்ணச் சென்றதைத் தெரிவித்து இருந்தார். அதன்படி சேந்தனாரைக் கண்டு பிடிக்கும்படி அமைச்சருக்கு ஆணையிட்டார். ஆனால் அவரோ அன்று சிதம்பரம் நடராஜப் பெருமானின் தேர்த்திருவிழா நடந்துகொண்டிருந்தது. அதற்குச் சேந்தனாரும் வந்திருந்தார்.

எம்பெருமானைத் தேரில் அமர்த்திய பின், அரசர் உட்பட எல்லோரும் தேரை வடம்பிடித்து இழுத்தார்கள். மழைகாரணமாக சேற்றில் தேர் அழுந்திச் சிறிதும் அசையாது நின்றது. அரசர் மிகவும் மனவருந்தினார். அப்போது அசரீரியாக ‘சேந்தா நீ பல்லாண்டு பாடு’ என்று கேட்டது. சேந்தானாரோ ஒன்றும் அறியாத யான் எப்படிப் பாடுவேன் என்று நடராஜப் பெருமானைத் துதித்தார். எம்பெருமானும் அதற்கு அருள் புரிந்தார்.

சேந்தனார் இறைவன் அருளால் ‘மன்னுகதில்லை வளர்க நம்பக்தர்கள் வஞ்சகர் போயகல’ என்று தொடங்கி ‘பல்லாண்டு கூறுதுமே’ என்று முடித்துப் பதின்மூன்று பாடல்கள் இறைவனை வாழ்த்திப் பாடினார். உடனே தேர் நகர்ந்தது. சேந்தனாரின் கால்களில் அரசரும், அந்தணர்களும், சிவனடியார்களும் வீழ்ந்து வணங்கினார்கள். அரசர் தாம் கண்ட கனவைச் சேந்தனாருக்குத் தெரிவித்தார். சேந்தனார் அவர் வீட்டிற்குக் களியுண்ண நடராஜப் பெருமானே வந்தார் என்றதை அறிந்து மனமுருகினார். அன்றைய தினம் திருவாதிரை நாள் என்றும், இன்றும் ஆதிரை நாளில் நடராஜப் பெருமானிற்குக் களிபடைக்கபடுவதாகச் சொல்லப்படுகின்றது. •



# ஈழம் தந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்

ஈழத்தில் சைவத்தையும் தமிழையும் தழைத்தோங்க அரும்பணி ஆற்றிய நல்லைநகர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானை சைவ உலகம் என்றென்றும் நினைவு கூற வேண்டும். அவரது வரலாற்றைச் சைவத் தமிழ் உலகம் அறிந்து கொள்ள வேண்டும்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் 1822ம் ஆண்டு மார்கழி 5ம் நாள் நல்லைநகரில் பிறந்தார். இவர் 1879ம் ஆண்டு கார்த்திகை 21ம் நாளில் சிவபூரணம் எய்தினார். ஏறக்குறைய 57 வருடம் வாழ்ந்து சைவத் - தமிழ்ப் பணியாற்றிய பெருமகனார் ஒரு சகாப்தத்தில் வரலாறு படைத்த தேசிய வீரராக விளங்கியவர். விடுதலைக்கு வித்திட்ட முன்னோடி, சைவம் காத்த சான்றோன், வசனநடை வித்தகர், நாவன்மையாளர், என்ற பெருமையான பெயர்களைத் தமது சமூக சமுதாயப் பணியில் ஈடுபடுத்திப் பெற்றுக்கொண்டவர்.

400 ஆண்டுகளுக்கு மேலாக அன்னியர் ஆட்சியில் அடிமைப்பட்டிருந்த இலங்கையில், பண்டைக்காலம் முதலாக வேரூன்றியிருந்த சைவ சமயம் அழிவுற்ற நிலைக்கு வந்தது. சைவ சமயம் ஈழத்தில் ஆதிகாலம் தொட்டு தழைத்தோங்கியது என்பதற்கான வரலாறுகள் உள்ளன.

சைவ சமயம் ஈழத்து மண்ணிலே பண்டைக்காலம் முதலாக வேரூன்றி இருந்தது. ஈழத்தில் காணப்பெறும் மிகப்பழைய பிராமிச் சான்றுகள் கிறிஸ்துவுக்கு முன் 3-ம் நூற்றாண்டுக்கும் கி.பி.1ம் நூற்றாண்டின் நடுக்கூறிற்கும் இடைப்பட்டதாக கருதப்படுவன. இச்சாசனங்களில் இடம்பெறும் 'சிவ' என்று தொடங்கும் பெயர்களையும் 'சிவ' என்பதுடன் முடியும். பெயர்களையும் சி. குணசிங்கம் தொகுத்தளித்துள்ளார். ஈழத்திலே சைவ சமயம் நிலவி இருந்ததை இச்சான்றுகளுடன் மேலும் ஐந்து ஈஸ்வர ஆலயங்கள் இலங்கையில் இருந்ததை ஆதாரமாகக் கூறலாம்.

அனுராதபுர நகர அழிபாடுகளிலே அனுராதபுர அரசர் காலகட்டத்தின் பிற்கூறிற்கு உரியனவான சக கோயில்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

நடைமுறைத் தமிழ் இயக்கத் தலைவர் வேலணையூர் க. இளையதம்பி அவர்களும் ஐ.தி. சம்பந்தன் இருவரும் குரல் எழுப்பினார்கள். அப்பொழுது அமைச்சராகவிருந்த திருச்செல்வம் அவர்கள் மேற்கொண்ட முயற்சியும் பலனளிக்கவில்லை. நாவலர் பிறந்த மண்ணில் அவருக்குச் சிலை அமைக்காதவர்கள் தமிழகத்தில் சிலை வைக்கும்படி கேட்பது நியாயமற்ற கேள்வி என ஆராய்ச்சி மாநாட்டுக் குழுவில் எழுப்பப்பட்டது.

அதன் எதிரொலியே நடைமுறைத்தமிழ் இயக்கத்தின் பெரும் முயற்சியினால் உருவாக்கப்பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை (1969) நாவலருக்குச் சிலை நாட்டும் பணியைத் தீவிரமாக மேற்கொண்டது.

நீதியரசர் சிவசுப்பரமணியம் தலைவராகவும்; திரு. ஸ்ரீகாந்தா - செயலாளராகவும்; இணைச் செயலாளராகவும் - ஐ.தி. சம்பந்தன், திரு. சோமகாந்தன்; பொருளாளராக - செனேற்றர் த. நீதிராஜா; துணைப் பொருளாளராக மெய்கண்டான் அதிபர் - இரத்தினசபாபதி ஆகியோர் கொண்ட நிர்வாக சபையினால் நாவலர் பெருமானுக்குச் சிலை வைக்கும் பணி தீவிரமாக நடைபெற்றது.

நாவலருக்குச் சிலைவைக்கும் வைபவம் தேசியவிழாவாக உருவெடுத்தது. இலட்சக்கணக்கான ரூபாய் செலவில் வெண்கலத்தில் உருவாக்கப்பட்ட நாவலர் பெருமான் சிலை கொழும்பிலிருந்து தேசிய பவனியாக யாழ்ப்பாணம் எடுத்துச் செல்லப்பட்டது.

நல்லூர் கந்தசாமி கோவிலுக்கு அருகாமையிலுள்ள நாவலர் காணியில் அமைக்கப்பட்ட நாவலர் மணிமண்டபத்தில் நாவலர் சிலை வைக்கப்பட்டது. கோலாகலமாக பல்லாயிரக்கணக்கான மக்கள் வருகை

தந்திருந்தனர். ஈழத்தில் சைவத்தையும், தமிழையும் தழைத்தோங்க வைத்த நாவலர் பெருமானுக்குப் பிறந்த மண்ணில் பொருத்தமான இடத்தில் சிலை நிறுவப்பட்டதினால் மக்கள் குதூகலித்திருந்தனர்.

சோழப்பேரரசின் அங்கமாக ஈழம் நிலவிய காலத்தில் (922-1070) ஈழத்தின் தமிழ்ப்பிரதேசங்களிலும் சிங்களப் பிரதேசங்களிலும் பல சைவக் கோவில்கள் தோன்றி இருந்ததை சாசனங்களும் அழிபாடுகளும் சான்று பகன்று நிற்கின்றன.

வன்னியர் ஆட்சியில் அவர்களுடைய பிரதேசத்தில் சைவக் கோவில்கள் பல நிலவியதை வையாபாடல் உணர்த்துகின்றது. ஆரியச் சக்கரவர்த்திகள் கி.பி. 14ம் நூற்றாண்டு முதல் கி.பி. 17ம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை தமிழ்ப் பிரதேசங்களில் தனியரசு கண்டவர்கள். அவர்களுடைய ஆட்சியில் சைவ சமயம் குறிப்பிடத்தக்க வளர்ச்சி அடைந்திருந்தது.

இவ்வாறு பொலிவுற்று வளர்ச்சி பெற்றிருந்த சைவ சமயத்திற்கு அன்னியர் ஆட்சியின் பின் பாரிய இழப்புகள் ஏற்பட்டு இருந்தன. 16ம் நூற்றாண்டில் இருந்து 20ம் நூற்றாண்டுவரை ஒல்லாந்தர். போர்த்துக்கேசியர், ஆங்கிலேயர் ஆட்சிகளினால் சைவ ஆலயங்கள் அழிக்கப்பட்டபோது சைவ சமய வளர்ச்சி மிகக்குன்றியிருந்தது.

ஆங்கிலேயர்கள் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட கிறித்தவ சூழலால் சைவர்கள் மதம் மாறும் சூழ்நிலையும் மிக வேகமாக நடைபெற்று வந்தன. இந்தக் காலக்கட்டத்தில் விடிவெள்ளி போல் தோன்றிய நாவலர் பெருமான் தனிமனிதனாக நின்று சைவத்தையும் தமிழையும் அழிவுப் பாதையிலிருந்து பாதுகாத்து சைவக் காவலனாக விளங்கினார்.

ஆங்கிலக் கல்வியும் கிறித்தவ கலாச்சாரமும் வேகமாகப் பரவத் தொடங்கின. அமெரிக்க மிஷனரிமாரின் கல்விக் கூடங்களாலும், சமயப்பிரச்சாரத்தாலும் ஈழத் தமிழ் மக்களிடம் ஆங்கிலக் கல்வியும் கிறித்தவ கலாச்சாரமும் வேகமாகப் பரவத் தொடங்கின. அமெரிக்க மிஷனரிமாரின் சமயப் பிரசாரமும், கல்விக் கூடங்களும் சைவத் தமிழ் மக்களை மயக்கின. இதனால் வரலாற்றுப் பெருமையுடன் நிலைத்திருந்த சைவ சமயத்தைக் கைவிட்டு மதம் மாறும் சூழ்நிலை ஏற்பட்டிருந்தது. இவற்றை நாவலர் பெருமானால் பொறுக்க முடியவில்லை. சைவ சமய உணர்வை மக்களிடையே ஏற்படுத்த சமயப் பிரசாரத்தை மேற்கொண்டார். இவர் 31.12.1847 முதல் நிகழ்த்திய சைவப் பிரசாரங்கள் சைவ மக்களிடையே சைவாகம அறிவை வளர்க்க பெரிதும் உதவின. அவர் எழுத்தாலும், பேச்சாலும், பிரசுரங்களாலும் தீவிர பிரசாரம் மேற்கொண்டு சமயப் புரட்சி செய்து வந்தார். விழிப்புணர்வை ஏற்படுத்தினார். இதனால் ஏற்பட்ட மிஷனரிமாரின் எதிர்ப்பிரசாரங்களை ஆதாரத்துடன் எதிர்கொண்டார். ஈழத்தில் நீண்டகாலம் நிலைத்திருந்த சைவத்தையும் அதன்மூலம் தமிழ் தம் பண்பாட்டையும் அழிந்து போகாது காப்பாற்ற, சைவ சமய பாடசாலைகளையும், சைவப்பிரகாச அச்சு இயந்திர சாலையையும், யாழ்ப்பாணத்தில் நிறுவினார். சைவப் பாடசாலைகள், அச்சியந்திரசாலை நிறுவி அங்கும் சைவத்தையும் தமிழையும் வளர்க்கப் பணியாற்றினார்.

நாவலர் பெருமான் மேற்கொண்ட சைவ சமய சீர்திருத்த நடவடிக்கையால் சைவத் தமிழ் அறிஞர்களும், நாவலர் அவர்களிடம் கல்வி கற்கும் மாணவர்களும் அவர் கொள்கைகளைப் பின்பற்றுவோராக இருந்து வந்தனர். அவர்களே நாவலர் விட்டுச்சென்ற பணியைத் தொடர்ந்தனர். நாவலர் ஆரம்பித்த சைவத் தமிழ்ப் பணியைத் தொடர்ந்த அவரது வழிவந்தவர்கள் வரலாறும் பதியப்பட வேண்டும்.

பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, சி.தாமோதரம்பிள்ளை, சதாவதானம், நா. கதிரவேற்பிள்ளை, சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், செந்தில்நாத ஐயர், சித்தன் கேணி ஆ. அம்பலவாண நாவலர், கு. ஆறுமுகம் செட்டியார், சுழிபுரம் திருஞானசம்பந்த உபாத்தியாயர், வண்ணை. சி. பொன்னுத்துரை ஐயர், ச.பொன்னம்பல பிள்ளை, வண்ணை. வே. கனகரத்தினம் உபாத்தியாயர், அப்பாக்குட்டி உபாத்தியாயர், நீர்வேலி ச. சிவப்பிரகாச பண்டிதர், பசுபதிச் செட்டியார், மு. தில்லைநாதபிள்ளை போன்ற பலரை வரிசைப்படுத்தலாம்.

## யாழ்ப்பாணத்தில் நாவலருக்குச் சிலை

நாவலர்பெருமான் மறைந்து ஒரு நூற்றாண்டின் பின்னரே அப்பெரியாருக்குச் சிலை வைப்பதற்கு தமிழ் மக்கள் முன் வந்தனர். இதுவும் ஒரு சந்தர்ப்பவசத்தால் ஏற்பட்டதே. 1968 ஜனவரி மூன்றாம் தேதி சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் போது தமிழ்ப் பெரியார்களுக்கு சிலை நிறுவினார்கள். ஈழத்துத் தமிழறிஞர்களுக்கு நாவலர்பெருமான் உட்பட சில பெரியார்களுக்குச் சிலை அமைக்கப்படாததால் ஈழத் தமிழர் கொதிப்படைந்தனர். இதுவும் நாவருக்குச் சிலை அமைப்பதற்குத் தூண்டுதலாக அமைந்தது.



# அருள்மிகு குற்றம் பொறுத்த நாதர் திருக்கோயில்

திரு. செல்வராஜா

| | | |
|---|---|---|
| மூலவர் | : | குற்றம் பொறுத்தநாதர் (அபராதசமேஸ்வரர் ) |
| உற்சவர் | : | - |
| அம்மன்/தாயார் | : | கோல்வளை நாயகி (விஜித்ர வலையாம்பிகை ) |
| தல விருட்சம் | : | கொடி முல்லை |
| தீர்த்தம் | : | சூரிய புஷ்கரிணி, பொற்றாமரை |
| ஆகமம்/பூஜை | : | காரண, காமிய ஆகமம் |
| பழமை | : | 1000-2000 வருடங்களுக்கு முன் |
| புராண பெயர் | : | கருப்பறியலூர், கர்மநாசபுரம், மேலைக்காழி |
| ஊர் | : | தலைஞாயிறு |
| மாவட்டம் | : | நாகப்பட்டினம் |
| மாநிலம் | : | தமிழ்நாடு |

**பாடியவர்கள் : சம்பந்தர், சுந்தரர்**

**தலபெருமை:**

விசித்திராங்கன் என்ற மன்னன் தன் மனைவி சுசீலையுடன் குழந்தை பாக்கியம் வேண்டி இங்கு வந்து வழிபாடு செய்தான். இறைவன் அருளால் அவனுக்கு குழந்தை பிறந்தது. இதனால் மகிழ்ந்த மன்னன் இத்திருக்கோயிலை அழகுற கட்டினான் என்பது வரலாறு. சூரியபகவான் இத்தலத்தில் வழிபட்டதால் 'தலைஞாயிறு' என வழங்கப்படுகிறது.

இத்தலத்தில் செய்யும் அறச்செயல்கள் ஒன்றுக்கு பத்தாக பெருகும் என்பதை பிரம்மன் வசிஷ்டருக்கு கூறினார். அதனால் வசிஷ்டர் இங்கு லிங்கம் அமைத்து வழிபட்டு மெய்ஞானம் பெற்றார் என தல புராணம் கூறுகிறது.

72 மகரிஷிகள் இங்கு வழிபாடு செய்து முக்தி பெற்றுள்ளனர். இத்தலத்தில் வந்து வழிபடுபவர்கள் அடுத்த ஜென்மத்தில் தாயின் கருவில் தங்கமாட்டார்கள். அதாவது அவர்களுக்கு அடுத்த ஜென்மம் கிடையாது.

சிவனின் பாதத்தில் சேர்ந்துவிடுவார்கள் என்பது ஐதீகம். எனவே தான் இத்தலம் 'கருப்பறியலூர்' என வழங்கப்படுகிறது. அனுமன் தோஷம் நீங்கிய தலம். ராவண யுத்தத்தில் ராவணனை கொன்ற தோஷம் நீங்க ராமர், சிவபூஜை செய்ய நினைத்தார் எனவே அனுமனிடம் ''இரண்டு நாழிகைக்குள் ஒரு சிவலிங்கம் கொண்டு வா''என்றார்.

உத்தரவை ஏற்ற அனுமன் வட திசை நோக்கி சென்றான். குறிப்பிட்ட நேரத்திற்குள் அனுமன் வராததால் ராமர் மணலால் லிங்கம் பிரதிஷ்டை செய்து வழிபட்டார். அவரது பிரம்மஹத்தி தோஷமும் நீங்கியது.

ராமர் பூஜை செய்த தலம் ராமேஸ்வரம் ஆனது. தான் வருவதற்குள் லிங்கம் பிரதிஷ்டை செய்ததை அறிந்த அனுமன் வருந்தினான். அத்துடன் அந்த லிங்கத்தை தன் வாலினால் கட்டி இழுத்தான். ஆனால் முடியவில்லை. இப்படி செய்ததால் அனுமனுக்கு சிவஅபராதம் ஏற்பட்டது.

சிவனை குறித்து தவமிருந்தால் சிவ அபராதம் நீங்கும் என ராமர், அனுமனுக்கு யோசனை கூறினார். அனுமனும் அவ்வாறே செய்ய, சிவன் தோன்றி, ''அனுமனே! நீ கன்மபுரம் எனப்படும் தலைஞாயிறு சென்று வழிபாடு செய்தால் இந்த தோஷம் விலகும்,'' என அருள்பாலித்தார்.

அனுமனும் அதன் படி தலைஞாயிறு வந்து வழிபட்டு தோஷம் நீங்க பெற்றார். அதன் பிறகு சிவனின் கருணைக்கு வியந்து இத்தலத்தின் வடகிழக்கில் தன்பெயரால் ஒரு லிங்கம் அமைத்து அதை வழிபாடு செய்ய ஆரம்பித்தார். இத்தலம் தற்போது 'திருக்குரக்கா' என வழங்கப்படுகிறது.

### தல வரலாறு:

ராவணனின் மகன் மேகநாதன். இந்திரனை போரில் வென்றதால் இவனுக்கு 'இந்திரஜித்' என்ற பெயர் ஏற்பட்டது. ஒரு முறை இந்திரஜித் வானத்தில் புஷ்பக விமானம் மூலம் பறந்து கொண்டிருந்தான். வழியில் விமானம் தடைபட்டு நின்றது. கீழே பார்த்தபோது சிவாலயத்தின் மீது பறந்ததை உணர்ந்தான் . இதனால் இந்த தடை ஏற்பட்டது என அறிந்தான்.

இதனால் வருந்திய இந்திரஜித் இத்தல தீர்த்தத்தில் நீராடி இறைவனை பூஜித்தான். இவனது கவலை நீங்கி விமானம் மறுபடியும் பறந்தது. இப்படிப்பட்ட அற்புத லிங்கத்தை இலங்கைக்கு கொண்டு செல்ல முயன்றான். அது முடியாமல் போனதால் மயங்கி விழுந்தான்.

இந்த செய்தியை கேட்ட ராவணன் இத்தல சிவனின் திருவடியில் விழுந்து, தன் மகனின் குற்றத்தை பொறுத்து அருளுமாறு வேண்டினான். இறைவனும் அருள் செய்தார். எனவே இத்தல இறைவன் 'குற்றம் பொறுத்த நாதர்' எனப்படுகிறார்.

### சிறப்பம்சம்:

- அதிசயத்தின் அடிப்படையில்: இத்தல இறைவன் சுயம்பு மூர்த்தியாக அருள்பாலிக்கிறார்.

## சிவ பக்திக்கு அர்த்தம் தெரியுமா உங்களுக்கு?

ஸ்ரீஹர தத்தர் என்பவர், வைஷ்ணவ குடும்பத்தில் பிறந்து, சிறந்த சிவபக்தராக விளங்கியவர். ஒரு நாள், காவிரி கரையில் அமர்ந்து, தியானம் செய்து கொண்டிருந்தார் ஹரதத்தர். அந்த சமயம், ஒரு வேடனும், அவனது மனைவியும் பேசிக் கொண்டது, இவர் காதில் விழுந்தது. அவ்விருவரும் காவிரியை கடந்து, அக்கரைக்கு செல்ல வேண்டியவர்கள். ஆற்றில் தண்ணீர் குறைவாகவே இருந்ததால், ஆற்றில் இறங்கி நடந்தே, அக்கரை சேர்ந்து விடலாம் என்றாள் மனைவி. அதற்கு அவள் கணவன், அப்படி செய்யக் கூடாது. கங்கையை காட்டிலும், காவிரி புனிதமானது. அதனடியில் உள்ள ஒவ்வொரு மணலும், ஒவ்வொரு சிவலிங்கம் என்று பெரியோர் சொல்வர். நாம், கர்ம வசத்தால் இந்த குலத்தில் பிறந்துள்ளோம். கரையிலிருந்தபடியே, ஒரு பாத்திரத்தில் ஜலத்தை எடுத்து, காவிரி ஸ்நானம் செய்து விடலாம். இந்த கர்ம சரீரத்துடன், காவிரியில் இறங்கி, சிவலிங்கங்களை மிதிக்க வேண்டாம். கொஞ்ச தூரம் சென்றால், மூங்கில் பாலம் வரும். அதன் வழியாக அக்கரை சேரலாம்... என்றான்.

அவனது பக்தியும், ஞானமும் ஹரதத்தரை கவர்ந்ததால், அவன் அருகில் சென்று, அவனை வணங்கி நின்றார். உடன் அவன் பதறிப் போய், சுவாமிகளே... நீங்கள், என்னை வணங்கலாமா, என்னை தொடலாமா, இதனால், எனக்கல்லவோ பாவம் வந்து சேரும்... என்றான். அதற்கு ஹரதத்தர், அய்யனே... உன்னை போல சிவபக்தியும், ஞானமும் கொண்ட எவரையும், நான் பார்த்ததில்லை. காவிரியின் மகிமையையும், அதிலுள்ள மணல் ஒவ்வொன்றையும் சிவலிங்கமாக கருதும் எண்ணம் கொண்டவர்கள், உன்னைத் தவிர வேறு யாரையும் நான் கண்டதில்லை. வேத சாஸ்திரங்களில் கரை கண்டவர்கள் என்று சொல்லிக் கொள்வோரிடம் கூட, உன்னுடைய இந்த மனோபாவம் இருந்ததில்லை. நீயல்லவோ உண்மையில் சிவ தத்துவமறிந்தவன்... என்று புகழ்ந்து பாராட்டினர். இது, சிவலிங்கம்; இது கல்; இது மண்; என்ற பேதமின்றி, சர்வத்தையும் சிவமாக பாவிக்கும் எண்ணமே, சிறந்த சிவபக்திக்கு அடையாளம். இப்படிப்பட்ட எண்ணம் எல்லாருக்கும் வந்து விடுமா? இதற்கு, மனம் பக்குவப்பட வேண்டும். பக்குவமில்லாத மனதில் பக்தி ஏற்படாது. எதிலும், பகவானை காணும் மனோபாவம் இருந்தால், நாளடைவில், மனம் பக்குவப்படும்.

# ஈசன் சான்னியத்தியம்

ஈசன் இல்லாத இடம் ஏது? அவன் தூணிலும் இருப்பான்; துரும்பிலும் இருப்பான் என்றான் பிரகலாதன். எனவே அனைத்திலும் ஈசன் சான்னித்தியம் உள்ளது. இருப்பினும் ஆகாயம், வாயு, அக்கினி, நீர், பூமி, சூரியன், சந்திரன், யாகம் செய்பவர் என்னும் எட்டிலும் ஈசன் அஷ்டமூர்த்திகளாய் உறைகின்றார்.

1. வெப்பத்தைக் கொடுத்து ஒளியைப் பரப்பும் சூரியன் சிவசொரூபமே. சூரியனுடைய கதிர்களில் அமுதம் மழையையும் சந்திரன் பனியையும், சுக்கிலம் வெய்யிலையும், சுழுமுனை சந்திரனுக்கு ஒளியையும், அரிகேசம் பிரகாசத்தையும் அளிக்கின்றன.

   மேலும், விசுவகர்மா எனும் கதிர்கள் புதனுக்கு ஒளியையும், சத்துவிகம் - செவ்வாய்க்கும், சருவாவசு - வியாழனுக்கும், விச்சு - சுக்கிரனுக்கும் ஒளியைத் தருகின்றன.

2. தேவியின் அம்சமான சந்திரன் தனது கலைகளுடன் விண்ணவரையும், தென் புலத்தாரையும் அமுதத்தால் நிறைவிக்கிறார்.
3. யாகம் செய்யும் வேதியர்கள் இறை அம்சமாய் விளங்கி யாகத்தையும், மற்ற கர்மாக்களையும் செய்து வானவர்க்கும் மற்றோர்க்கும் உணவு அளிக்கின்றனர்.
4. நீர் உடலின் உள்ளும் புறமும் இருந்து வளர்ச்சிக்கு உதவுகிறது. பித்ருக்களுக்கும் தேவர்களுக்கும் உணவைப் பெற்றுத் தருகிறது.
5. காற்று அதாவது வாயு எங்கும் பரந்திருந்து, உடலில் உள்ளும் புறமும் இருந்து இயங்குகின்றது.

6-7. மேற்படி நீர் நிறைந்த சாகரமும், தீயும், காற்றும், நிறைந்த ஆகாயமும் வெளியில் பூமியும் தங்குகின்றன.

1. பவன் என்பது பூமியின் சொரூபமாய் விளங்கும் ஈசனின் மூர்த்தம் தரும்.
2. சர்வன் என்பது நீருருவாகி உலகெலாம் பரந்து மருவும் ஈசன் மூர்த்தம்.
3. பசுபதி என்பது தீயாகி அனைத்தையும் எரித்துச் சாம்பலாக்கும் மூர்த்தம்.
4. ஈசானன் என்பது வாயு சொரூபமான ஈசன் மூர்த்தம்.
5. பீமன் என்பது ஆகாய சொரூபமாக விளங்கும் இறைவன் மூர்த்தம்.
6. ருத்திரன் என்பது சூரியன் சொரூபமாக விளங்கும் மூர்த்தம்.
7. மகாதேவன் என்பது சந்திரனாய் விளங்கும் ஈசுவரமூர்த்தம்.
8. உக்கிரன் என்பது வானவருக்கும் தென்புலத்தார்க்கும் உணவளிக்கும் யாகம் செய்யும் மறைவராக விளங்கும் ஈசுவா மூர்த்தம்.

1. வாயு மனைவி சிவை. அவள் யுரோசவானைப் பெற்றாள்.

2. பீமன் மனைவி திக்கு - அவள் சக்கரனைப் பெற்றாள்.

3. ருத்திரன் (அ) சூரியன் மனைவி சுவர்ச்சலை. அவனது மகன் சனீஸ்வரன்.

4. மகாதேவன் (சந்திரன்) மனைவி ரோகிணி. அவனது மகன் புதன்.

5. அந்தணன் அம்சம் உக்கிரன் மனைவி தீக்ஷாபத்தினி அவள் மகன் சந்திரன்.

6. பவன் (பூமி) உயிர்களுக்குத் திண்மையான தேகத்தைத் தருகின்றார். பவன் மனைவி மகாதேவி சுக்கிரனை ஈன்றாள்.

7. சர்வன் பத்தினி விகோசி - அங்காரகனை ஈன்றாள்.

இவ்வாறு அனைத்து உயிர்களுக்கும் ஆதாரமாக இறைவன் விளங்குவதால் அவரது திருஉருவை பக்தியுடன் மனத்திலே தியானித்து வழிபட்டு அவர் அருளைப் பெற பாடுபடவேண்டும் என்று நந்திகேசுவரர் சனத்குமாரருக்கு அஷ்ட மூர்த்திகளின் மகிமையை எடுத்துக் கூறினார்.

## பஞ்ச பிரும்ம சொரூபம்

நந்திகேசுவரர் அடுத்து பஞ்சபிரும்ம ஸ்வரூபம் பற்றி விளக்கலானார். முத்தொழில் புரிய அருளும் அம்மையை இடமாகக் கொண்ட உமாபதி பஞ்ச பிரும்ம மாய் தோற்றம் கொண்டு இவ்வையகத்தில் நிறைந்திருக்கின்றார்.

1. ஈசான பிரும்மம் : சகல உயிர்களிலும் ஆன்மாவாக இருந்து கர்மாக்களின் பலன்களை அனுபவிப்பவராக விளங்குவது.
2. தத்புருஷ பிரும்மம் : இச்சை கொள்ளும் வகையில் ஆன்மாவை மறைக்கும் பிரகிருதியாகிய ஈசன் சொரூபம் இது.
3. அகோர பிரும்மம் : புத்தி வடிவிலே தேகத்தில் உறையும் ஈசன் சொரூபம் இது.
4. வாமதேவ பிரும்மம் : அகங்கார வடிவமாக இருப்பது.
5. சத்யோஜாத பிரும்மம் : மனம்.

செவி இந்திரியம் - ஈசன் ; த்வக் தோல் இந்திரியம் - தத்புருஷன்; கண் இந்திரியம் - அகோரன்; நாக்கு இந்திரியம் - வாமதேவன்.

வாக்கு - ஈசானன்; கைகள் - தத்புருஷன்; பாதம் - வாமதேவன்; குய்ய இந்திரியம் - சத்தியோ ஜாதர்.

இவ்வாறு நம் தேகத்திலே ஈசன் பரம்பிரம்ம சொரூபியாக ஞானேந்திரியமாக விளங்கும் பஞ்சபிரும்மமான இறைவன் கர்மேந்திரங்கள் ஐந்திலும் அவ்வாறே திகழ்கிறார். அழியாது உரையும் பரப்பிரம்மம் ஆன்மாவே.

சப்த தன் மாத்திரையை ஈசானர் தோற்றுவிக்க அதிலிருந்து ஆகாயம் உண்டாகிறது.

ஸ்பரிச தன் மாத்திரையை தத்புருஷன் உண்டாக்க, அதிலிருந்து காற்று தோன்றுகிறது. ரூப தன் மாத்திரையை அகோரன் ஏற்படுத்த அதிலிருந்து நெருப்பு உண்டாகும். ரச தன் மாத்திரையை வாமதேவன் படைக்க நீர் உண்டாகியது. சத்தியோஜதன் தந்த தன் மாத்திரையைப், படைத்து அதிலிருந்து ஆழிசூழ் உலகை உண்டாக்கினார். ஆகாய ரூபமாய் விளங்கும் ஈசானனே சர்வ வியாபியான பரமாத்மா ஆகும். ஒளி உருவாகி இனிது விளங்கும் தத்புருஷனே ஜீவாத்மா ஆகும். அழலுருவாகி உறையும் அகோரனை உடம்பாக மறைநூல் வல்லுநர் கொள்வர். கடல்நீர் உருவாகும் வாமதேவனை ஜீவாத்மா என்பர். மண்ணின் வடிவாய் விளங்கும் சத்தியோஜதன் விரிந்து நின்ற எதையும் தன்னருளால் தரித்திடுவார்.

இவ்விதமாக இருபத்தைந்து தத்துவங்களிலும் பஞ்ச பிரும்ம சொரூபியாய் விளங்கும் பரம்பொருளைச் சரணடைந்து தியானித்து பக்தியுடன் மலர்கள் முதலியவற்றைக் கொண்டு அர்ச்சித்து வழிபடவேண்டும்.

1. சதசற்பதி : சத்தாகி, அசத்தாகி அவற்றின் பதியாகி உறைபவன் அவன்.
2. அவியக்தன் : வடிவற்று இருப்பவன். அவனை நன்குணர்ந்த முனிவர்கள் அவியக்தர் எனப்படுவர்.
3. இருபத்து நான்கு தத்துவங்கள் க்ஷேத்ரம் என்றும் அவற்றை இருப்பிடமாகக் கொண்டு விளங்கும் ஈசனை க்ஷேத்திரக்ஞன் என்றும் கூறுவர்.

அறிவாம் உயர்நித வித்தையாய், பிராநிதியாகும்; அவித்யையாய், உறை செய்கின்ற தாதாவாய், விதாதாவாய் அவற்றைக் கடந்து அழியாத முதல்வனாகி உறைபவன் பரமேச்வரனே அன்றிவேறில்லை. ●



# சிவசூரியனைக் கண்ட தேவர்கள்

இறைவன் க்ஷேத்ரக்ஞன். அவன் பிரகிருதியுடன் சேர்ந்து காணப்படும் ரூபம் வியக்தம். அதுவே காலம். எனவே பரமன் காலரூபி எனப்படுகிறான். ஆகையால், க்ஷேத்ரக்ஞன் புருஷன்; பிரகிருதி பிரதானம். புருஷன் அகிலத்தைப் படைக்கும் போது ஹிரண்யகர்ப்பர் எனப்படுவார். பரிபாலிக்கும் போது தத்புருஷர் ஆவார். அண்ட பேரண்டங்களையே உருவாகக் கொள்ளும்போது விராட்புருஷன் ஆவார். ஞானிகள் உள்ளத்து உறையும் இறைவனை அந்தர்யாமி என்பர். எந்தத் தத்துவத்தையும் கடந்து விளங்கும் போது பரன் என்பர். பரமாத்மாவை பரமான்மா என்றும் குறிப்பிடுவர். ஒளிக்கதிர்கள் சூரியனிடமிருந்து தோன்றுகின்றன. அதேபோல் உலகில் எல்லாம் ஈசனிடமிருந்தே தோன்றுகின்றன. பிரம்மன் சோம யாகம் இயற்றினார். அவ்வமயம் சிவனாரை அனைவரும் ருத்திர ஜபத்தால் உள்ளம் உருகித் துதித்தார்கள். அதனால் மகிழ்ச்சி அடைந்த ஈசன், கோடி சூரியப் பிரகாசத்தோடு தோன்றினார். ஆனால் அவர்களால் பரமனை அறிய முடியாமல், அவரை யார் என்று கேட்டனர். அப்போது ஈசன் நகைத்து தானே அழியாப் பரம்பொருள் என்றும், அனைத்தும் தன் சொரூபம் என்றும் கூறி மறைந்துவிட்டார். தங்கள் துரதிருஷ்டத்தை எண்ணி வருத்தமுற்ற அவர்கள் சிவபெருமானை மனமுருகப் பிரார்த்தித்து வணங்கினர். அப்போது அங்கு ஒரு பேரொளி கோடி சூரிய பிரகாசத்தோடு விளங்க, ஒளி மண்டலத்திலே நான்கு முகங்கள் பன்னிரண்டு கரங்கள் கொண்டு தேவியுடன் காட்சி அளிக்கும் சிவ சூரியனைக் கண்டனர். மேற்குத் திசையில் வெண்ணிற சத்வோஜாத முகம். வடக்கில் சிவந்த வாமதேவன் முகம்; கிழக்கில் பொன்னிற தத்புருஷ முகம் என விளங்கிய ஈசனைக் கண்டனர். மேலும், நான்கு முகங்கள் கொண்ட பாஸ்கரன் வலப் புறத்தில் விளங்க, நான்கு முகங்களும் ஒளிதிகழ் பானு பின்புறம், கதிர் ஒளி வீசும் நான்குமுக ஆதித்தன் இடப்புறம் கொண்டு நெடுங்கதிர் விரிக்கும் நான்கு முகங்கள் கொண்ட ரவியைக் கண்டனர்.

மேலும், கிழக்கில் வித்தாரை என்னும் சக்தி, தெற்கில் சுதாரை, மேற்கில் போதினி, வடக்கில் அப்பியாயினி, பீடத்திலே தீக்ஷை என்ற சக்தி, மின்னென ஒளிரும் சூக்ஷ்மை என்ற சக்தி, தழல் அனைய முகத்தோடு ஒளிரும் சேவை என்ற சக்தி ஆகியோருடன் சிவசூரியன் அமர்ந்திருக்கும் கோலத்தைக் கண்டனர். மேலும் பவளமேனி வீமுதி, பனி மலர் தாமரைமேனி விமலை, கோங்க மலர் மேனி குவளை விழி அமோகை எனும் சக்தி, தவளநகை வித்துதை சக்தி சூழ்ந்திருக்கக் கண்டனர். பொன் மேனியாள் பத்திரையும், பால்வண்ண மேனியாள் நான்கு முக சர்வதோமுகி மற்றும் கிரகங்கள் சூழ தேவியுடன் ஈசனைக் கண்ட தேவர்கள் அவரைப் பலவாறு துதித்து வணங்கினர். அவரை வேதியர், அரசர், வணிகர் ஆகிய மூவர்ணத்தாரும் பூசை செய்யத் தக்கவரே என்று கூறி சிவசூரியன் மறைந்து விட்டார். •



# சிவனது 63 உருவத்திருமேனி

1. சந்திரசேகரர்
2. உமாமகேஸ்வரர்
3. ரிஷபாரூடர்
4. நடராஜர்
5. கல்யாணசுந்தரர்
6. பிட்சாடனர்
7. காமதகனார்
8. கால சம்ஹாரர்
9. திரிபுராந்தகர்
10. சலந்தரர்
11. கஜாசுர சம்ஹாரர்
12. தக்ஷ யக்ஞவதர்
13. ஹரியர்த்தர்
14. அர்த்தநாரீஸ்வரர்
15. கிராதகர்
16. கங்காளர்
17. சண்டேச அநுக்கிரஹர்
18. நீலகண்டர்
19. சக்ரப்ரதர்
20. விக்னப்ரசாதர்
21. சோமாஸ்கந்தர்
22. ஏகபாதர்
23. சுகாசனர்
24. தட்சணாமூர்த்தி
25. லிங்கோத்பவர்
26. ரிஷபாந்திகர்
27. அகோரவீரபத்ரர்
28. அகோராஸ்ரமூர்த்தி
29. சக்ரதானஸ்வரூபர்
30. சிவலிங்கம்
31. முகலிங்கேஸ்வரர்
32. சர்வஸம்ஹாரர்
33. ஏகபாத திரிமூர்த்தி
34. திரிபாதமூர்த்தி
35. ஜ்வரஹரேஸ்வரர்
36. ஊர்த்துவதாண்டவர்
37. வராக் ஸம்காரி
38. கூர்மஸம்ஹாரி
39. மச்சஸம்ஹாரி
40. சரபேசர்
41. பைரவர்
42. சார்த்துலஹரி
43. லகுளீசர்
44. சதாசிவர்
45. உமேசர்
46. புஜங்கலளிதர்
47. புஜங்கத்ராசர்
48. கங்காதரர்
49. கங்காவிசர்ஜனர்
50. யக்ஞேஸ்வரர்
51. உக்ரர்
52. ஆபதோத்தாரணார்
53. ஷேத்ரபாலர்
54. கஜாந்திகர்
55. அச்வாரூடர்
56. கௌரீவரப்ரதர்
57. கௌரீலீலா சமன்விதர்
58. கருடாந்திகர்
59. பிரம்ம சிரச்சேதர்
60. ரக்தபிக்க்ஷா ப்ரதானர்
61. சிஷ்யபாலர்
62. ஹரிவிரிஞ்சதாரணர்
63. சந்தியா நிருத்தர்




# பஞ்ச பூதங்களின் தோற்றம்

பேரொளியாய் விளங்கும் ஜோதி சொரூபம் சிவம். அந்த ஜோதி லிங்கத்திலிருந்து அனைத்துலகுக்கும், ஆதாரமானதும், வேதங்கள் கொண்டாடுவதுமான லிங்கம் உண்டாயிற்று. தமக்கென வித்து ஏதுமின்றி, அனைத்து உயிருக்கும் தானே வித்தாகி பிறந்திருக்கும் அப்பெருமானின் ஏவலாய் மாயையிடம் இருந்து மகத்தத்துவம் உண்டாயிற்று. அதனிடமிருந்து முக்குணங்களோடு கூடிய அகங்காரம் உண்டானது. தாமசம் எனப்பட்ட அகங்காரத்தினிடமிருந்து ஒலி எழுந்தது. பேரொலியிடமிருந்து ஆகாயமும், அதிலிருந்து காற்றும், காற்றிலிருந்து நெருப்பும், நெருப்பிலிருந்து நீரும், நீரிலிருந்து நிலமும் உண்டாயின.

வைகாரிகம் எனப்பட்ட அகங்காரத்தினிடமிருந்து இந்திரியங்களுக்கு அதிஷ்டான தெய்வம் உண்டாயிற்று. தைஜசம் என்னும் அகங்காரத்தினிடமிருந்து ஞானேந்திரியங்கள் ஐந்தும், கர்மேந்திரியங்கள் ஐந்தும், மனமும் உண்டாயின. தத்துவங்கள் ஓர் அண்டமாகி பிரளய நீரில் மிதந்து கொண்டிருக்கையில் அதற்கு உயிர் உண்டாகி அதில் பிரம்மன் தோன்றுவார். அவரே அயன், அரி, அரன் என்று படைத்தல், காத்தல், அழித்தல் என்ற காரியங்களுக்கேற்ப அழைக்கப்படுகின்றார். பிரம்மாண்டத்தினிடையே பதினான்கு லோகங்களும் அடங்கி உள்ளன. அகங்காரத்தை மகத்தத்துவம் சூழ்ந்திருக்கும். அதனைப் பிரகிருதி புருஷன் தன்னிடம் லயம் கொண்டிருப்பான். பிரளயத்தின் முடிவில் மூவரும் ஒன்றாக ஐக்கியமாகி விடுவர்.

**கால அளவு** இதில் பிரம்மனின் பகல், இரவு பற்றி நான்கு யுகங்கள், யுகச் சந்திகள் பற்றி விளக்குவது, மனிதர்களின் கால அளவுகளும் தேவர்களுக்கான கால அளவுகளும் விவரிக்கப்படுவதே கால அளவு (அ) காலப் பரிமாணம் எனப்படுகிறது.

**சிருஷ்டி** அனைத்துக்கும் எட்டாது விளங்கும் அந்தப் பரம்பொருளுக்குத் தோற்றமோ அளவோ கிடையாது. அனைத்தும் அதனிடமிருந்து உண்டாகி, அதனையே அடைகின்றன. திருமால் பாம்பணையில் துயில் கொள்கையில் நான்கு லோகங்களும் பிரளய வெள்ளத்தில் அழிந்து விட்டன. அதைக் கண்டு அவர் பன்றியாக உருவெடுத்து (வராக அவதாரம்) நீரில் மூழ்கி அவற்றை மீட்டு வந்து முன் போல் அமைத்து சிருஷ்டிகளைத் தொடங்கலானார். பிரமன் சிருஷ்டியைத் தொடங்கி தாமச சிருஷ்டிகள் எனப்பட்ட ஐந்து வகை சிருஷ்டிகள் அவரிடமிருந்து தோன்றின. அவை தமசு, மோகம், மகாமோகம், தாமிஸ்ரம், அந்ததாமிஸ்ரம் ஆகும். அடுத்து பசு முதலான விலங்குகள், தேவர்கள், மனிதர்கள், பூதம், பேய் முதலான சிருஷ்டிகள் தோன்றின. பின்னர் பிரம்மனிடமிருந்து சனகர், சனந்தனர், சனத்சுஜாதர், சனத்குமாரர், ருத்திரர் தோன்றினர். அவர்கள் சிருஷ்டித் தொழிலில் ஈடுபடாமல் மகேசுவரனிடம் மனத்தைச் செலுத்தி அவனது தியானத்தில் ஈடுபட்டனர். அடுத்து பிரமன், புலஸ்தியர், கிருது, பிருகு, அத்திரி, மரீசி, புலகர், தக்கன், வசிஷ்டர், ஆங்கிரசு, தருமர் ஆகிய பத்துப் பேரைத் தோற்றுவித்தார். அவர்கள் மூலம் உலகிலே சிருஷ்டியைப் பரப்ப சுவாயம்பு மனு என்ற ஆணையும், சதரூபை என்னும் பெண்ணையும் பிரமன் படைத்தார். இவ்வாறு சிருஷ்டி பெருகலாயிற்று. தக்கன் மகள் சசியை வையகம் அனைத்துக்கும் ஆதிகாரணனான ஈசன் மணந்தார். ஈசன் அனேக ருத்திரரைத் தோற்றுவித்தார். உலகம் முழுவதும் அவர்கள் நிறைந்தனர். சம்சார பந்தத்தில் சிக்காது, சிறப்பின்றி ருத்திரர்களை ஈசன் படைத்ததைக் கண்டு பிரமன் அவரிடம் அவ்வகை சிருஷ்டி உலகுக்கு ஏற்றதல்ல என்று கூற, ஈசன் நீ குறிப்பிடும் சிருஷ்டிகள் எமக்கு ஏற்றதல்ல; அவற்றை நீயே படைப்பாயாக என்று பிரம்மனிடம் தெரிவித்தார். நான்முகன் மாயையைக் கொண்டு சிருஷ்டிகளை வகுத்தார். ருத்திரன் தாம் படைத்த சிருஷ்டிகளை யோகத்தால் உலகை விட்டு மறையச் செய்தார்.

**அஷ்டாங்க யோகம்** ஈசன் திருவருளால் தெளிந்த ஞானத்தைப் பெற்று, அதனால் யோகத்தைக் கடைப்பிடித்தால் பிறவாப் பேரின்பமாகிய முக்தி கிட்டும். ஈசன் சனகாதி முனிவர்களுக்கு கூறிய யோக சாரம் ஜனகர், அத்திரி, வியாசர் முதலியோரால் உலகின் பிரசித்தமாயிற்று.

1. பற்றின்றி இருத்தல் இயமம். இது உண்மை பேசுவதாலும் ஒழுக்கம் வழுவாமையாலும் பற்றற்ற தன்மையாலும் ஏற்படும். மனம், வாக்கு, காயம் இம்மூன்றாலும் பெண்களைத் தீண்டாது இருப்பது பிரம்மச்சரிய நெறி, தூய்மையாக இல்லறத்தை நடத்துவதும் பிரம்மச்சரிய நெறியைச் சேர்ந்ததே. வானப்பிரஸ்த ஆசிரமம் கடைபிடிப்போர் முற்றும் துறந்த சந்நியாசிகள், மனைவியருடன் காட்டில் உறைவர்.
2. பற்றற்று இருக்குமாறு உள்ளத்தைக் கட்டுப்பாட்டில் கொண்டு வருவது நியமம். இதன் மூலம் சவுசம், தவம், மகிழ்ச்சி, ஜபம், சிவ பிரணிதானம் ஆகியவற்றை அடையலாம். ஆசையின்மை என்ற மண்ணால், ஞான நீரில் உள்ளத்தை நீராட்டித் தூய்மை செய்தல் அகச்சவுசம் எனப்படும். புனித நீராடி, திருநீறு அணிதல் புறச்சவுசமாகும். தவம் என்பது சாந்திராயண விரதம் அனுஷ்டிப்பதாகும். அதாவது, வளர்பிறை அமாவாசை அன்று உபவாசம் இருந்து மறுநாள் முதல் நாள் ஒரு கவளம், இரண்டாம் நாள் இரண்டு கவளம் என்று கூட்டிக் கொண்டே சென்று பௌர்ணமி அன்று மறுபடியும் உபவாசம் இருக்க வேண்டும். பின்னர் தேய்பிறையில் நாளொன்றுக்கு ஒரு கவளமாக குறைத்துக் கொண்டே வந்து அமாவாசை தினம் திரும்பவும் உபவாசம் இருக்க வேண்டும். மறைநெறிகளில் நின்று ஆசிரம நிலைகளுக்கு ஏற்ப இருப்பது மகிழ்ச்சி ஆகும். ஈசனைத் தியானித்தல் சிவப்பிரணிதானம் ஆகும்.
3. ஆசனம் : யோக நிலைக்கான அங்கங்களில் ஆசனமும் ஒன்று. அது பத்மாசனம் போன்ற பல. அவற்றில் ஒன்றைக் கடைபிடிக்க வேண்டும்.
4. பிராணாயாமம் : ஏதேனும் ஒரு பொருத்தமான ஆசனத்தில் அமர்ந்து பிராணாயாமம் செய்ய வேண்டும். அது மூன்று வகை. பிராணாயாமம் செய்யும் போது வியர்வை தோன்றினால் அதமம், மனதில் சஞ்சலம் இருந்தால் மத்திமம், சிந்தையில் மகிழ்ச்சி ஏற்படின் உத்தமம். ரேதஸ் மேல் நோக்கி எழும் மந்திரம் ஜபித்துப் பிராணாயாமம் செய்வது சகற்பம் என்றும், இன்றி செய்வது விகற்பம் என்றும் பெயர் பெறும். நம் உடலில் பத்து வித வாயுக்கள் உள்ளன.
    1. உயிருக்கு அத்தியாவசியமானதால் இதயத்தில் தங்குவது பிராணவாயு.
    2. கீழ்நோக்கிப் பிரிவது அபானவாயு.
    3. உடலெங்கும் நிறைந்து இரத்த ஓட்டம், சீரணமான உணவு உடலில் பரவ உதவுவது வியானவாயு.
    4. உறுப்புகளின் சந்திகளில் தங்குவது உதானவாயு.
    5. உடலைச் சமனப்படுத்தவது சமன வாயு.
    6. விக்கல், கக்கல் ஏற்படக் காரணமானது கூர்ம வாயு.
    7. தும்மலை உண்டாக்குவது கிரிகா வாயு.
    8. கொட்டாவிக்கு உதவுவது தேவதத்தவாயு.
    9. உடலை வீங்கச் செய்வது தனஞ்செய வாயு.
    10. நாகன் வாயு - பாடுதல், கண் சிமிட்டல், மயிர்க்கூச்சலுக்கு உதவுவது. இந்தப் பத்துவித வாயுக்களையும் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளல் மிகவும் அவசியம்.
5. பிரத்தியாகாரம் : இச்சைகளினால் பாதிக்கப்படும் ஐம்புலன்களைத் தடுத்து நிறுத்துவது இது.
6. புலன்களை அடக்கி மனதில் தெளிவை ஏற்படுத்தி ஒரு நிலையில் நிறுத்துவது தாரணை.
7. ஆதியந்தமில்லாப் பரம்பொருளை மனக்கண்முன் நிறுத்தி நிலைப்பது தியானம் ஆகும்.
8. ஈசனைத் தியானித்து மனம் உருகி மெய் மறந்த நிலையில் இருப்பது சமாதி ஆகும். இந்த எட்டும் யோக அங்கங்கள் ஆகும்.

யோகம் கடைப்பிடிக்கும் போது பல இடையூறுகள் ஏற்படும். அவை நோய், சிரத்தையின்மை, பிரமாதம், ஐயுறல், விஷயங்களில் இச்சை, துன்பம், அப்பிரதிஷ்டை, பிராநிதி தரினம் என்று கூறப்படும் ஆதிதெய்வீகம், ஆதிபௌதிகம், ஆத்யாத்மிக துக்கங்கள் என்பன. இவையே அன்றி குறிப்பாக உணரக்கூடிய உபசருக்கம் ஆறு

உள்ளன. அவை முறையே பிரதிபை, தேவதரிசனம், சிரவணம், வார்த்தை, சுவாதம், ரசனை ஆகும். மேலும் பஞ்சபூதத்தின் குணங்கள், பிரமத்தின் குணங்கள் என்று பல குணங்களும் விளக்கப்பட்டன. யோகியானவள் தன் முயற்சிக்கு ஏற்படும் இடையூறுகளை நன்குணர்ந்து அவற்றை விலக்கி, எம்பெருமான் திருவடிகளைச் சேவித்தால் அவர் அருளைப் பெற்று முக்தி அடைவான். யோகத்தைக் கடைப்பிடித்து ஈசன் அருள்பெறலாம். அதுமட்டுமின்றி நல்லறத்தைக் கடைபிடித்து அவ்வழி நின்றோர்க்கும் ஈசன் அருள் கிட்டும். ஒரு சமயம் பார்வதி சிவபெருமானிடம், எந்த வழியில் வழிபட்டால் அவரது அருள் கிடைக்கும் என்று கேட்டார். ஒரு சமயம் பிரம்மனிடம் தான் கூறியதைப் பார்வதிக்கு எடுத்துரைத்தார். மகாமேரு முதல் மங்கையர் வரை எவராக இருந்தாலும் உள்ளம் கனிந்து உருகி என்னிடம் செலுத்தும் அன்புக்கு நான் அருள் செய்வேன் என்றார். ●



# ஈசனின் ஐவகைத் தோற்றம்

1. சுவாத லோகித கற்பத்தில் பிரமன் ஈசனைத் தொழுது தியானிக்கும் போது, ஈசன் அவர் முன் அழகிய இளம்பாலகனாய்த் தோன்றினார். இது சத்தியோசாதம் என்னும் தோற்றம்.

2. படைப்புக் கடவுள் பிரம்மன், ஈசன் திருவடிகளில் அர்ச்சித்து வேதங்களால் துதித்தார். அப்போது ஈசன் திருமேனியிலிருந்து நான்கு முனிவர்கள் தோன்ற இத்தோற்றத்தை மனதில் தியானித்து ஈசனை வழிபடுவோர் சிவலோகம் அடைவர். முப்பதாவது இரத்த கற்பத்தில் பிரமன் ஈசனைத் தியானித்த போது சடையில் பாம்பணிந்து, கரங்களில் மானும், மழுவும் ஏந்தி ஈசன் தோன்றினார். இத்தோற்றம் வாமதேவம் எனப்படும்.

3. அப்போது பந்த பாசம் அறுத்த; தெளிந்த ஞானம் பெற்ற நால்வர் ஈசனிடம் தோன்றி உலகம் உய்ய தருமம் கடைப்பிடித்தும், மற்றவர்களுக்கு உணர்த்தியும் பல்லாண்டுகள் வாழ்ந்து ஈசன் திருவடிகளை அடைந்தனர். இத்திருவுருவைத் தியானித்து வணங்கி வழிபடுவோர் பிறப்பிறப்பு நீங்கி செஞ்சடையோன் தாள் சேர்வர். பீதகற்பத்தில் நான்முகனுக்கு, எம்பெருமான் சடையில் இளம் மதி அணிந்து தோன்றினார். இத்தோற்றம் தத்புருஷம் எனப்படும். ஆனந்தம் கொண்டு பிரமன் பரமனைப் பூசித்து வேதங்களால் துதித்தார். இதனால் மகிழ்ச்சி அடைந்த ஈசனார் அழகிய காயத்திரியை உண்டாக்கி அவருக்கு அளித்தார். உத்தமமான காயத்திரியைப் பக்தியுடன் ஆராதிப்பவர்களுக்கு நரகவாசம் இல்லை. கைலாச வாசம் தேடி வரும். ஈசன் திருமேனியிலிருந்து தோன்றிய நால்வர் நரகவாசமளிக்கும் கர்மாக்களை நீக்கி பஞ்சாக்ஷரத்தை உணர்ந்து ஜபித்து முதலில் ஈசன் திருவடியில் சேர்ந்தனர். இத்தத் புருஷனைத் தியானித்து அவரடித் தாமரையை வழிபடுவோர் பிறவிக்கடல் நீந்தி கயிலையை அடைவர்.

4. நீல கற்பத்தில் முக்கண்ணன் நெருப்பும், வாளும் கைகளில் ஏந்தி கரியரூபத்துடன் தோன்றினார். இது அகோரரூபம். மிக்க ஆனந்தத்துடன் பிரமன் அகோர வடிவில் ஈசனைப் பூசிக்க ஐயன் மனமகிழ்ந்து வேண்டுவன கேள் என்றிட பிரமன் ஐயனிடம் என்றும் குன்றாத அன்பைத் தர பிரார்த்தித்தார். அப்போது சிவனார் யாராலும் யாகம் செய்யும் அந்தணரைத் தடுத்து நிறுத்த முடியாதென்று உரைத்தார். சிவமந்திரத்தை லட்சம் முறை உச்சரித்தோர் பாபங்கள் நீங்கி கைலாசத்தில் வீற்றிருப்பர் என்று அருள்பாலித்து மறைந்தார்.

5. விஸ்வரூப கற்பத்தில் மலரயன் சிவனாரைத் தியானித்த போது ஈசன் சடையில் பிறைச் சந்திரன், நெற்றிக்கண், கோரைப்பற்கள் கொண்டு இருபுறம் இரு மாதர்களுடன் தோன்றினார். அப்போது பிரமன் சிவனாரின் இருபுறம் இருக்கும் மாதர்கள் யாவர் என்று வினவ, ஒருத்தி தேவர்களை ஈன்ற அன்னை, மற்றவள் வெள்ளைத் தாமரையில் வீற்றிருக்கும் வாணி என்று கூறினார். இவ்வாறு இப்பகுதியில் பரமனின் ஐவகைத் தோற்றம் விளக்கப்பட்டுள்ளன. ●

# காலனை வென்ற சுவேதன் வரலாறு
# மாயனை வென்ற ததீசி

## காலனை வென்ற சுவேதன்

சுவேதன் என்ற மறையோன் தன் வாழ்நாள் மிகக்குறைவே என்று அறிந்து ஈசன்தாள் பற்றி, சிவலிங்கம் ஒன்றைப் பிரதிஷ்டை செய்து பக்தியுடன் வழிபட்டு வந்தான். எந்த நேரமும், அவன் செயல் நினைப்பு அனைத்தும் ஈசனைப் பற்றியதாகவே இருந்தது. அவன் ஆயுள் முடியும் நேரம் காலனே நேரில் வந்தான். காலனைக் கண்டு அவன் சிறிதும் அஞ்சவில்லை. மேலும் ஈசன் திருவடிகளைப் பற்றினார்க்கு யாராலும், எவ்விதமும் துன்பம் நேராது என்று காலனிடம் சொன்னான். உன்னால் எனக்கு என்ன பயம் என்றான். அதைக் கேட்ட காலன் கடுஞ்சினம் கொண்டு பாசக்கயிற்றை சுவேதன் மீது வீசினான். கயிறு இறுகத் தொடங்கியது. ஆனால் சுவேதன் என்னைக் காப்பது நீயே அல்லவா? என்று எண்ணியவாறு தான் பூஜித்து வந்த லிங்கத்தைக் கட்டிப்பிடித்துக் கொண்டான். அடுத்த கணம் லிங்கத்திலிருந்து தோன்றிய பரமன் கோபத்துடன் காலனை உற்று நோக்க அவன் வாகனத்திலிருந்து கீழே விழுந்து உயிர் நீத்தான். பரமன் சுவேதனுக்கு அழியா வாழ்வைக் கொடுத்து தம் கணங்களில் ஒருவனாக இருக்க அருள் செய்தார். உயிரற்றுக் கிடந்த யமுனை எழுப்பி அவனிருப்பிடம் அனுப்பி வைத்தார். சுவேதன் வரலாற்றைக் கூறிய பிரமன் முனிவர்களிடம், ஈசனைத் தியானித்து அவரைப் பக்தியுடன் ஆராதித்து வாருங்கள். சிவலிங்கம் ஒன்றை அமைத்து அதில் ஈசனைத் தியானித்து மலர் கொண்டு அர்ச்சித்து வழிபடுங்கள். உங்கள் அன்புக்கு ஈசன் கட்டுண்டு அருள்புரிவான் என்றார். அவ்வாறே முனிவர்கள் பக்தியுடன் பூசிக்க திருப்தி அடைந்த ஈசன் அவர்களுக்கு அருள்புரிய முன் தோன்றிய அதே திகம்பர சந்நியாசி கோலத்தில் தாருகாவனம் வந்து சேர்ந்தார். இம்முறை முனிவர்கள் ஈசனை அன்புடன் வரவேற்றனர். வணங்கினர். முனி பத்தினிகளும் அவர்களுடன் ஈசனை வழிபட்டனர். மேலும் அவர்கள் ஈசனை நோக்கி, நாங்கள் செய்த அபசாரங்களை மன்னித்து, அடியார்களாகிய எங்களிடம் அளவற்ற அன்பு பூண்டு, பக்தியுடன் நாங்கள் அளிக்கும் உபசாரங்களை மனமுவந்து ஏற்று அருளவேண்டும் என்று வேண்டினர். அப்போது ஈசனின் திகம்பர வடிவம் மறைந்து, கைகளில் மானும், மழுவும் ஏந்தி உமாதேவியுடன் காட்சி அளித்தார். முனிவர்கள் பரமானந்தக் கடலில் மூழ்கினர். நெஞ்சம் உருக ஈசனைப் பக்தியுடன் துதித்து வணங்கினர். சுவேதன் வரலாறு, மார்க்கண்டேயன் வரலாறு போன்றது. மேலும், விரிஞ்சன் முதலான தேவர்கள் பாசுபத விரதத்தை ஆற்றியே அழியா உயர் பதத்தை அடைந்தனர். ஆகவே நீங்களும் அவ்விரதத்தைப் பக்தியுடன் கடைப்பிடியுங்கள் என்று கூறி மறைந்தார் ஈசன். முனிவர்களும் பக்தியுடன் பாசுபத விரதத்தைக் கடைப்பிடித்து வல்வினைகள் தொலையப் பெற்றனர்.

## மாயனை வென்ற ததீசி

சனத்குமாரர் நந்தியை வணங்கி, ஐயனே, ததீசி முனிவர் மாயனை வென்ற, தாங்கள் கூற்றினைக் கடந்த வரலாற்றினை அன்பு கூர்ந்து சொல்ல வேண்டும் என்று வேண்டினார். ஒரு சமயம் பிரமன் தூங்கிய போது எழுந்த தும்மலிலிந்து சுபன் தோன்றினான். அவன் இந்திரன் அருளால் வச்சிராயுதம் பெற்றும் மக்கள் நலம் காக்கும் மன்னனாகத் திகழ்ந்தான். மன்னனும், ததீசியும், ஒருநாள் பேசிக் கொண்டிருந்த போது யார் பெரியவர் என்ற போட்டி எண்ணம் தோன்ற ஒவ்வொருவரும் தானே பெரியவன் என்று வாதித்தனர். மன்னவர்களை அண்டியே மறையோர் வாழ்கிறார் என்று கூற, ததீசி முனிவருக்குக் கோபம் வந்தது. அவர் அந்தணனே பெரியவர். எம்மை நீங்கள் பூஜிக்க வேண்டும் என்று கூறி அரசன் தலையில் ஓங்கி அறைந்தார். மன்னன் மிக்க கோபத்துடன் வஜ்ஜிராயுதத்தை எடுத்து ததீசி மார்பிலே அடிக்க, அவர் ரத்தம் கக்கி துடிதுடித்து மயங்கி விழுந்தார். நினைவு திரும்பியதும் முனிவர் அரண்மனையை விட்டு வெளியேறினார். ததீசி சுக்கிராச்சாரியாரை

நோக்கித் தவம் இயற்ற அவர் தோன்றினார். அவரிடம் நிகழ்ந்ததை எல்லாம் கூறி, அரசரின் வஜ்ஜிராயுதத்தால் ஊறு நேர்வதற்கு முன் இருந்த உடலைப் பெற வேண்டினார். அப்போது சுக்கிரர் தனக்கு அச்சக்தி இல்லை என்றும் பரமனை வழிபட்டுக் கோரியதை பெறுமாறும் அறிவுறுத்தினார். ததீசி முனிவர் சிவனை வழிபட, அவர் தோன்றி என்ன வேண்டும் என்று கேட்க முனிவர் வஜ்ஜிராயுதத்தால் ஊறு நேரா தேகத்தை அருள வேண்டினார். அவ்வாறே ஈசனார் வரம் அருள ததீசி அரசனுடைய அரண்மனைக்கு வந்தார். வந்தவர் மன்னனிடம் இப்போது உன் பலத்தைக் காட்டு என்று கூற, மன்னன் மறுபடியும் முனிவரை வஜ்ஜிராயுதத்தால் தாக்க, வஜ்ஜிராயுதம் பொடிப் பொடியாகி விட்டது. முனிவர் கேலியாகச் சிரித்து விட்டுச் சென்றார். மன்னன் திருமாலைக் குறித்து தவமியற்ற, அவரும் அவன் முன் தோன்றினார். மன்னன் நிகழ்ந்தவற்றைக் கூறி ததீசியின் உடலைச் சோதிக்க ஒரு ஆயுதம் வேண்ட, ஈசனார் திருவருள் பெற்ற முனிவரைப் பணிய வைப்பது எப்படி முடியும். எனினும் தானே அந்தணனாக அங்கு வருவதாகக் கூறினார். இவ்வாறு தோன்றிய திருமாலைப் பார்த்த முனிவர், பரந்தாமா அன்பனுக்கு அருள் புரிய ஏன் இந்த வேடம்? என்று கேட்க, என திருமால் சுய உருவில் தோன்றி முனிவரிடம் வேணியன் அருள் பெற்றவரால் ஆகாதது உண்டோ! மன்னன் சுபன் என் பக்தன். அவனுடன் நட்புடன் இருக்க வேண்டுகிறேன் என்றார். ததீசி அதை ஏற்கவில்லை. தான் நேரில் வந்து கேட்டும் ஏற்காத முனிவர் மீது கோபம் கொண்ட திருமால், அவர்மீது சக்கராயுதத்தை வீச, முனிவர் ஈசனைத் தியானித்து நின்றார். சக்கரம் முனிவரை மும்முரம் வலம் வந்து திருமாலிடமே திரும்பியது. அப்போது முனிவர், இந்தச் சக்கரம் நீலகண்டன் தந்ததல்லவா! அது அவர் பக்தருக்குத் துன்பம் தருமா? என்று கேட்டார். இப்போரில் மாதவனுக்கு உதவ வந்து தேவர்கள் தோற்று ஓடினர். தன்னந்தனியாய் நின்ற மாதவன் மாயையால் முனிவரைக் குழப்ப, ஈசன் தந்த ஞானக்கண் மூலம் முனிவர் எதையும் நன்கு காண முடிந்தது. இவ்வாறு ததீசி முனிவரை வெல்ல முடியாமல் விஷ்ணு மயங்கி இருக்கையில் அங்கே பிரமன், சிவன் தோன்றி இருவரையும் கோபம் நீங்கி சாந்தமடையுமாறு வேண்டினார். திருமால் ததீசியிடம் அவர் தவத்துக்குத் தலை வணங்குவதாகக் கூறி பாற்கடல் திரும்பினார். அது கண்ட சுபன் பாற்கடல் சென்று மாதவனிடம் தன் நிலைமை என்ன என்று கேட்க திருமால் விரோதம் நீக்கி நட்பு பெறுமாறு கூற, மன்னன் ததீசியை வணங்கித் தான் செய்த குற்றத்தைப் பொறுத்தருள வேண்டினான். முனிவரும் முன்போல் அவனிடம் நட்பு கொண்டிருந்தார். ●

# யுகங்களும் யுக தர்மங்களும்

கிருதயுகம், திரேதா யுகம், துவாபர யுகம், கலியுகம் என்று யுகங்கள் நான்கு. கிருத யுகத்தில் மக்கள் ஈசன் திருவடியை எப்போதும் துதி செய்த வண்ணம் இருப்பர். தரும தேவதைக்கு நான்கு கால்கள் இருக்கும். அனைவருக்கும் வாழ்நாள் ஒரே அளவில் இருக்கும். வருண பேதங்கள் இன்றி, மக்கள் மகிழ்ச்சியோடு இருப்பர். ஆசிரம வேறுபாடுகள் இல்லை. ஞானம் தெளிந்தவர்களாய் பரமன் அருளுக்குப் பாத்திரர்களாக இருப்பர். எங்கும் எல்லாம் இன்பமயம். மக்கள் சாத்துவிக குணம் உடையவர்களாய் பொறாமை, பொச்சரவு முதலியன இன்றி எல்லா உலகுக்கும் செல்லலாம். திரேதா யுகத்தில் சிறந்த யாகங்கள் புரிவர். தரும தேவதை ஒரு காலை இழந்து மூன்று கால்களுடன் இருக்கும். மழை பொழியும். மரம், செடி, கொடிகள் நன்கு வளர்ந்து காய் கனிகள் குறைவின்றிக் கிடைக்கும். மக்கள் சினமுற்று சண்டையிடுவர். மக்கள் பொன், பொருள், ஆடைகள் அறுசுவை ஆகியவற்றில் விருப்பம் கொண்டிருப்பர். இளம் கன்னியர்களுடன் கூடி, இன்பமாக வசதியுள்ள வாழ்வு வாழ்வர். மன்னர்கள் நாட்டைப் பெருக்க போர் புரிவர். எளியோரை, வலியோர் வாட்டுவர். சில அரசர்கள் தரும நெறியில் நின்று உயர் பதம் அடைவர். துவாபர யுகத்தில் மக்களுக்கு கோபம், போட்டி மனப்பான்மை, சண்டை சச்சரவு இருக்கும். இந்த யுகத்தில் தரும தேவதை இரண்டு கால்களை இழந்து இரண்டு கால்களிலேயே நிற்கும். இந்த யுகத்தில் பாபம், புண்ணியம் வேறுபாடு புரியாமல் குழம்பிய மனத்துடன் மக்கள் தவிப்பர். சரியான குழம்பி இருக்கும். வியாசர் வேதங்களைப் பாகுபடுத்தி நான்காக வகுப்பார். புராணங்களும் இயற்றுவார். கலியுகத்தில் மெய்ஞானம் விளங்கத் தானம் புரிவர். தரும தேவதை இந்த யுகத்தில் மூன்று கால்களையும் இழந்து ஒற்றைக் காலிலே இருக்கும். அதர்மம் தலைதூக்கி பொய்ம்மை, கொடுமை, இழப்பு, களவு, வஞ்சனை, கொலை, கொள்ளை ஆகியவை தழைத்திருக்கும். ●



# உருத்திரர் தோற்றம்

பிரமன் தவம் மேற்கொண்டு தன் படைப்புத் தொழிலைத் தொடங்க, கொடிய நஞ்சுடை பாம்புகள் தோன்றின. அதனால் வேதனைப்பட்ட அயன் உயிரை விட, பிரமனின் ஆவி பதினோரு ருத்திரராகியது. அழுது கொண்டே தோன்றியதால் அவர்கள் ருத்திரர் எனப்பட்டனர். ஈசன் தோன்றி பிரமனை உயிர்ப்பித்தார். எழுந்த பிரமன் சிவபெருமானைத் துதிக்க ஒவ்வொரு சமயமும் ஒவ்வோர் உருவில் பரமன் காணப்பட்டான். சத்தியோசாதம், வாமதேவம், தத்புருஷம், அகோரம், விஸ்வரூபம் என்ற வடிவங்களில் தோன்றியதுடன் காயத்திரியையும் தோற்றுவித்தார். பரமன் பிரமனிடம் துவாபர யுகத்தில் வியாசர் தோன்றி வேதங்களைப் பகுத்தளிப்பார். என்னிடம் தோன்றிய நால்வர் ஞானத்தை அனைவருக்கும் உணர்த்துவதோடு அவர்களும் சிறந்த ஞானம் பெற்று கைலையங்கிரியை அடைவர். இந்திரனும், திருமாலும் நீயும் லிங்கபூசை செய்து கிடைத்தற்கரிய பேறு பெறுவீர்களாக என்று கூறி மறைந்தார். இவ்வுடலைப் புனிதம் ஆக்குபவை, ஆற்றில் நீராடல், அக்கினிப் பிரவேசம், மந்திரங்களை உணர்ந்து நடத்தல் ஆகும். நீராடும் போது வருணனையும், சிவனையும் பக்தியுடன் தியானிக்க வேண்டும்.

தருப்பை, பலாச இலை, நறுமண மலரை நீரில் தோய்த்து சிரசில் தெளித்துக் கொள்ள வேண்டும். அதே போல கைகளில் நீர் ஏந்தி மந்திரம் ஜபித்து மும்முறை அர்க்கியம் விட வேண்டும். ஆயிரத்தெட்டு முறை காயத்திரி ஜபிக்க வேண்டும். பின்னர் முனிவர்களுக்கு, தேவர்களுக்கு பித்ருக்களுக்குத் தர்ப்பணம் செய்ய வேண்டும். ஆசமனம் செய்து சுத்தாசனத்தில் அமரவேண்டும். பட்டு, மான்தோல், கம்பளி ஆகியவற்றின்மீது அமரலாம். தர்ப்பையின் மீது அமர்தல் சிறப்புடையது. பவித்திரம் அணிந்து வலது முழங்கால் மீது இடதுகையின் மீது வலதுகையை வைத்து பிரம்ம யஜ்ஞும் செய்ய வேண்டும். பிரணவத்தை உச்சரித்து நெற்றி, கைகள், மார்பு, வயிறு தோள்களிலும் கழுத்துகளிலும் விபூதியைப் பக்தியுடன் தரித்துக் கொள்ள வேண்டும். பிராணாயாமம் செய்து உடலைப் புனிதமாக்க வேண்டும். விநாயகரையும், முருகனையும் பிம்பத்தில் ஆவாகனம் செய்து உமாமகேசுவரனைத் தியானித்து வாசம் கொண்ட நீரால் மந்திர ஜபத்துடன் அபிஷேகம் செய்ய வேண்டும். அடுத்து ஆடை ஆபரணங்களை அணிவித்து, தூய மலர் கொண்டு அர்ச்சித்து, தூப தீப நைவேத்தியங்களால் ஆராதித்துக் கற்பூரம் காட்டித் தரிசிக்க வேண்டும்.

## பரப்பிரம்மம் இருபத்தாறாம் தத்துவம்

அப்பிரம்மத்தை நாடும் உயிர் இருபத்தைந்தாம் தத்துவம். அவ்வியத்தம் இருபத்தி நான்காம் தத்துவம், மகத்தத்துவம், அலங்காரம், பஞ்ச தன்மாத்திரைகள் ஐந்து, ஞானேந்திரியங்கள் ஐந்து, கர்மேந்திரியங்கள் ஐந்து, மனம், பஞ்சபூதங்கள் ஆகிய இருபத்திரண்டும் சேர்ந்து இருபத்து மூன்று தத்துவங்களாகும். இருபத்தாறாம் தத்துவமாய் நின்ற தனி முதலே கர்த்தா. அவரிடமிருந்து தோன்றிய மூவரும் இவ்வுலகை நடத்திச் செல்கின்றனர். •

# பிரதோசம்



பிரதோசம் என்பது சைவ சமயத்தில் சிவபெருமானை வழிபட உகந்ததாகக் கருதப்படும் காலமாகும். இப்பிரதோச காலத்தில் நிகழும் வழிபாடு பிரதோச வழிபாடு எனவும், பிரதோச தினத்தில் கடைபிடிக்கப்படும் விரதம் பிரதோச விரதம் எனவும் அழைக்கப்படுகின்றது.

## பிரதோச விரதம்

பிரதோச விரதம் சைவ மக்களால் கடைப்பிடிக்கப்படும் சிவ விரதங்களில் ஒன்று. இது ஒவ்வொரு மாதமும் வளர்பிறை, தேய்பிறை ஆகிய இரண்டு பட்சங்களிலும் வருகின்ற திரயோதசித் திதியில் சூரியன் மறைவதற்கு முன் மூன்றேமுக்கால் நாழிகையும், பின் மூன்றேமுக்கால் நாழிகையும் உள்ள பிரதோசகாலத்திற் சிவபெருமானை குறித்து அநுட்டிக்கப்படும் விரதமாகும். இவ்விரதத்தை நோற்க விரும்புபவர்கள் சித்திரை, வைகாசி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய நான்கு மாதங்களில் வரும் சனிப் பிரதோச நாளில் விரத அநுட்டானத்தைத் தொடங்குதல் மரபு. பிரதோச விரதம் அநுட்டிப்போர் பகல் முழுவதும் உபவாசமிருந்து பிரதோச வேளையாகிய சூரிய அஸ்தமனத்தின் போது சிவாலயங்களில் சிவதரிசனம் செய்த பின் போசனம் செய்தல் வேண்டும்.

## புராணக் கதை

மானிடர்கள் மட்டுமல்லாமற் பட்சிகள் தொடங்கி முப்பத்து முக்கோடி தேவர்களின் தலைவனாகக் கூறப்படுபவன் தேவேந்திரன். துர்வாச முனிவரின் சாபத்தினால் தன் செல்வங்களை இழந்த இந்திரன், தேவகுருவின் ஆலோசனையின்படி பாற்கடலைக் கடைந்து ஐராவதம், பரிவாரம் முதலிய செல்வங்களை மீட்க திட்டமிட்டான். தேவர்களின் பலத்தினாற் மட்டும் பாற்கடலை கடைவது இயலாத காரியமென அறிந்த தேவேந்திரன், தனது குல எதிரியென்றும் பாராமற் அசுர பலத்தையும் நாடினான். பாற்கடலை கடையத் துணைப்புரிவதால் என்றும் மரணமெய்யா நிலைதர வல்ல அமிழ்தத்தில் தனக்கோர் பங்கு கிடைக்குமென எண்ணி ஒப்புகொண்டனர் அசுரர்கள். பாற்கடலில் பள்ளிகொண்டருளும் நாராயணனார் தனது இரண்டாவது அவதாரமாகிய கூர்மாவதாரமெடுக்க தருணம் வந்ததையறிந்து தேவேந்திரனுக்கு உதவிட எழுந்தருளினார்.

## பாற்கடற் கடைதல்

வாசுகி பாம்பை கயிறாக்கி, மந்தர மலையை மத்தாக்கி, மலை கடலிலமிழா வண்ணம் கூர்மவதார கடவுள் தாங்கியபடி, தேவர்களும் அசுரர்களும் கடைய முற்பட்டனர். ஆனால் மலைமத்தோ அசைவேண்ணாவென்று அடம்பிடித்தது. இன்னும் பலவான்கள் தேவையெனயறிந்த இந்திரன், இராவணனிடமே மல்யுத்தம் செய்த சக்திசாலிகளாகிய ஆயிரங்கரங்களையுடைய கார்த்தவீரியார்ஜுனன் மற்றும் வானர வேந்தன் வாலியின் உதவியை நாடினான். அசுரர்களுடன் கார்த்தவீரியார்ஜுனன் பாம்பின் தலையினருகே சேர, தேவர்களுடன் வாலி பாம்பின் வாலினருகே சேர்ந்து மந்தர மலையை அப்படியும் இப்படியுமாக இழுத்துக் கடலை இனிதே கடைய ஆரம்பித்தனர்.

## தேவ அசுர ஆவல்

1. தீராப் பகையரும் சாவா வரங்கிடைக்குமென ஒன்றுக்கூடி உழைக்கச் செய்ததந்த ஆவல்.
2. குணத்தாற் மாறுபட்டோரும் வயதேறா மேனிபெற ஒருமித்த எண்ணங் கொடுத்ததந்த ஆவல்.
3. நா இதுகாருமுணரா சுவையென கொண்டாடி நிற்கசெய்த தந்த ஆவல்.
4. முக்கனியுந் தேனுஞ் சர்க்கரையுடஞ் சேர்த்துப் பிசைந்தப் பழச்சாறும் வீணெனக் கூறச்செய்ததந்த ஆவல்.
5. உடற்கூறுபடினும் உயிரெனுஞ் சீவன் உடனுறைய காந்தத்தினைத் தரவல்லவெனப் போற்றச் செய்ததந்த ஆவல்.

6. அமிழ்தத்தினை அருந்தியவர் உலகயின்பமனைத்தும் சுவைத்தவரென பெருமைக் கொள்ளச் செய்ததந்த ஆவல்.

7. இவையன்றி பெறுவதற்கு வேறு பேறில்லையென மருளச் செய்ததந்த ஆவல்.

### ஆலகாலத் தோன்றல்

சாகா நிலை தரவல்ல அமிழ்ததின்பாற் கொண்டபற்றினாற் கடைவதை தீவிரபடுத்த, அமிழ்த்தின் வரவை எதிர்நோக்கிட்ட வேளையில், அவர்களுக்கெல்லாம் பேரிடியாக கருகருவென திரண்டு நின்றது ஆலகாலம் எனும்விடம். இக்கொடியவிடத்தில் மேலும் வலுசேர்த்தாற் போல் வாசுகி வலிபொறுக்க முடியாமல் நஞ்சினை கக்கியது. சற்றும் எதிர்பாராமல் தலைப்பட்ட பேராபத்தினால், சித்தம் கலங்கிட, சிந்தை தடுமாறிட, மரணஓலம் கேட்டிட, கை காலெல்லாம் உதறிட, செய்வதறியாமற் பாலகர் போல் தன்னிலை எண்ணி மனந்நொந்து கண்ணீர் மல்கினர். மரணப்பயம் கொண்ட நெஞ்சினுள் சங்கரன் நினைவு இருளைக் கிழித்துத் தென்படும் ஒளியினைப் போலெழ, சதாசிவா!!! சங்கரா!!! அபயமென அலறி, பாற்கடலினிருந்து கயிலைநாதனின் திருவடியிற் தஞ்சம் புக கயிலைமலைக்கு விரைந்தனர். ஆலகாலமோ இவர்கள் செல்லும் வழிநெடுக்க தொடர்ந்துவர, தப்பித்தோம் பிழைத்தோமென மரணோலத்துடன் நந்தியம்பதியின் இருப்பிடத்திற்கு வந்தனர். விடயமறிந்த நந்தியோ அபயமருள பரம்பொருளின் கடைக்கண்பட அவ்வனைவரையும் உள்ளே அழைத்துச் சென்றார்.சேதியறிந்து திகைத்தனர் அங்கிருந்தோர். எப்பணி தொடங்கினும் சிவனருளைப் பெறும் நெறியினை மறந்த காரணத்தினாலேயே இவ்வபாயத்தில் சிக்கிவிட்டோமென பரம்பொருளின் திருவடியில் சரணடைந்தனர் ஓடிவந்தோர்.

### தீவினைத் தீர்த்தல்

மறுமொழியேதுங் கூறாமற் நாடிவந்தோர் உயிர்காக்க அபயந் தந்தருள மனமிறங்கினார் ஒப்பாரும் மிக்காருமில்லா சிவபெருமான். இந்நிலையில் கடைந்தோரின் உயிரைக்கவர காலனாக கயிலைக்கே வந்தது அவ்வாலகாலம். நெறிமறந்தாற் துன்பம் அவர்தம் செய்வினையாயினுந், தவறை யொப்புக்கொண்டு சரணடைந்தோர் இன்னல் போக்க, சித்தர்கள் கூடியிருக்குமந்த கயிலைமலையில், சிவகணங்கள் அஞ்சிய ''அவ்விடத்தை, இவ்விடத்திற்குக் கொண்டு வருவாயாக!!!'' யெனச் சுந்தரரை நோக்கி திருவாய் மொழிந்தார் விரிசடைப் பெருமான். பாரில்வுள்ளோர் பயந்து நடுங்கிய விடத்தினை ஒன்றுத்திரட்டி உருண்டையாக்கிட சுந்தரர், ''நமச்சிவாய!!! நமச்சிவாய!!! நமச்சிவாய!!!'' வென முன்மொழிய, அவையிலிருந்தோர் அதனை வழிமொழிய, அண்ட சராசரங்களும் இறைவனின் அத்திருநாமத்தையே உச்சரித்தவனவாக ஒருமித்த சிந்தனையிற் ஒடுங்க, அக்கொடியவிடமானது வடிவஞ் சிறுத்து உருண்டையானது.

பிரளயக் காலத்து அக்னியினைப் போன்ற வீரியமிகு விடத்தினை தன்னிருக் கரங்களால் ஏந்திய ஈசன் அவையோரை நோக்க, ''ஐயனே!!! ஆலகாலத்திலிருந்து எங்களைக் காக்க உகந்த வழி செய்க'' வென தேவ அசுரரனைவரும் வேண்டினர், நடப்பனயெண்ணி மலைமகள் பதற, அவள் தமையனார் தோள் நடுங்க, அடியவர்கட்கு அடியவராம் சிவனார் பக்தர்கள் வேண்டுகோளுக்கிணங்க அவ்விடத்தினை வாயிற்யிட்டு விழுங்கலானார். அம்மாசறுகோனின் அருளை காணுங்கால் பயங்கொண்டவராகத் திகைத்து நின்ற உமையும், பரந்தாமனும், எல்லா உயிர்கட்கும் உறைபவனாம் சிவனின்யுடலிற் நஞ்சு சேர்ந்தால் சகல யுயிர்க்கும் பாதிப்பினை உருவாக்குமென அஞ்சி, ஒடிவந்து சிவனாரின் கண்டத்தையிருகப் பற்றிட, கண்டத்திலேயே உறைந்துப் போனது ஆலகாலம். ஆலகாலத்தின் சூட்டினாலும் விடத்தின் கருநிறத்தினாலும் கண்டம் நிறம் மாறிட நீலகண்டரென திருப்பெயர்ப் பெறலானார் சிவனார். இவ்வாறு கயிலையில் சகல தேவ அசுர படைசுல அபயந்தேடி ஒன்றாகக் கூடியிருக்கின்ற வேளையிற் நாமும் கோயினுளிருக்க வரவிருக்கின்ற அபாயம் ஆலாமேயாயினுங் ஈசனின் திருவருளால் மறைந்துப் போகுமென்பது உறுதி.

### பிரதோஷக் காலம்

மூவுலகிற்கும் ஏற்படவிருந்த பேரழிவை சிவபெருமான் தன்னகத்தே யிருத்திக் காத்த காலவேளையே பிரதோசவேளை. வளர்பிறை பிரதோஷம், தேய்பிறை பிரதோஷமென மாதயிருமுறை பிரதோஷம் வரும். திரியோதசி திதியில் சூரியமறைவிற்கு முன்னே மூன்றே முக்கால் நாழிகையும், மறைந்ததற்கப்பால் மூன்றே முக்கால் நாழிகையும், ஆக ஏழரை நாழிகைக் காலந்தான் பிரதோசகாலம் எனப்படும். குறிப்பாக, 4:30 மணி முதல் 7:00 மணி வரை உள்ள காலமே பிரதோசகாலம். சனிக்கிழமை நாளில் வரும் பிரதோஷம் மிகவும் சிறந்தது.

# ஈசனுக்குப் பற்பல உருவங்கள்




ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமில்லார்க்கு ஆயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேனம் கொட்டாமோ

-மாணிக்கவாசகர்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருட்சோதி. பிரணவ வடிவன், ஞானச்சொரூபன் ஆகிய ஈசனுக்கு அவரவர் செய்யும் கருமம், அவரவர் இச்சைக்கேற்ப விளங்கிடும் பற்பல உருவங்களைக் காண்போம்.

1. ஈசனின் தலை சுவர்க்கம்; ஆகாயம் தொப்புள்; சூரியன் சந்திரன், அக்கினி-முக்கண்கள்; திக்குகள் செவி; பாதாளம் திருவடி, விண்மீன்கள், முத்துக்களாலான ஒரு மணி மாலை, விண்ணவர்கள் புயங்கள், அலைகடல்கள் ஆடை, ஞானம் ஒளி; மேகங்கள் ஜடாபாரங்கள்; வாயு-மூச்சு; பிரகிருதியே தேவி என்று இயற்கை வடிவில் ஈசனைக் காண்பர். அவர் முகத்திலிருந்து அந்தணர், தோள்களிலிருந்து இந்திரன், உபேந்திரன்; தொடையிலிருந்து வணிகர்கள், மற்றவர் பாதங்களிலிருந்து தோன்றினர். விருப்புடன் சிவபெருமான் சில உருவங்களைத் தாங்கினார்.

2. தியானத்தின் மூலம் உயர்ந்தோர் தம் சிந்தையில் கண்டு, ஒளிமயமான அப்பெருமானை வழிபட்டு குழகனே அருளாம் என்று வந்தனை செய்வர். அந்த லிங்கம் வாயிகலிங்கம் ஆகும்.

3. பரமன் உமாதேவியோடும், முருகனுடனும், பிறை அணிந்தவனாக காணப்படுவது சோமாஸ்கந்த மூர்த்தி ஆகும்.

4. திரிசூலம் தாங்கி நான்கு கரங்கள், மூன்று கண்கள், ஏக பாதத்துடன் விளங்குபவர் ஏகபாத மூர்த்தி எனப்படுபவர்.

5. இரு முகம், ஏழு புயம், மூன்று பாதங்கள் கொண்ட வடிவம் யஞ்ஞ தேவன்.

6. உமாமகேசுவரராக ரிஷபாமூர்த்தியாகத் தோன்றுவது ஓர் உருவம்.

7. நந்தியுடன், சிவகணங்கள் பரமனைப் பணிந்து வணங்கிடும் உருவம் கண் கொள்ளாக் காட்சி ஆகும்.

8. ஒரு கையில் உடுக்கை, மற்றொன்றில் தீ, தூக்கிய பாதம், ஒரு கை தொங்க, மற்றொன்று அபயகரமாக நடனமாடும் உருவம் நடராஜர் ஆகும்.

9-12 . மேலும் ஈசன் கொண்ட பஞ்சத்தோற்றங்கள் வாமதேவம், தத்புருஷம், அகோரரூபம் ஆகியவை.

13. இடுப்பில் சிங்கத்தின் தோல், புயங்களில் பொன்னகைகள், மார்பில் சங்குமணி ஆரம், ஜடையிலே பிறைமதி, கையில் குருதியுடன் கூடிய கபாலம் கொண்ட உரு ஒன்று.

14. அபயக்கரம், வரதஹஸ்தம், சூலமேந்திய கரம், தாமரைக் கொண்ட கரம் என்று நான்கு கைகளுடன் உள்ள உருவம்.

15. நெற்றிக்கண் தீ கக்க, மண்டையோட்டு மாலை அணிந்து, அயன், அரி, அரவம் கையில் பற்றி சுடுகாட்டில் வெண்ணீறு பூசி ஆடும் நடன உருவம்.

16. ஜலந்தரனைக் கால் கட்டை விரலால் பூமியில் வட்டம் எழுதி, அச்சக்கரத்தால் அவன் உயிர் வாங்கி ஜலந்தாரசுர வதமூர்த்தி வடிவம்.

17. கூரிய சூலம் தாங்கி, தேவியை அணைத்து லிங்கத்திலிருந்து தோன்றி காலனை அழித்த கால சம்ஹாரமூர்த்தி உருவம்.

18. தேவர்கள் அமைத்த தேரிலே இருந்து முப்புரங்களைச் சிரிப்பினால் எரித்துச் சாம்பலாக்கிய திரிபுர தகனமூர்த்தி உருவம்.

19. வேலவனை இடது தொடையில் அமர்த்தி அருள் புரியும் குகானுக்கிரக மூர்த்தி.

20. அவ்வாறே விநாயகரை சுமந்திருக்க காணப்படும் விநாயக அனுக்கிரக மூர்த்தி.

21. சப்த மாதர்களுக்கு அனுக்கிரகம் செய்த சப்தகன்னியர் அனுக்கிரக மூர்த்தி.

22. காளியாகிய துர்க்கைக்கு அருள்புரியும் துர்க்கானுக்கிரக மூர்த்தி மற்றும் ஜோதிலிங்க மூர்த்தி, தக்ஷிணாமூர்த்தி, பைரவ மூர்த்தி போன்றவைகளே அன்றி ஈசன் விளையாட்டாக கொண்ட கோலங்கள் எதையும் வடிவுற அமைத்து வழிபடுவோர் எம்பெருமான் பேரருளுக்குப் பாத்திரராகி வினைகள் நீங்கப்பெற்று என்றென்றும் அவன் திருவடி நிழலிலே வாழ்ந்திருக்கும் பேறு பெறுவர்.

## பாசுபத விரதம்

நந்திகேச்வரர் சனத்குமாரருக்கு உபதேசித்த பாசுபத விரதம் பற்றி சூதர் முனிவர்களுக்கு விவரிக்கலானார். பிரமாதி தேவர்கள் கைலயங்கிரி வாசனை கைகூப்பித் தொழுது பசுபாசம் அகன்றிட அருள்புரியுமாறு பிரார்த்திக்க ஈசன் பாசுபத விரதத்தை அனுஷ்டிக்குமாறு கூற அவர்களும் அந்த விரதத்தை அனுஷ்டித்து பசுத்தன்மை நீங்கப்பெற்றனர். பாசுபத விரதம் என்பது ஆயிரம் அசுவமேத யாகம் செய்த பலனைத் தரக்கூடியது. சித்திரைத் திங்களில் படிக லிங்கத்தில் ஈசனை ஆவாகனம் செய்து, அபிஷேகம் செய்து, அலங்கரித்து பொற்றாமரை நடுவில் வைத்து நறுமண மலர்கள் கொண்டு அர்ச்சித்து, தூப தீப நைவேத்ய உபசாரங்கள் செய்து, இறைவன் நாமத்தை உளமுருக ஜபித்து வணங்க வேண்டும். தென்திசையில் அகில், மேற்கில் மனோசிலை, வடக்கில் சந்தனம், கிழக்கில் அரிதாரம் ஆகியவற்றை பீடத்தின் அருகில் வைத்து ஈசனை ஆராதிக்க வேண்டும். வைகாசியில் வைர லிங்கத்தை வைத்தும், ஆனியில் மரகத லிங்கம், ஆடியில் முத்துலிங்கம், ஆவணியில் நீலலிங்கம், புரட்டாசியில் மரகத லிங்கம், ஐப்பசியில் கோமேதக லிங்கம், கார்த்திகையில் பவள லிங்கம், மார்கழியில் வைடூர்ய லிங்கம், தையில் புஷ்பராக லிங்கம், மாசியில் சூரியகாந்தத்தால் ஆன லிங்கம், பங்குனியில் பளிங்குக் கல்லினால் ஆன லிங்கம் என்று வைத்து பரமனைத் தொழ வேண்டும். ரத்தினங்களுக்குப் பதிலாக பொன், வெள்ளி, செம்பினால் ஆகிய லிங்கங்களையும் பூஜிக்கலாம். இவ்வாறு பன்னிரண்டு மாதங்களும் நன்கு பூசை செய்து, அந்தணர்களுக்கு உணவு முதலிய உபசாரங்கள் செய்து அவர்களை ஈசன் வடிவாக எண்ணி அர்ச்சித்து வணங்கி லிங்கங்களைத் தானம் செய்ய வேண்டும். பூஜித்த லிங்கங்களைச் சிவாலயத்தில் சேர்க்கலாம். பின்னர் வியபோகன தோத்திரத்தால் சிவனைத் துதிக்கவேண்டும். அவ்வாறு செய்பவர்கள் பசுபாசம் நீங்கி சிவலோகம் அடைவர்.

***நம: சிவாய சுத்தாய நிர்மலாய யசஸ்விநே:***
***துஷ்டாந்தகாய ஸர்வாய பவாய பரமாதிமநே***

என்று தொடங்கும் துதி வியபோகன ஸ்தோத்திரம் ஆகும்.

## உமாமகேசுவர விரதம்

அஷ்டமி, சதுர்த்தசி ஆகிய நாட்களில் உபவாசமிருந்து ஓராண்டு விரதம் இயற்றிய பின் பொன்னாலோ, வெள்ளியாலோ லிங்கத்தை அழகுடன் செய்து உமையுடன் பிரதிஷ்டித்து என் வினை தீர்த்தருள்வாய் என்று பிரார்த்தித்து மேள தாளங்களுடன் லிங்கத்தைச் சிவாலயத்துக்கு எடுத்துச் சென்று மறையோர்க்குப்


பொருள்களுடன் தானம் செய்ய வேண்டும். பசும்பொன்னால் அமைந்த லிங்கத்துடன் ரிஷபமும், சூலமும் அமைத்து ஓராண்டு வழிபடுவோர் சிவலோகப் பிராப்தி அடைவர். இந்த உமாமகேசுவர விரதத்தை ஆண் பெண் இருபாலாரும் பக்தியுடன் கடைபிடிக்கலாம். ஈசன் திருவருளை வேண்டி அனுஷ்டிக்கும் விரதத்தின் முடிவில் பஞ்சாக்ஷரத்தை பக்தியுடன் பூஜிக்க வேண்டும்.

### பஞ்சாக்ஷர மந்திர பெருமை

ஒரு சமயம் தேவி ஈசனிடம் பஞ்சாக்ஷர மந்திரத்தின் பெருமையைப் பற்றிக் கேட்க, ஈசன் ஐந்தெழுத்தின் மகிமை குறித்து பார்வதி தேவிக்கு விவரித்தார்.

பரமன் கூறியதாவது : சிருஷ்டிக்காகத் தோற்றுவிக்கப்பட்ட பிரமன் படைக்கும் சக்தி அடைய என் அருள் வேண்டி என்னைத் துதி செய்ய, வேதங்களும் போற்றி வணங்கும் பஞ்சாக்ஷரத்தை (திரு ஐந்தெழுத்தை) அவனுக்கு என் ஐந்து முகங்களாலும் உபதேசம் செய்ய, பிரமன் சகல ஞானமும் பெற்று படைக்கத் தொடங்க அவனிடமிருந்து தசப் பிரம்மாக்கள் தோன்றினர். அவர்கள் இல்லற பந்தம் பற்றாதிருப்பதற்காக தவம் செய்ய நான் அவர்கள் முன் தோன்றி யோகத்தையும், ஐந்தெழுத்தையும் உபதேசித்தேன். அவர்கள் அதனை வையகம் முழுவதும் பரப்பினர். வேதத்தின் சாரமாகவும், விவரிக்க முடியாத உட்பொருளை உடையதும், முக்தியும் அளிக்கவல்லதாக பஞ்சாக்ஷரத்தை ஜபித்தவர் பிறவித் துன்பம் நீங்கப் பெறுவர் என்றார் பரமன். ●

# காசியின் சிறப்பு



**கா**சியின் மகிமை ஏராளம். கடல் சூழ்ந்த இவ்வுலகத்தில் காசியே முக்தி தரும் நகரம். இத்தலத்தில் ஈசன் என்றும் நீங்காது உறைவதால் இதற்கு அவிமுக்தேச்வரம் என்ற பெயர் உண்டு. முனிவர் அவ்வியன் காசியில் பரமனை வழிபட்டு வீடுபேறு பெற்றார். குபேரன் நவநிதிகளைப் பெற்றான். சம்வர்த்தன் என்பவன் இங்கு ஈசனை வழிபட்டு பரமன் திருவடிகளை நீங்காத வாழ்வு பெற்றான். இங்குதான் வியாசர் இறைவனின் திருவடிகளைப் பெற்றார். மாயோன், நான்முகன், அக்கினி, சூரியன், சந்திரன், இந்திரன் ஆகியோரும் இந்தக் காசியில் பரமனை வழிபட்டு அவர் திருவருளைப் பெற்றனர். காமதேனு காசியில் ஈசனை லிங்க வடிவில் ஆராதித்துப் பேறு பெற்றது. அந்த இடம் கோப்பிந்ரேக்கம் ஆகும். அந்த லிங்கத்தின் பெயர் கோப்பியேச்சுவரர் ஆகும். பிரம்மன் கபிலாகாரம் என்ற குளக்கரையில் லிங்கப் பிரதிஷ்டை செய்து வழிபட்டார். அதன் பெயர் ரிஷபத்து வாசன். மற்றொரு லிங்கத்தை பத்திரோதயம் என்ற தடாகக் கரையில் பிரதிஷ்டை செய்ய, அதனை மாதவன் வழிபட்டான். அது அரணிய சர்ப்யேசுவரர் எனப்படும். மற்றொரு லிங்கம் பிரம்மன் வழிபட்டது. இச்சுவலினேச்சுவரர் எனப்படுகிறது.

பர்வதராஜனால் காசியில் வழிபாடு செய்யப்பட்ட லிங்கம் சைலேச்சுவரர் ஆகும். மற்றொரு லிங்கம் பிரம்மனால் பிரதிஷ்டை செய்யப்பட்டு அசுரர்களாலும், அமரர்களாலும் வழிபாடு பெறப்பட்டது. அது மத்திமேசர் ஆகும். சுக்கிராச்சாரியாரால் அமைக்கப்பட்டது சுக்கிரேசுவரர் ஆகும். இத்தலத்தில் உயிர்விடும் மனிதனும் மற்ற எந்த ஜீவராசியும் முக்தி அடையும். பிரளய காலத்திலும் அழியாது விளங்கும் இத்தலம் அவிமுக்தம் என்ற பெயர் பெற்று விளங்குகிறது. இவ்வாறு காசியின் சிறப்பைத் தேவிக்கு விளக்கிய ஈசன் அவிமுக்தீசுவர லிங்கத்தில் மறைந்தார். எனவே, கற்றோர்கள் தங்கள் அந்திமக் காலத்தை உணர்ந்து, காசிக்குச் சென்று தங்கி, கங்கையில் நீராடி பிரணவம் ஜபித்து, ஈசன் திருவடிகளை, ஒரு கணமும் மறவாது தியானித்து ஆவி நீத்து பிறவாப் பேரின்ப வீட்டை அடைவர். ●

# சுதரிசனன் வரலாறு

தாருகாவனத்தில் இருந்து முனிவர்களுக்கு உண்மையை உணர்த்த எண்ணி சிவபெருமான் புறப்பட்டார். திகம்பரராய், சிறந்த அழகனாய், கையில் ஓடு ஏந்தி பிக்ஷாடனாராய் புறப்பட்டார் ஈசன். அவரைக் கண்ட ரிஷிபத்தினிகள் தம் சுய அறிவின்றி, ஈசன் வசத்தினராகி அவரைப் பின் தொடர அனைவருடனும் முனிவர்கள் இருந்த யாகசாலைக்கு அருகில் வந்தார் ஈசன். இந்நிலையில் முனிவர்கள் சினம் கொண்டு யாரோ ஒரு காமுகனை தன் பத்தினிகள் பின் தொடர்ந்து வந்திருப்பதைக் கண்டு நிலைகுலைந்தனர். அவர்கள் அந்த திகம்பர சன்னியாசியைச் சபித்தனர். ஆனால், அவர்களுடைய சாபம் பலனற்றுப் போகவே திகைப்படைந்தனரே அல்லாமல், வந்தவர் பரமன் என்பதை அறிந்து கொள்ளவில்லை. அப்போது சன்னியாசி திடீரென்று மறைந்துவிட்டார். சன்னியாசி மறைந்தவுடன் கொடுந்துன்பங்கள் முனிவர்களைப் பற்றிக் கொண்டன. செய்வதறியாது அவர்கள் உதவிக்காக பிரமனை நாடினர். நிகழ்ந்தது அனைத்தையும் அறிந்த பிரமன் முனிவர்களிடம் கீழ்க்கண்டவாறு கூறினார். நீங்கள் பெரும் தவறு இழைத்துவிட்டீர்கள். முக்கியமாக அனைத்துக்கும் மேலான பரம்பொருள் ஒன்று இருப்பதை ஏற்கவில்லை. அதனை உணர்த்துவதற்கே எம்பெருமான் உங்களிடையே வந்தார். அவரை நீங்கள் அறிந்து கொள்ளவில்லை. சாபமும் கொடுத்தீர்கள். அந்த அபசாரமே வெப்ப நோயால் உங்களைத் துன்புறுத்துகிறது என்றார். ஈசனிடம் பக்தி உள்ளவன், அதிதியாக வரின், அவனை ஈசனாகவே எண்ணி உபசரிக்க வேண்டும் என்ற மறைகள் கூற்றை நீங்கள் அறியவில்லை. அதிதியை உபசரித்து அழியாப் பேரின்பம் பெற்ற சுதரிசனன் வரலாற்றைக் கேளுங்கள் என்று அந்த வரலாற்றைக் கூறினார் பிரமன்.

உத்தம குலத்தில் பிறந்த அந்தணன் சுதரிசனனும், கற்பிற் சிறந்த மனைவியும், அன்றாடம் தன் இல்லத்திற்கு வரும் அதிதிகள் மனம் கோணாமல் அவர்களுக்கு உணவிட்டு, மகிழ்வித்து அனுப்பி வந்தனர். ஒருநாள் ஓர் அதிதி வந்தார். அவரையும் எல்லா வகையிலும் உபசரித்து உணவூட்டினர். இடையில் சுதரிசனன் ஓர் அவசர வேலையாக வெளியே செல்ல வேண்டியிருந்ததால் மனைவியிடம் அதிதி மனம் கோணாமல் அவரை உபசரிக்குமாறு கூறிவிட்டுச் சென்றான். உணவருந்திய அதிதி அவளிடம் தனக்கு உடல் சுகமும் அளிக்கும்படி கேட்டான். அவள் பதைபதைத்து விட்டாள். கற்புக்குப் பங்கம் வரும், அல்லது அதிதிக்கு உபசாரக் குறைவு ஏற்படும் என்று எண்ணி செய்வதறியாமல் தவித்துக் கொண்டிருந்தபோது சுதரிசனன் வீடு திரும்பினான். அதிதிக்கு எல்லாச் சௌகரியமும் கிடைத்ததா? பூரண திருப்தியா? என்று கேட்க மனைவி பதைபதைத்திருக்க, அதிதி அந்தணர் மனைவி அறுசுவை உண்டியுடன், உடலுக்குச் சுகம் அளித்து திருப்தி கொடுத்தாள் என்று கூறினார். அப்போது அந்தணன் சினமோ, வெறுப்போ கொள்ளாமல், தன் மனைவியை அவர் அனுபவித்து விட்டதால் அவள் அதிதியின் சொத்து என்று கூறி, அவளையும் உடன் அழைத்துச் செல்லுமாறு வேண்டினான். அப்போது அந்த அதிதி மறைந்து விட்டார். அங்கே அவர்களுக்குச் சிவபெருமான் காட்சி தந்து, தான் அவர் மனைவியைத் தீண்டவும் இல்லை. அவள் கற்புக்கரசி. புனிதமானவள். பிறவிப் பெரும் துயரினின்று நீங்கள் இருவரும் விடுபட்டு என்னிடம் வந்து சேர்வீராக என்று அருள்பாலித்தார். இவ்வாறு அதிதி பூஜையின் மேன்மையைப் பிரமன் தாருகாவனத்து முனிவர்களுக்கு எடுத்துரைத்தார். மேலும், அம்முனிவர்கள் இறைவன் திருவடிகளிலேயே சரண் புக, அவரை வழிபடின் அவர் அருளால் முனிவர்களின் துன்பங்கள் நீங்கும் என்று அறிவுறுத்தினார். அடுத்து, பிரமன் அவர்களுக்குத் துறவின் தன்மையை எடுத்துக் கூறியதுடன் துறவிகள் மட்டுமின்றி மற்றோரும் ஈசன் பேரருளுக்குப் பாத்திரமானவர்களே. தாம் செய்யும் கர்மாக்களை அந்தப் பெருமானுக்கே அர்ப்பணித்து, அனைத்திலும் ஈசனைக் காண்பவர் முக்தி அடைவர் என்றார். ●

# பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது

விண்வெளியில் சந்திரனுக்கும் சுக்கிரனுக்கும் இடையே அமைந்துள்ளது, புதனின் பயணப்பாதை. ராசிச் சக்கரத்தில், சூரியனுக்கும் சந்திரனுக்கும் பின்வீட்டில் தென்படுவான் புதன் பகவான். மிதுனமும் கன்னியும் அவன் இருக்கும் இடங்கள். கன்னியில் உச்சம் பெற்றிருப்பதால், அவனது பலம் வலுத்திருக்கும். மிதுனம் என்றால் இருவர்; அதாவது... இணைந்த இருவர் என்று பொருள் உண்டு. நாகரிக மனித இனத்தின் வெளிப்பாடு, மிதுனம். அது முதிர்ச்சி அடைந்த நிலையைச் சுட்டிக்காட்டுவதே கன்னி. ஓடத்தில், கன்யகை கையில் பயிருடன் தென்படும் இயல்பு கன்னிக்கு உண்டு. சூரியனுடனும் (ஆன்மா) சந்திரனுடனும் (மனம்) சேர்ந்து காணப்படுவான் புதன். ராசிச் சக்கரத்தில் சூரியனுடன் இணையும் வேளையில், நிபுண யோகத்தைத் தரவல்லவன் புதன். எதிர்பாராத சிக்கலில் சிக்கிக்கொண்டாலும், எளிதில் வருவதற்கான சிந்தனையை, புத்திசாலித்தனத்தை அளிப்பான். புதன் என்றால், அறிதல், உள்வாங்கி உணர்தல் என்ற அர்த்தம் உண்டு (புத அவகமனே). உடலையும் உள்ளத்தையும் இணைப்பதில் புதனுக்குப் பங்கு உண்டு. ஆன்மிகத்தையும் உலகவியலையும் இணைக்கிற பாலமாகச் செயல்படுவான் புதன். மனம் நினைத்ததை புத்தி ஆராயும். அந்த வேலையை இறுதி செய்வதற்குப் புதன் தேவை. சந்திரனின் (மனம்) மைந்தனாக புதனைச் சித்திரிக்கிற தகவல், புராணத்தில் உண்டு. அதாவது, சந்திரனிலிருந்து வெளியானவன் புதன். மனத்தின் எண்ண ஓட்டத்துடன் நெருங்கிய தொடர்பு புதனுக்கு இருப்பதையே இது உணர்த்துகிறது. புதன் என்றால், அறிஞர் என்கிற அர்த்தமும் உண்டு. உடலில் அணு அளவில் உள்ள மனம், புதனின் ஒத்துழைப்பில், தன்னுடைய எண்ணங்களை விரிவாக்கி, செயல்படுத்தி வெற்றிக்கு வழி வகுக்கிறது. சிந்தனை வளத்துக்கான அடித்தளம், புத்தி; அது, புதனுடன் இணைந்தே இருக்கும். நாகரிகமான சிந்தனையைத் தூண்டுபவனும், முதிர்ச்சி அடைந்த செயல்பாட்டுக்கு உரியவனும் புதனே ! அவன் வலுவிழந்தால், பாமரனாகச் செயல்படுவான். வலுவுற்றால், அறிஞனாக விளங்குவான். கல்வியை முழுமையாகப் பெறுவதற்கு, புதனின் துணை அவசியம். வாழ்வின் வெற்றிக்கு ஆதாரமான அறிவு வளர்ச்சிக்கு, புதனின் பங்கு வலுப்பெற்றிருக்க வேண்டும். உலக சுகத்தை அடைவதற்குப் பணம் வேண்டும்; அதனை ஈட்டுவதற்கு உயரிய கல்வி வேண்டும்; அதனைப் பெறுவதற்கு, புதனின் ஒத்துழைப்பு தேவை. உயர் கல்வியானது பணத்தை மட்டுமே அளிக்கும். குறிப்பாக, இன்றைய சூழலில், உலக வாழ்வின் சுகத்தை அடைவதற்குப் பணத்தை ஈட்டித் தருமே தவிர, அறிவின் முதிர்ச்சியை அளிக்காது. ஆகவே, படிக்காத மேதைகள் தோன்றுவதற்கு புதனே காரணமாகிறான் !

இன்றைய கல்வியறிவு, பெரும்பாலும் தொழிலுடன் இணைந்து பணம் ஈட்டுகிற கருவியாகவே மாறிவிட்டது. அதை அளிப்பது மட்டுமின்றி, அறிவையும் அளிப்பவன், புதன்! பேரறிவை, பெருஞானத்தை அடைவதற்கு, துறவறம் ஏற்பவர்களுக்கு புதனின் உறுதுணை அவசியம். அவனுக்கு ஸௌம்யன் என்ற பெயர் உண்டு. ஸோமன் என்றால் சந்திரன். அவனுடைய மைந்தன் என்றும் இதற்கு அர்த்தம் சொல்வர். பொதுவாக, மற்ற கிரகங்கள் யாவும் ஏனைய உடல் உறுப்புக்களுடன் தொடர்பு கொண்டிருக்கும். புதன் மட்டும், சந்திரனுடன் (மனம்) நெருங்கிய தொடர்பில் இருப்பவன் ! சூரியன், சந்திரன் ஆகிய இருவரது தொடர்பில் பலம் பெற்று, பிற கிரகங்கள் செயல்படுகின்றன. மற்ற ஐந்து கிரகங்களும் நட்சத்திர கிரகங்கள். அவற்றை, தாராகிரகங்கள் என்கிறது ஜோதிடம். ஆன்மாவாகிய சூரியனும், மனமாகிய சந்திரனும் வலுவாக இல்லையெனில், மற்ற கிரகங்கள் செயலற்றுவிடும்; புலன்கள் வேலைசெய்யாமல் நிலைத்துவிடும். எனவே சூரிய சந்திரருக்கு, ஜோதிர்கிரகம் எனும் அந்தஸ்து உண்டு. மனமானது நினைக்க வல்லது; புத்தி ஆராய வல்லது; அத்துடன், அதற்குத் தகுந்தபடி உத்தரவிடவும் செய்யும்; புலன்கள் அதன்படி செயல்படும், புதனுடன், வளர்பிறை சந்திரன், சுக்கிரன், குரு ஆகியோர் இணைந்தால், சிந்தனை வளம் பெருகும்; சிந்தனையில் தடங்கல் இருக்காது; வெற்றியும் மகிழ்ச்சியும் தேடி வரும். சனி, செவ்வாய், ராகு - கேது ஆகியோர் இணைந்தால், தனது வலிமையை இழப்பான் புதன்; தவறான சிந்தனைகளால், சங்கடத்தைச் சந்திக்கச் செய்வான். சூரியனுடன் நெருக்கமாக இருப்பின், நிபுண யோகத்தை அளிப்பான். ஆனாலும், மிக நெருங்கிய நிலையில், மௌட்யம் பெற்று, அதாவது செயல்படும் தகுதியை இழந்து, விபரீத பலனைத் தந்து விடுவான். புதன். அஸ்தமனமானால், அதாவது சூரிய ஒளியில் தென்படாமல் இருப்பின், செயல்பட மனமிருந்தும் இயலாத நிலைக்குத் தள்ளுவான். இதனால்தான், பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது என்பர். முன்னோர், அதாவது, பொன் குவிந்திருப்பினும், அறிவு பெருகுவது அரிது ! செல்வந்தர்கள் பலருக்கு அறிவுரை வழங்க, அறிவாளிகள் தேவைப்படுவது உண்டு. பணத்தைப் பல வழிகளிலும் ஈட்டலாம்; அதனைத் தக்கவைத்துக் கொள்ள அறிவு தேவை. அதற்கு, ராசிச்

சக்கரத்தில் புதன் வலுவுற்றிருக்க வேண்டும். செவ்வாயுடன் இணைந்தால், ரஜோ குணத்தின் சேர்க்கையால், சிந்தனை திசை திரும்பும் விரும்பத்தகாத விளைவுகளுக்குக் காரணமாகி விடுவான். புதன், சனியுடன் இணைந்திடின், மெத்தனத்துடன் இருக்கச் செய்து, அறிவிருந்தும் பாமரன்போல் செயல்பட வைப்பான். சனி, புருஷத்தன்மை கலந்த அலி; புதன், பெண்மை கலந்த அலி என அவர்களின் தரம் குறித்து விவரிக்கிறது ஜோதிடம். ஆகவே, அவர்களின் சேர்க்கை, இரண்டும் கெட்டான் பலத்தையே வழங்கும் என உறுதி செய்கிறது. அதேபோல், ராகு - கேதுவோடு இணைந்தாலும் நற்பலனை அளிக்கமாட்டான், புதன். ஏனெனில், இந்தக் கிரகங்களை நிழல்கிரகம் என்கிறது ஜோதிடம் (சாயா கிரஹம்). அதாவது, இருள், அறியாமை என்று அர்த்தம். இருளில் மறைவதும், அறியாமை ஆட்கொள்வதும் செயல்பாட்டையே முடக்கிவிடும் அல்லவா ?!

புதன், சுபக்கிரகம். ஆனால், பாபக் கிரகத்துடன் இணைந்தால், பாவியாக மாறுவான் என்கிறது ஜோதிடம். அப்படித்தான், அறிவானது, துஷ்டனுடன் இணையும் போது மங்கிவிடும். நல்லவனுடன் இணைய... துளிர்விட்டு மிளிரும், ஆசை, கோபம், அறியாமை, அகங்காரம், அசூயை ஆகிய அனைத்தும் மனதில் இணைந்திருக்கும்; அன்பு, பண்பு, உண்மை, சகிப்புத் தன்மை, அடக்கம், இரக்கம் ஆகிய நற்குணங்களும் மனதுள் இருக்கும். புதன் வலுப்பெற்றால், துர்குணங் களை அடக்கி, நற்குணங்களை வளர்க்கும். சிந்தனைத் தரத்தை உயர்த்தும். நல்ல குடிமகனாக மாறச் செய்யும். புதன், மற்ற கிரகங்களுடன் சேராமல், மிதுனத்திலோ கன்னியிலோ வீற்றிருக்கும் வேளையில், எதிர்மறையான பலனைத் தருவான் என்கிறது ஜோதிடம். தனுர் லக்னம் அல்லது மீன லக்னம் புதன். மிதுனம் அல்லது கன்னியில் வீற்றிருந்தால், கேந்திராதிபத்ய தோஷம் உண்டாகும். இதனால் விபரீத பலனே கிடைக்கும் என்பர். தனுர் லக்னமானால், ஏழிலும் பத்திலும் இருக்கிற புதனுக்கு, கேந்திராதிபத்ய தோஷம் உண்டு. மீனமெனில், நான்கிலும் ஏழிலும் அந்தத் தோஷம் இருக்கும். நாலு கேந்திரங்கள் இருந்தாலும், 4-வது கேந்திரத்தில் இருக்கிற புதன், உலக சுகத்தால் கிடைக்கிற மகிழ்ச்சியை இழக்கச் செய்வான்; மற்ற கேந்திரங்களின் பலனை இழக்க வைக்கமாட்டான் எனும் விளக்கமும் ஜோதிடத்தில் உண்டு, புதனானவன், அறிவு வழிச் சுகத்தை அடையவும் செய்வான்; இழக்கவும் வைப்பான். காலத்தின் அளவுகோலான ஒரு வாரத்தின் நடுநாயகமாக வீற்றிருப்பவன், புதன். மனதில் படிந்த அழுக்கு மற்றும் உடலில் தென்படும் அழுக்கு ஆகியவற்றை அகற்ற, புதன்கிழமை சிறந்தது என்கிறது சாஸ்திரம். முடியும் நகமும் உடலின் கழிவுப் பொருட்கள் என்கிறது ஆயுர்வேதம். மஜ்ஜை, எலும்பு இவற்றின் கழிவுகள் என்றும் தெரிவிக்கிறது. அந்தக் கழிவுகளை அகற்றுவதற்கு, புதன் கிழமையைப் பரிந்துரைக்கிறது தர்மசாஸ்திரம். அதனால்தான், அந்தக் காலத்தில் புதன்கிழமையன்று க்ஷவரம் செய்துகொள்வார்கள். ஆண்கள், எண்ணெய் தேய்த்துக் குளிக்க, புதன் கிழமையையே தேர்ந்தெடுக்கும் சம்பிரதாயமும் உண்டு. எண்ணெய் தேய்த்துக் குளித்தால், உடல் அழுக்கு அகன்றுவிடும். தற்காலச் சூழலால் அது விலக்கப்பட்டாலும் அதன் பெருமை குன்றிவிடாது.

பூர்வஜென்ம வினைக்குத் தக்கபடி, பிறக்கும் வேளை அமையும். வினையின் முழு உருவத்தை ஜாதகத்தில், வீடுகளில் அமர்ந்த கிரகங்கள் விளக்கும். புதன் வலுவுடனும், மற்ற கிரகங்களின் தாக்கத்தால் வலுவிழக்காமலும் இருந்தால், அதனால் விளைகிற நற்பயன்கள் யாவும் முன் ஜென்ம புண்ணியத்தின் சேமிப்பு என அறியலாம். கிரகங்களின் கூட்டுப்பயன் தான் நடைமுறைக்கு வரும். ஆகவேதான், வீடுகளுக்கு ராசி என்றால் கூட்டம் என்று அர்த்தம், நெற் குவியலை தான்ய ராசி என்றும், பணக் குவியலை தன ராசி என்றும் சொல்வர். தனியொரு கிரகம், மற்ற கிரகங்களின் தாக்கத்தை முறியடித்துப் பலன் தராது. அவற்றுடன் இணைந்து, சிறு மாறுபாட்டுடன் தனது பலனை நடைமுறைப்படுத்தும். முற்றும் துறந்த சில துறவிகள், அறிஞர்கள், பெரியோர்களிடம் சில அல்பத்தனங்களும் தென்படும். பெருமையில் இந்தச் சிறுமை புலப்படாது. ராசி புருஷனின் நாலாம் வீட்டுக்கும் ஆறாம் வீட்டுக்கும் உடையவனாகச் சித்திரிப்பதால், மகிழ்ச்சியின் இழப்பு, எதிரியின் தாக்கம் ஆகியவை நேரிட புதன் காரணமாகிறான். வலுப்பெற்ற புதனுக்கு, குரு மற்றும் செவ்வாயின் பார்வை சேர்ந்து வரும்போது, அறிவை வளர்க்க குரு உதவினாலும், செவ்வாய் அகங்காரத்தை அளித்து, அறிவை மங்கச் செய்வதும் நிகழும். அகங்காரம் வெளிப்படுகிற அறிஞர்களும் உண்டு. விவேகம் அகங்காரத்தை அழிக்க வேண்டும். ஆனால், செயல் படாது போய்விடும். புதனை வழிபட்டால், அகங்காரம் அழியும்; அமைதி கிடைக்கும். விவேகத்தைத் தரவல்லவன் புதன் பகவான்; அவனை வழிபட, விவேகம் வளரும்! அடக்கமும் சகிப்புத்தன்மையும் இருந்தால் வளமான வாழ்க்கை நிச்சயம், பும் புதாய நம: என்று சொல்லி புதன் பகவானது திருவிக்கிரகத்துக்கு 16 உபசாரங்களைச் செய்யுங்கள். அல்லது, அதன் அதிவேதையான ஸ்ரீமந் நாராயணனை, நமோ நாராயணாய என்று சொல்லி, புதனை வழிபடுங்கள். இன்னலை அகற்றி, இன்பத்தை வழங்குவான்! பஞ்சபூதங்களில், பூமியின் பங்கு புதனில் உண்டு. நம் உடலிலும் பூமியின் பங்கு உண்டு. ஆகவே, பூமித்தாயில் வழிபாடு, புதன் பகவானின் வழிபாடாக மாறிவிடும். புதன் பகவானை வணங்குங்கள்; வளம் பெறுவீர்கள்! •



I congratulate the Arunachaleshwar temple committee for successfully completing kumbhabhishekam in a grand way. Wish and hope that grace of Lord Arunachaleshwara would be ever present on those who live in Beverwijk town. I also wish that the ten pillars of dharma some of which are truth, control over mind and senses, non-stealing, being physically mentally and verbally clean etc. are followed and spread for betterment of humanity.

I hope and wish that the support from devotees will be there to safe guard Hindu traditions, values and customs and support temple in all their activities both inside and outside temple.

Let the grace of Lord Ganesh, Lord Shiva and Parvati, Lord Kumara with his two wives Valli and Devasena, Lord Bhairva, The serpent lord and the 9 planets guide us to path of immortality with the knowledge of self.

Yours sincerely,

**Bharadwaj Gadepally**
Temple Guru
Arulmigu Sri Arunachaleswarar Thirukovil




# ஜெனா சிற்பக் கலைக்கூடம்
# JENA HANDICRAFT

WOODEN HANDICRAFTS- MANUFACTURER AND EXPORTERS
APPROVED BY SRI LANKAN EXPORT DEVELOPMENT BOARD

EBD : 216683 | T.D:2362(N)col | Reg.Number: WA25656

Tel : 0044 208 868 9451
0044 744 878 4808
E-mail: Jena@hotmail.co.uk

69, Lucas avenue
Harrow, HA2 9UH
United Kingdom

284,Modera street
Colombo-15, Sri Lanka
www.Jenahandicraft.webs.com


ௐ



ஆலயத்தை அமைத்த பிரதம ஸ்தபதியின் வாழ்த்துச் செய்தி.

மேன்மை கொண்ட சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்."

[illegible]

[illegible]

[illegible]

இங்ஙனம்.

[illegible]

## வாழ்த்துச் செய்தி

தலைவர் பிரபாகரனின் போராட்டத்தினால் தமிழ் மக்களுக்கு கிடைத்த நன்மை உலக நாடுகள் முழுவதும் சைவம் தழைத்தோங்க வழி கிடைத்தது. புலம் பெயர் மக்கள் அதனை சரியாக பயன்படுத்திக் கொண்டதாக எனக்கு தெரியவில்லை. நெதர்லாந்தில் உள்ள குறைந்த அளவில் மக்கள் வாழும் பிரதேசத்தில் கோவில் அமைக்க நினைத்த பொழுது அவர்கள் சிந்தனையில் அண்ணாமலையாருக்கு கோவில் அமைக்கவேண்டும் என்று நினைத்ததுதான் மிகவும் பெருமைக்குரிய விஷயம். அரச மரத்தை கண்டவுடன் பிள்ளையாரை வைத்து வழிபடும் வழக்கம் அதிகமாகிவிட்ட இந்த நேரத்தில் அண்ணாமலையாருக்கு கோவில் அமைத்த இவர்களை வாழ்த்தாமல் இருக்க முடியாது. நினைக்க முக்தி தரும் தலம் திருவண்ணாமலை, தரிசிக்க முக்தி தரும் இடம் சிதம்பரம், பிறக்க முக்தி தரும் இடம் திருவாரூர், இறக்க முக்தி தரும் இடம் காசி. இந்த வகையில் அண்ணாமலையாரை ஐரோப்பாக் கண்டத்தில் அமைத்துள்ளனர். அனைவரும் சென்று வணங்க வேண்டிய கோவிலாக இது அமையவேண்டும். அந்த வகையில் இந்த கோவில் அமைந்திருப்பதைக் கண்டு மிக்க மகிழ்ச்சி. இந்த கோவிலை புலம்பெயர் மக்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து கற்கோவிலாக அமைக்கவேண்டும் என்பது என்னுடைய ஆசை. நன்றி

திரு. நா சிவானந்த சோதி
சிவன் பரப்பும் சீலர்
சைவ நீதி ஆசிரியர் – லண்டன்



## வாழ்த்துகிறேன்

மங்களம் பொங்கும் ஜய வருடம் தைமாதம் 8 ம் நாள் 01-02-2015 ஞயிற்றுக்கிழமை நெதர்லாந்து நாட்டில் Beverwijk நகரத்தில் மாட்சிமை பொருந்திய அருள்மிகு ஸ்ரீ அருணாச்சலேஸ்வரர் பெருமான் எமக்கு அருளை அள்ளிவழங்க ஆனந்தமாய் அமர்கின்றார் இந்த அரும்காட்சி நிகழ்வில் அடியவர்கள் அனைவரும் ஒன்றுகூடி எம்பெருமானின் அருளைப்பெற மகிழ்ச்சியாக உள்ளனர்.

எமது ஆலயநிர்வாகத்தினரின் ஒரு புதிய பரிமாணம் இந்தநிகழ்வில் மிளிர்கின்றது. இந்த ஆலயத்தில் நித்திய நைமித்திய பூஜை கிரிகைகள் சிறப்புற நடைபெற எல்லோரதும் ஆசியும் ஒத்துழைப்பும் தேவையாகவுள்ளது. எமது ஆலயம் சிறப்புற அமைவதற்கு மிகவும் உறுதுணையாக இருந்து இனம் மொழி பாராது உதவிய அனைவர்க்கும் நன்றி உரித்தாகட்டும்.

இன்று நடந்த இந்தநிகழ்ச்சிக்கு இதே நகரத்தில் உள்ள திரு.இ. வடிவேல் அவர்கள் குடும்பமாகவும் எம்பெருமான்மேல் வைத்த அன்பினாலும் மிகச்சிறப்பாக செயற்பட்டு துரிதகதியில் அனைத்து வேலைகளையும் முடிப்பதற்கு முன்நின்று உதவியுள்ளார். அவருடைய இந்தச் செயலானது சிவபெருமானின் மேல் வைத்துள்ள மதிப்பிடமுடியாத பக்தியின்அளவை காட்டுகின்றது.

புலம்பெயர் நாடுகளில் அமைந்துள்ள சிவாலயங்களில் எமது ஸ்ரீ அருணச்சலேஸ்வரரும் மிகவும்முக்கியமானவர் இவர் மூர்த்தி தல பெருமைகளைக் கொண்டுள்ளார். எமது இந்த சித்திரசிவாலயம் சிறப்புற அமைத்த சிற்பவல்லுனர்களில் ஒருவரான திரு.ச. ஜெகாந்தன் மிகவும் பாராட்டுக்குரியவர்.மேலும் நீண்டதொரு பயணத்திற்கு வழிவகுப்பதற்கும் எம்பெருமான் அருளை வழங்குவதற்கும் அடியவர்களாகிய நீங்களே பொறுப்பு

நன்றி

கலாநிதி மார்க்கண்டு

தமிழ் ஆசிரியர், ஆலய நிர்வாக உறுப்பினர்



## பேவர்வைக்கில் அமைந்துள்ள சிவன் ஆலயம்

நெதர்லாந்து நாட்டில் உள்ள பேவர்வைக் என்னும் நகரில், அன்ணளவாக நூறுகுடும்பங்களையும் முன்னூற்றைம்பதுக்கும் மேற்பட்ட தமிழ் மக்களையும் கொண்ட நகரில், ஒருவருக்கொருவர் மனக்கசப்புகளோ பிரச்சினைகளோ இன்றி சுமூகமான முறையில் வாழ்ந்து கொண்டிருக்கும் எம்மக்களைப் பற்றி சொல்லாமல் இருக்கமுடியாது. இப்படியான அமைதியான முறையில் வாழ்ந்து கொண்டிருக்கும் எம்மக்களுக்கென்று ஒரு கோவில் இல்லையே என்று 25 வருட காலமாக ஏங்கிக் கொண்டிருக்கும் வேளையில் இங்குள்ள தமிழ்மக்களின் வேண்டுகோளுக்கிணங்க பேவர்வைக்கில் உள்ள நகரபிதாவின் அனுமதியுடன் எங்களுக்கென்று ஒரு கோவில் அமைப்பதற்கு பாவனையில் இல்லாமல் இருந்த ஒரு பாடசாலை கிடைக்கப்பெற்றது. இதையிட்டு இங்குள்ள மக்கள் பெருமகிழ்ச்சி அடைந்தோம். இங்குள்ள தமிழ்மக்களின் தாராள மனப்பான்மையால் போதியளவு நிதியுதவியும் கிடைக்கப் பெற்றது. எனினும் நிதி பற்றாக்குறை காரணமாக அயல் கிராமங்களில் உள்ள தமிழ் மக்களை அணுகினோம். அவர்களின் பங்களிப்பும் கிடைக்கப்பெற்ற காரணத்தால் மிக்குறுகிய காலத்துள் ஒரு சிவன் கோவில் அமைக்கப் பெற்று, மலர் வெளியீடும் கும்பாபிசேகமும் நடைபெறுவதையிட்டு இங்குள்ள தமிழ்மக்களும் அயல் கிராமங்களில் உள்ள தமிழ்மக்களும் பெருமகிழ்ச்சியும் மனநிறைவும் அடைந்துள்ளோம் என்பதை மனநிறைவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி. நகுலேஸ்வரி பத்மநாதன்
நிர்வாக உறுப்பினர், ஆலய பரிபாலன சபை



# பரதக்கலையும் சிவனும்



*நாட்டிய கலாஜோதி*
சிவாஜினி ஜெயகுமார்
*அதிபர்*
*சிவா நர்த்தனாலயா*

பரதநாட்டியம் தென்னிந்தியாவுக்குரிய, சிறப்பாகத் தமிழ்நாட்டுக்குரிய நடனமாகும். இது மிகத்தொன்மை வாய்ந்ததும். இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் பிரமலமானதுமாகும். புராணவியல் ரீதியாக பரதமுனிவரால் உண்டாக்கப்பட்டதாகவும் அதனாலேயே பரதம் என்ற பெயர் வந்ததாகவும் கூறுவர். அதேவேளை பரதம் என்ற சொல் . ப- பாவம். ர -ராகம். த - தாளம் என்ற மூன்றையும் குறித்து நிற்பதாகவும் சொல்லப்படுகிறது. பரதநாட்டியம் என்ற சொல்லில் இருக்கும் ''ப'' ''பாவம்'' (வெளிப்படுத்தும் தன்மை) என்ற சொல்லிருந்தும். ''ர''. ''ராகம்'' (இசை) என்ற சொல்லிருந்தும். ''த'', தாளம் (தாளம்) என்ற சொல்லிருந்தும் வந்தவையாக கருதப்படுகிறது. இதில் பாவம் உணர்ச்சியையும், ராகம் இசையையும் குறிக்கும். இவற்றுடன் தாளம் சேர்ந்த நடனம்தான் பரதநாட்டியம்.

இந்த நடனத்தை ஆடுபவர்கள் மிகப்பெரும்பான்மையோர் பெண்களேயென்றாலும், ஆண்களும் இதனை ஆடுவதுண்டு. இந்துக்களின் கடவுள்களான மும்மூர்த்திகளில் ஒருவர். சைவர்களின் முதன்மைக் கடவுளும் ஆகிய சிவபெருமான் ஆடும் நடனம் 'தாண்டவம்' என்று சொல்லப்படுகிறது. மகிழ்ச்சியின் உச்சத்தில் அவர் ஆடும் நடனம் 'ஆனந்த தாண்டவம்' என்றும், அழிக்கும் கடவுளாக அவர் ஆடும் நடனம் 'ருத்ர தாண்டவம்' என்றும் அழைக்கப்படுகிறது. நடனக்கலை நூல்களிலே எடுத்தாளப்பட்டுள்ள நடனத்தின் 108 வகைக் கரணங்களிலும் வல்லவனாக நடராஜர் சித்தரிக்கப்படுகிறார். எனினும், இவற்றுள் ஒன்பது கரணங்களுல் மட்டுமே சிவனின் நடனத் தோற்றங்கள் விபரிக்கப்பட்டுள்ளன. பரவலாகக் காணப்படும் நடராசரின் தோற்றம், ஒற்றைக் காலைத் தூக்கி நின்று ஆடும் நிலையாகும்.

பஞ்சகுண சிவமூர்த்திகளில் நடராசர் ஆனந்த மூர்த்தி என்று அறியப்பெறுகிறார்.

நடராசர் என்ற சொல்லானது நட + ராசர் என பகுந்து நடனத்துக்கு அரசன் என்ற பொருள் தருகின்றது. நடராசர், நடராஜா, நடேசன், நடராசப் பெருமான் என்றெல்லாம் அழைக்கப்படுகிறார்.

சிவபெருமானின் நடனம் தொடர்பான பெயர்களும் அவற்றின் பொருளும் வருமாறு.....

***கூத்தன்***

கூத்தன் என்றால், கூத்து எனும் ஆடல் கலையில் வல்லவன் என்று பொருள். மேலும் ஞான கூத்தன் என்றும் சிவபெருமான் வழங்கப்படுகிறார்.

***சபேசன்***

சிவபெருமானை சபேசன் என்று அழைக்கின்றார்கள். அதற்கு ''சபைகளில் ஆடும் ஈசன்'' என்று பொருள். பொற்சபை, தாமிர சபை, ரத்ன சபை, சித்ர சபை என்று ஐந்து சபைகளில் சிவபெருமான் ஆடியதாக புராணங்கள் கூறுகின்றன. இச்சபைகள் பஞ்ச சபைகள் என்று அழைக்கப்படுகின்றன.

***அம்பலத்தான்***

அம்பலம் என்ற சொல்லிற்கு திறந்தவெளி சபை என்று பொருளாகும். இந்த வகையான அம்பலத்தில் சிவபெருமான் ஆடுவதால் அம்பலத்தான் என்றும் அழைக்கப்படுகிறார். தில்லையாகிய சிதம்பரத்தில் ஆடுவதால் தில்லையம்பலத்தான் என்றும், சிதம்பரமானது பொன்னம்பலமாகியதால் பொன்னம்பலத்தான் என்றும் அழைக்கப்படுகிறார். மேலும் அம்பலத்தாடுபவன், அம்பலத்தரசன் என்றும் அழைக்கப்படுகிறார்.

சைவ ஆகமங்களிலும் சிற்பநூல்களிலும், பல்வேறு சைவ நூல்களிலும் நடராசர் தோற்றத்தின் விபரங்கள் தரப்பட்டுள்ளன. கோயில் கட்டிடச் சிற்பங்களிலும், வணக்கத்துக்குரிய சிலைகளாகவும் காணப்படும் உருவங்களும் நடராசர் தோற்றத்தை விளக்குகின்றன. ஊன்றியிருக்கும் கால், குப்புற விழுந்து கிடக்கும் முயலகன் என்ற அசுரனின் முதுகின்மீது ஊன்றப்பட்டுள்ளது. இடது கால் உடம்புக்குக் குறுக்காகத் தூக்கப்பட்ட நிலையில் உள்ளது. நான்கு கைகளைக் கொண்டுள்ள நடராசர் தோற்றத்தின் வலப்புற மேற் கையில், உடுக்கை எனப்படும் இசைக் கருவியும், இடப்புற மேற் கையில் தீச்சுவாலையும், ஏந்தியிருக்க, வலப்புறக் கீழ்க் கை அடைக்கலம் தரும் நிலையில் (அபயஹஸ்தம்) உள்ளது. இடது கீழ்க கை தும்பிக்கை நிலை (கஜஹஸ்தம்) எனப்படும் ஒருநிலையில், விரல்கள், தூக்கிய காலைச் சுட்டியபடி அமைந்துள்ளது. மயிலிறகுபோல் வடிவமைக்கப்பட்ட தலை அணி ஒன்றும், பாம்பும் இத்தோற்றத்தின் தலையில் சூடப்பட்டுள்ளது. இவற்றுடன், கங்கையும், பிறையும் சடையில் காணப்படுகின்றன. முடிக்கப்படாத சடையின் பகுதிகள் தலைக்கு இருபுறமும். கிடைநிலையில் பறந்தபடி உள்ளன. இடையில் அணிந்துள்ள ஆடையின் பகுதிகளும் காற்றில் பறக்கும் நிலையில் காணப்படுகின்றன.

**நடராச உருவத்தின் தத்துவம் பின்வருமாறு**

ஒரு வலக்கையிலுள்ள உடுக்கை படைக்கும் ஆற்றல் குறிக்கும் (கீழிருக்கும் தாமரையும் பிறப்பிற்கு வழிவகுக்குமென கூறுவர்)

ஒரு இடக்கையிலுள்ள நெருப்பு அழிக்கும் ஆற்றலை குறிக்கும்.

இன்னொரு வலக்கையின் உட்புறத்தை காட்டுவது அருளும் அற்றலை குறிக்கும்.

இன்னொரு இடக்கை துதிக்கை போல் உட்புறத்தினை மறைத்தவாறு இருப்பது மறைக்கும் ஆற்றலை குறிக்கும்.

தூக்கிய பாதமும் ஆணவத்தை மிதித்தாடும் இன்னொரு பாதமும் மனமாயை உட்பட தீயசக்திளிலிந்து காக்கும் ஆற்றலை குறிக்கும்.

2004ஆம் ஆண்டு இந்திய அரசால் ஜெனிவாவில் உள்ள CERN(European Center for Research in Particle Physics) ஆய்வகத்திற்கு ஆறு அடி உயரம் கொண்ட நடராசர் சிலை அன்பளிப்பாக வழங்கப்பட்டது. நடராசர் நடன கோலத்தில் காட்சி தரும் இச்சிலை அந்த ஆய்வகத்திற்கு இந்தியாவுடன் இருந்த பல்லாண்டு கால தொடர்பை சுட்டிக்காட்டும் பொருட்டு வழங்கப்பட்டது. உலகத்தின் ஆக்கத்திற்கும், அழிவிற்கும் காரணமாக கருதப்படும் இந்த பிரபஞ்ச நடனத்திற்கும், நவீன இயற்பியலுக்கும் உள்ள தொடர்புகளை சுட்டிக்காட்டும் விதமாக முனைவர் ஃபிரிட்ஜாஃப் காப்ரா (Fritijof Capoa) விளக்கியுள்ள சிறப்பு வாய்ந்த வரிகளும் அதில் உள்ள கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளன.

"Hundreds of years ago, Indian artists created visual images of dancing shivas in a beautiful series of bronzes. In our time, physicists have used the most advanced technology to portray the patterns of the cosmic dance. The metaphor of the cosmic dance thus unifies ancient mythology, religious art and modern physics."

அதாவது, ''நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு முன்பே இந்திய கலைஞர்கள் சிவபெருமானின் நடன கோலத்தை வெண்கலத்தில் வடித்துள்ளனர் நம்முடைய காலத்தில் இயற்பியல் வல்லுனர்கள் மிக நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி இந்த பிரபஞ்ச நடனத்தினை வருணித்துள்ளோம். இந்த பிரபஞ்ச நடனத்தின் உருவணி மெய்ஞானத்தையும், அறிவியலையும் ஒன்றிணைக்கிறது''. என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.



உ

## ஓம் அருணாச்சல திருத்தலம்

சல மிலன் சங்கரன் சார்ந்த வர்க்கலால்
நல மிக நாள்தோறும் நல்குவான் நலன்
குலமிக ராகினும் குலத்திற் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சிவாயவே

திருத்தலம், திருத்தலம், திருத்தலம்
அருணாச்சல திருத்தலம்,
நெதர்லாந் வாழ் தமிழ் மக்களின் - திருத்தலம்
அமுதக்கடல் ஈசனவன் ஆதிசிவன் ஆனவன்

சிவலோகம் வாழ்பவன் கொன்றை மாலை அணிந்தவன்
சடையினிலே கங்கை யாளைச் சுமந்தவன்
முடியினிலும் கழுத்தினிலும்
நாக பாம்பை அணிந்தவன்

சூலம் தன்னை ஏந்தியே சூழ்ச்சி யாவும் அழிப்பவன்
நேரில் வந்த மக்களின் துன்பங்கள் தீர்ப்பவன்
அருணாச்சல திருத்தலம்,
திருத்தலம் திருத்தலம் அருணாச்சல திருத்தலம்

அம்மை அப்பனாய் இருந்து
ஆசி வழங்குவான், ஆசி வழங்குவான்
அவன் தாழ் பணிந்து சரணம்
சரணம் என்று பாடுவோம்
அவன் தாழ் பணிந்து சரணம்
சரணம் என்று பாடுவோம்

நன்றி
திருமதி. தம்பு - நாகேஸ்வரி



உ

# அருணாச்சலேஸ்வரரே அருள்தாரீர்

திங்களைத் தலையில் தாங்கி திசைதிசையெங்கும் நிறைந்து
திருமகள் உலாவரவே பேவர்வைக் மாநகரினிலே
மங்கையைப் பாகம் கொண்டு மக்களிற் அருளும் செய்ய
மாசில்லா வள்ளல் அருணாச்சலேஸ்வரப் பெருமான்
கங்கையை தலையில் தாங்கி கருணை கொண்டாதரித்ததுபோ
கதிர் ஒளிவீச கணங்கள் சூழ சங்கரனாக எழுந்தருளி
பொங்கிவரும் எழிலோடு புதுகுடமுழக்கு காணும் வேளை
போற்றி என் ஆன்மாவும் வணங்கி அருள்பெற அருள்தாரீர்

அரிதான காட்சிநலம் அலைமோதும் கடல்நீலம்
அழகுமிளிர் கொழிக்கும் நெதர்லாந்தின் கண்ணே
விரிஜோதி வேத ஆகமத்தின் வித்துவரும் விளங்காத தத்துவரும்
பரிவார மூர்த்திகளோடு பார்வதியும் உடனுறைய
திரிசூலம் திருசடையுமோடு காட்சிதரும் அருணாச்சலேஸ்வரரை
பரிவுடனே பற்றிநானும் பாதம் தனில் பணிந்து நிற்பேன்
கரிசனையோடு நினைக் காணவரும் பக்தர்களிளை அருள்வதுபோல்
கடைக்கண் திறந்து கடும்துயர்கள் நீக்கி அருள் தாரீர்

வருவோரும் போவோரும் வணங்கி நிதம் துதிக்கவல்ல
வரம்யாவும் அருளவந்த வள்ளலாக வீற்றிருந்து
திருக்கோலத் தருளம்மை உண்ணாமுலை உமையாளுடன்
திருவருளை வணங்கவல்ல அருணாச்சலேஸ்வரப் பெருமானே
அருவுருவத் திருமேனியராகி புதுக்குடமுக்காடி அருள்சுரந்து
மும்மலங்கள் அறுத்து ஆன்மாவில் இருள்மயக்கம் நீக்கி
பிறந்த இப்பெருவாழ்வின் உண்மைப் பொருள் உணர்த்து
மாயப்பிறப்பறுத்து பேரானந்தம் பெற்றுவிட அருள்தாரீர்

திருமதி விமலா தேவி சிவநேசன்
''ஆசிரியர்'' ''சொல்லின் செல்வம்''







# பூமி பூஜை













# சங்காபிஷேகம் திருக்கல்யாணப் படங்கள்











# கும்பாபிஷேக படங்கள்


































நிர்வாக உறுப்பினர்கள்

திரு. இலட்சுமணன் வடிவேல், திரு. பிஹேமகுமார் – நல்லையா, திரு. சசி, திரு. கலாநிதி,
திரு. பிரபா, திரு. கனகரட்ணம் மகிந்தன், திரு. செல்வராஜா
திருமதி. நகுலேஸ்வரி பத்மநாதன், திருமதி. கலாமதி கந்தையா மகிந்தன், திருமதி. லலிதாராணி பார்த்திபன்
திருமதி. கமலாதேவி வடிவேல்

# நன்றி நவில்கிறோம்

எமது ஸ்ரீ அருணாச்சலேஸ்வரர் ஆலயத்தின் மீது பக்திகொண்டு எமக்கு சகலவழிகளிலும் பலர் உதவி செய்துள்ளார்கள். அவர்களுக்கு நாங்கள் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

இந்த ஆலயம் ஆரம்பிப்பதற்கு மூலகர்த்தாவாக இருந்து சகல அனுமதிகளையும் நெதர்லாந்து அரசிடமிருந்து பெற்றுத்தந்த திருமதி ம.கலாமதி அவர்கள் பாராட்டுக்குரியவர். .அவர்களுக்கு முதற் கண் நன்றி செலுத்துகிறோம்.

கோயில் அமைப்பதற்கு முதல்கல் நாட்டுவதற்கு பலர் வந்து உதவி செய்துள்ளார்கள். அவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சிற்பத்தோடு கூடிய எமது சித்திர சிவாலயம் சிறப்புற அமைத்த சிற்பக்கலாமணி ஸ்தபதி ச. ஜெயகாந்தன் அவர்கள் (ஜனா சிற்பக் கலைக்கூடம் இங்கிலாந்து) மிகவும் அழகானமுறையில் அமைத்துக்கொடுத்துள்ளார். அவருடைய இந்தக் கைவண்ணம் எமது ஆலயத்தை இன்னுமொருபடி மேலோங்கச் செய்துள்ளது. அவருக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எமது ஆலயத்தின் உட்புறமும் வெளிப்புறமும் வர்ணம் தீட்டி கண்கொள்ளாக் காட்சியாக மிளிரச்செய்த ராஜ்குமார் அவர்கள் பாராட்டுக்குரியவர். அவருடைய இக் கைவண்ணத்திற்கு எமது நன்றிகள்.

ஆலயத்தின் தேவைகருதி குறித்த இடத்தில் அளவிற்கேற்ப கட்டிடத்தை நிர்மாணித்த சிற்பி திரு.செல்வம் அவர்களுக்கும் எமது நன்றி.

ஓயாது பாடுபட்டு மிகத்துரிதமாக கட்டுவேலைகளும் இதரவேலைகளும் முடிப்பதற்கு உதவிய இ.வடிவேல் அவர்கள் இங்கு பெருமைக்குரியவர் ஆவார். அவருக்கு உதவியாக இருந்து தினமும் ஒத்துழைப்பபு வழங்கிய திரு. பரராஜசிங்கம், மற்றும் நிர்வாக உறுப்பினர்கள். அனைவருக்கும் இந்த நேரத்தில் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆலயத்தின் சன்னிதிகளான விநாயகர், முருகன், அம்மன், நவக்கிரகம், வைரவர், நாகதம்பிரான், சண்டேஸ்வரர், வசந்தமண்டபம், கொடித்தம்பம் ஆகியவற்றிற்கான செலவுகளை தனியாகவும் கூட்டாகவும் செய்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அத்துடன் விக்கிரகங்கள் வாங்குவதற்கு பலர் உதவி செய்துள்ளார்கள். அவர்களுக்கும் எமது நன்றிகள்.

எமக்கு பணத்தட்டுப்பாடு ஏற்பட்ட வேளை இலண்டனில் அமைந்துள்ள சைவ முன்னேற்றச் சங்கம் எமக்கு உதவிசெய்துள்ளார்கள். அவர்களுடைய இந்த உதவி அளப்பரியது. அவர்களுக்கும் நன்றி.

எமது ஆலயகட்டுமானப்பணிக்கு தேவையான பணத்தை திரட்டுவதற்கு தனியாகவும் கூட்டாகவும் பலர் உதவிசெய்துள்ளார்கள். அவர்களுக்கும் நன்றி.

ஆலய கும்பாபிசேகம் சிறப்புற அமையக்காரணமாக இருந்த ஆலயக்குருமார்களுக்கும் எமது நன்றிகள்.

விழாக்காலங்களிலும் விசேடநாட்களிலும் எமக்கு உணவுகள் நைவேத்தியப் பொருட்கள் வழங்கிய அனைவருக்கும் எமது நிர்வாகத்துடன் சேர்ந்து நின்று உதவிய நிர்வாக உதவிக் குழுவினருக்கும் எமது தேவைகருதி மேடை பந்தல் அமைத்துக் கொடுத்தவர்களுக்கும் எமது நன்றிகள்.

தேவைகருதி குறிப்பிட்ட நேரத்தில் பலர் அச்சுப்பிரதிகளையும் செய்துள்ளனர். அத்துடன் கும்பாபிஷேக மலர் சிறப்புற அமைய இலவசமாக அச்சிட்டுத் தந்துதவிய சைவ நீதி நூல் பதிப்பாசிரியர் மதிப்பிற்குரிய திருவாளர். நா. சிவானந்தசோதி அவர்களுக்கும் சிவனருளால் மேலும் அவரது நற்பணி தொடர எமது வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி


அருணாச்சலேஸ்வரர் ஆலய பரிபாலன சபை

Beverwijk, Nederland

# AMIRTAA

AMIRTAA

## 'நல்ல சோறு'







## இப்பொழுது விற்பனையில்...

R. Pathmanaba Iyer
27-B, High Street,
Plaistow
London E13 0AD

